629

NEW METHOD
TAMIL READER

629

FOR STANDARD VII

(*Prepared according to the Elementary School Syllabus 1939*)

BY

VIDWAN - PANDIT N. KANAKARAJA IYER, B.O.L.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1942
MADRAS

T.G.GOPAUL PILLAI
TEPPAKULAM ★ TRICHINOPOLY

PRICE
As. 9

புதுமுறைத் தமிழ் வாசகம்

ஏழாம் வகுப்பிற்கு உரியது

[1939-ல் வெளியிடப்பட்டுள்ள ஆரம்ப பாடசாலைகளின் பாடதிட்டத்தை அனுசரித்து எழுதப்பட்டுள்ளது.]

494.81186

ஆசிரியர் :
வித்வான் - பண்டித, N. கனகராஜையர், B.O.L.
தமிழாசிரியர், மஹாராஜா கலாசாலை, புதுக்கோட்டை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1942
MADRAS

T. G. கோபால் பிள்ளை
தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை] 1941 [விலை அணா 9

P31/9

First Edition 1941

966

முகவுரை

புதுமுறைத் தமிழ் வாசகம் என்னும் பெயர் கொண்டு வெளிவரும் இந்நூல் வரிசை, **ஆறு, ஏழு, எட்டாம் வகுப்புகளுக்கு** 1939-ஆம் வருஷத்தில் சென்னை கல்வித் துரைத்தனத்தார் வெளியிட்டுள்ள **புதிய பாட திட்டப்படி** தயாரிக்கப் பெற்றது. அப்பாட திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குறிப்பும் இதன்கண் இடம் பெற்றுள்ளது.

இக்காலத்து மாணவர்கள் தம்மளவில் உலகச் செய்திகளை அறிதற்கு வேண்டும் அளவு பிழையின்றிப் பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய தமிழ் அறிவையும் பொது அறிவையும் பெறச் செய்தலே இந்நூல் வரிசையின் நோக்கமாகும்.

பாட திட்டத்தில் கண்டுள்ளபடியே ஒவ்வொரு பாடத்திலும் போதிய **அரும்பத விளக்கம், பயிற்சி, இலக்கணம்** முதலியன தரப்பெற்றுள்ளன. கதை, விஞ்ஞானம், பயிர்த்தொழில், கைத்தொழில், சுகாதாரம், சரித்திரம், சம்பாஷணை, நாடகம் முதலிய பலவகைப் பாடங்கள் ஒவ்வொரு புத்தகத்திலும் எழுதப்பட்டுள்ளன. வகுப்புக்கு ஏற்றவாறு நடை உயர்த்தப் பெற்றுள்ளது. **மௌன வாசிப்பின்** அவசியம் கதைப் பாடங்கள், வரலாற்றுப் பாடங்கள் மூலம் வற்புறுத்தப் பட்டுள்ளது. பலவகைக் **கடிதங்கள், அழைப்பு இதழ்கள் எழுது**தல் முதலியனவும் வகுப்புக்கு ஏற்றவாறு தரப்பெற்றுள்ளன. பலவகைக் **கட்டுரைகள்** எழுதுதற்கு மாதிரிக் கட்டுரைகள் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. **கட்டுரைப் பயிற்சி** பாடந்தோறும் வற்புறுத்தப் பெறுகின்றது. அந்தந்த வகுப்புக்கு ஏற்ற முறையில் **இலக்கண பாடங்கள்** எளிய முறையில் தரப்பெற்றுள்ளன.

இப்புத்தகங்களில் உள்ள **செய்யுட் பாடம்** (1) நீதிப்பகுதி (2) கதைப்பகுதி, (3) பலவகைப் பகுதி என முத்துறைகளைச் சுவையுறப் பெற்றுள்ளது நோக்கத் தக்கது. இங்கும் **அரும்பதவுரை, கேள்விகள்** ஆகியவை தரப்பெற்றுள்ளன.

சுருங்கக் கூறின், இப் புதுமுறைத் தமிழ் வாசகம் இக்கால மாணவர்களுக்குத் தமிழ்ச் சுவையும் உலக அறிவும் ஊட்டும் எனத் துணிந்து கூறலாம். இதனை அறிஞர் உலகம் வரவேற்கும் என்னுந் துணிபுடையேன்.

1—9—1941,
மஹாராஜா கல்லூரி,
புதுக்கோட்டை.

N. கனகராஜையர்.

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
1.	சேரன் செங்குட்டுவன்	... 1
2.	எனது உல்லாஸப் பிரயாணம் (மேட்டூர் அணைக்கட்டு)	8
3.	ஐக்கிய நாணயச் சங்கம்	... 13
4.	மாணவரும் பத்திரிகைப் படிப்பும்	... 18
5.	செல்வம் (பாட்டு)	... 23
6.	கிராமச் சீர்திருத்தம்	... 26
7.	திருவிதாங்கூர்	... 31
8.	கடிதம் எழுதுதல்	... 40
9.	முத்து	... 55
10.	வறுமை (பாட்டு)	... 60
11.	சந்தன மரம்	... 65
12.	உடற் பயிற்சி	... 72
13.	பெஞ்சமின் பிராங்க்லின்	... 81
14.	கடற் சிங்கமும் சீல் மீனும்	... 88
15.	புத்தர் அருட்செயல்கள்	... 97
16.	கட்டுரை எழுதுதல்	... 103
17.	பிரபுல்ல சந்திர ராய்	... 110
18.	தேனீயும் தேனும்	... 117
19.	ஆகாய விமானம்	... 126
20.	வாசுகி அம்மையார் (நாடகம்)	... 135
	செய்யுள் பாடம் :	
I.	நீதிச் செய்யுட்கள்	... 141
II.	கதைச் செய்யுட்கள்	... 151
III.	பலவகை செய்யுட்கள்	... 155

புதுமுறைத் தமிழ் வாசகம்

1. சேரன் செங்குட்டுவன்

தமிழ் நாட்டில் அரசு தாங்கிய மூவகை முடிமன்னருள், இந்நாளில் மலையாள மொழி வழங்கும் கேரள நாட்டில் வாழ்ந் தவர் சேர மன்னராவர். இம்மன்னர் சேரலர், சேரர், கேரளர், வானவரம்பர் முதலிய பல பெயர்களை உடையவராய் இருந்த னர். சேர குலத்து முடிமன்னருள் மிக்க புகழ் படைத்த வீரர் பலரும் புலவர் பலரும் இருந்தனர்.

தமிழ்ப் பெருங்காவியங்களில் ஒன்றாகிய **சிலப்பதிகாரம்** இயற்றிய **இளங்கோ அடிகள்** சேர குலத்துப் புலவர் ஆவர். இப் புலவருக்குத் தமையன் ஒருவன் இருந்தான். இவன் **சேரன் செங்குட்டுவன்** என்ற பெயர் பூண்டிருந்தான். இவன், புலமை யால் தனது தம்பியார் பெற்ற புகழிற் சிறிதேனும் குறை படாத போர்ப்புகழைப் பெற்றிருந்தான். இவனது வர லாற்றை அறிய உதவி புரியும் தமிழ்ச் செய்யுட்கள் பல உண்டு. அவற்றின் துணைகொண்டு இமயம்முதல் குமரிவரை அர சாண்ட இம்மன்னன் வரலாற்றைச் சுருக்கமாய் அறிய முயல் வோம்:

சேர குலத்தில் மிக்க புகழ் படைத்த இமய வரம்பன் **நெடுஞ்சேரலாதன்** என்ற மன்னன் ஒருவன் இருந்தான். அவன் சோழன் மகள் **நற்சோணை** என்பாளை மணந்து, இரண்டு மக்

களைப் பெற்ருன். அவருள் மூத்தவன் செங்குட்டுவன்; தம்பி இளங்கோ. இந்த இளங்கோவே பின்னாளில் இளங்கோ வடிகள் ஆகிச் சிலப்பதிகாரம் இயற்றினர்.

நெடுஞ்சேரலாதன் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக அரசு செலுத்தினுன்; முதுமைப் பருவத்தில் ஒரு சோழனேடு போர் புரிந்து போர்க்களத்தில் இறந்தான். அவனுக்குப் பிறகு செங்குட்டுவன் அரசு தாங்கினுன். செங்குட்டுவன் முடிதாங்கு முன்பு ஒருநாள் நெடுஞ்சேரலாதன் தன் இரு மக்களையும் அருகில் அமர்த்தி அரியாசனத்தில் இருந்தான். அப்பொழுது அங்கு வந்த ஒரு சோதிடன் மக்கள் இருவர் இலக்கணங்களையும் கூர்ந்துநோக்கி, "இளங்கோவே பேரரசனுக விளங்குவான்" என்று கூறினன். அது கேட்டுச் செங்குட்டுவன் மனம் வருந்திக் கண் சிவந்தான். குணக் குன்ருகிய இளங்கோ, அப்பொழுதே தந்தையும் தமையனும் கேட்க, "இனி யான் அரச வுரிமைக்கு ஆசை கொள்வதில்லை. இப் பொழுதே துறவு பூண்பேன்" என்று கூறிக் குணவாயிற் கோட்டம் என்ற புண்ணியத் தலத்துக்குப் போனுர். இவ் வுண்மையை இளங்கோவடிகளே சிலப்பதிகாரத்தில் விளக்கி இருக்கிருர்.

செங்குட்டுவன் வேளிர் குலத்துப் பிறந்த ஒரு பெண் மணியை மணம் புரிந்தான். அப்பெண் **குட்டுவஞ் சேரல்** என்ற மகனைப் பெற்ருள். செங்குட்டுவன் ஐம்பதாண்டுகள் அரசு வீற்றிருந்தவன்.

இம்மன்னன் நிகழ்த்திய போர்கள் பலவாம்: இளம் பருவத்தில் தனது தாய் இறந்ததும், அவள் பொருட்டு ஒரு **பத்தினிக்கல்** அமைக்க நினைத்தான்; இமயமலையில் கல் எடுத்துக் கங்கையாற்றில் நீராட்டி வரவேண்டுமென்று தன் வலிமைக்கு ஏற்ப முடிவு செய்தான். கங்கைக் கரையில் இருந்த ஆரிய அரசர் பலர், 'தென்னுட்டான் இவ்வளவும தூர வருவது நமக்குக்

குறைவன்றே!' என்று எண்ணி எதிர்த்துப் போராடினர். செங்குட்டுவன் அம்மன்னரை எல்லாம் வென்று தான் நினைத்த காரியத்தை நிறைவேற்றினன். கற்பொழுக்கம் சிறந்து கணவன் இறந்த அளவில் தம் உயிரை விடும் பெண்மணிகளுக்குப் பத்தினிக்கல் அமைத்து வழிபடுவது அந்நாளில் நம் நாட்டின் வழக்கம். போர்க்களத்தில் தன் கணவன் இறந்தது கேட்டதும் அந்நொடியிலே ஒரு முயற்சியும் இன்றித் தன்னுயிரை விட்ட நற்சோணை என்ற அரசிக்கு இச்சிறப்பு உரியதாகும் என்று செங்குட்டுவன் நினைத்தது பொருத்தமேயாம்.

செங்குட்டுவன் பல மரக்கலங்களை அமைத்துக் கடற்போரும் புரிந்து அரசர் பலரை வென்றான்; தன் நட்பரசன் ஒருவன் பொருட்டாகப் பாண்டிய நாட்டு மோகூரில் வாழ்ந்த **பழையன்** என்ற பெரு வீரனோடு போர்புரிந்து வெற்றி பெற்றான். இம்மன்னன் தான் புரிந்த போர்களில் எல்லாம் வெற்றியும் புகழுமே பெற்றான் என அறிகிறோம்.

செங்குட்டுவன் காலத்தில் மதுரை நகரில் அரசனாய் இருந்தவன் **நெடுஞ்செழியன்** என்ற பாண்டியன் ஆவன். இப்பாண்டியன் கோவலனைத் தீர விசாரியாமற் கொலை செய்வித்துக் **கண்ணகி** வழக்காடியதும் சிங்காதனத்தில் உயிரை இழந்தான். மதுரையைத் தீக்கிரையாக்கிப் பாண்டிய குலத்தை அழித்து வெளிவந்த கண்ணகி சேரநாட்டுக்கு வந்து, 'செங்குன்று' என்ற மலையின்மேல் ஏறி நின்று, அங்கு வந்த வேடருக்குத் தன் தெய்வத் தன்மையை விளக்கினாள்.

செங்குட்டுவன் பெரியாற்றங்கரையில் தங்கியிருந்தான். செங்குன்றிலே கண்ணகி தேவருலகம் சென்ற காட்சியைக் கண்ட வேடர், தம் மன்னனைக் கண்டு, தாம் கண்ட காட்சியை விளக்கிக் கூறினர். அப்பொழுது செங்குட்டுவன் அருகில் இருந்த மதுரைக் கூல வாணிகன் **சாத்தனார்** என்ற புலவர்

"அப்பெண்ணின் வரலாற்றை நான் அறிவேன்" என்று, மதுரையில் நிகழ்ந்த வரலாற்றைக் கூறினர். இளங்கோவடிகளும் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

செங்குட்டுவன் தன் அருகில் இருந்த அரசியை நோக்கி, "பெண்ணே, தன் கணவன் உயிர் போனது அறிந்து, அரசன் முன் வந்து வழக்காடி அவனைக் கொன்று, நகரத்தை எரித்த கண்ணகியோ, தன் தலைவன் இறந்தது அறிந்ததும் உயிர்விட்ட கோப்பெருந்தேவியோ, எவள் சிறந்த கற்பரசி?" என்று கேட்டான். அரசி, "பாண்டி மாதேவி தன் கற்பின் பெருமையால் சுவர்க்க பதவி பெற்றாள். நம் தேசத்து வந்த பத்தினித் தெய்வத்துக்கு நாம் ஆலயம் அமைப்போம்," என்று தந்திரமாய் விடை கூறினாள்.

செங்குட்டுவன் மனமகிழ்ந்து, "கண்ணகி என்ற பத்தினித் தெய்வத்துக்கு ஆலயம் அமைக்கும் பொருட்டு இமயத்தில் கல் எடுத்துக் கங்கையில் ஆட்டி வருவோம்" என்றான். அமைச்சரும் போர்த்தலைவனும், "அதுவே தகும்; அதுவே தகும்;" என்று கூறினர். பின்பு செங்குட்டுவன் தன் பரிவாரங்களோடு வஞ்சிமா நகருக்கு வந்தான். அந்நாளில் வட நாட்டிலிருந்து வந்த மாதவ முனிவர் சிலர், "ஆரிய அரசர் ஒரு சுயம்வரத்தின் பொருட்டுக் கூடியிருந்த ஓரிடத்தில்," 'தமிழ் நாட்டரசர் முற்காலங்களில் நம் நாட்டுக்கு வந்து அரசர்களை வென்று இமயமலையில் **மீன், புலி, வில்** முதலிய குறிகளைப் பொறித்ததாகக் கூறுவது நம்மைப் போன்ற அரசர் இல்லாதிருந்த காரணத்தால் இருக்குமோ?' என்று பேசிக்கொண்டனர். நாங்கள் அதனைக் கேட்டிருந்தோம்," என்று கூறினார்கள். இச் சொல்லைக் கேட்ட செங்குட்டுவன், பத்தினித் தெய்வத் திருப்பணியின் பொருட்டுக் கல் எடுத்து வர வட நாடு போக இதுவே காரணமாயிற்று என்று துணிந்து, நன்னாள் ஒன்று பார்த்துப் பெரும் படையோடு புறப்பட்டான்; வடநாடு சேர்ந்து,

கங்கைக் கரையிலே ஒன்று கூடி எதிர்த்த ஆரியவரசர் பலரையும் வென்று, கனகவிசயர் என்ற இரு மன்னர் தலைமேல் பத்தினித் தெய்வத்துக்கு உரிய சிலையை ஏற்றித் தென்னாடு கொண்டுவந்துவஞ்சி நகரில் பெரிய கோவில் அமைத்துப் பிரதிட்டை செய்து விழா நடத்தினான். அவ்விழாக் காலத்தில் அங்கு வந்த கண்ணகியின் செவிலித்தாயும் தோழியர் இருவரும் பத்தினித் தெய்வத்தின் தெய்வ வுருவத்தைக் கண்டனர். செங்குட்டுவனும் அத்தெய்வ வுருவம் கண்டு அருள்மொழியும் கேட்டான். அங்கு வேறு பல தெய்விகச் செயல்களும் நிகழ்ந்தன. செங்குட்டுவன், கண்ணகியின் பார்ப்பனத் தோழியாய் இருந்த தேவந்தி என்ற பெண்ணைக் கண்ணகித் தெய்வத்தின் கோயிலில் பூசை செய்ய நியமித்தான்.

செங்குட்டுவன் தன் போர்த் திறமையால் தமிழகம் முழுவதும் அடக்கி ஆண்டதே யன்றி, வடநாட்டிலும் பல மன்னரை வென்று புகழொடு வாழ்ந்தான் என்பது இவ்வரலாறுகளால் விளங்குகிறது. பின்னாளில் இவன் அறிவுடையோர் கூறிய அறநூற் பொருள் கேட்டுப் போர்க்கிளர்ச்சியில் வீழ்ந்த மனத்தை நல்வழியிற் செலுத்தி, இறைவன் திருவருள் பெற்றான் என்பது சரித்திரத்தால் அறியப்படுகிறது.

1. அரும்பத விளக்கம்

புலமை - கல்வி அறிவு; கோட்டம் - கோவில் (மடம்); மீன் - பாண்டியன் அடையாளக் குறி; புலி - சோழன் அடையாளக் குறி; வில் - சேரன் அடையாளக் குறி.

2. கேள்விகள்

1. சேரர்க்குரிய பெயர்கள் எவை?
2. செங்குட்டுவன் யாவன்? இளங்கோ யார்?
3. இளங்கோ, 'அடிகள்' எனப்பட்டதேன்?
4. செங்குட்டுவன் செய்த போர்கள் எவை?

5. பழையன்—குறிப்பு எழுது.
6. கண்ணகி வரலாற்றைச் செங்குட்டுவன் எப்படி அறிந்தான்?
7. சேரன் கண்ணகிக்குக் கோவில் கட்டத் துணிந்ததேன்?
8. மாதவ முனிவர் சேரனிடம் யாது கூறினர்?
9. சேரன் கண்ணகி விழாவை எங்ஙனம் கொண்டாடினன்?
10. நீ இப்பாடத்தால் அறியும் செங்குட்டுவன் குணநலங்கள் யாவை?

3. இலக்கணம்

1. **தமிழ் இலக்கணம்**—இது பிழையின்றிப் பேசவும், எழுதவும், படிக்கவும் பேருதவி செய்வது. இதன் உதவியின்றித் தமிழ் மொழியில் தேர்ச்சி பெறுதல் இயலாது.

2. **தமிழ் எழுத்துகள்**—(1) உயிர் எழுத்துகள் 12; (2) மெய் எழுத்துகள் 18; (3) உயிர்மெய் எழுத்துகள் (12 × 18) 216; (4) ஆய்த எழுத்து 1. ஆக மொத்தம் **247**.

3. **குறில், நெடில்**—(1) பன்னிரண்டு உயிர்களில் அ, இ, உ, எ, ஒ—இந்த ஐந்தும் குறுகிய ஓசை உடையவை (குறில்); (2) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ—இந்த ஏழும் நீண்ட ஓசை உடையவை (நெடில்).

4. **வல்லினம், மெல்லினம், இடையினம்**—(1) க், ச், ட், த், ப், ற்—இந்த ஆறும் வலிந்த ஓசை உடைய எழுத்துகள் (**வல்லினம்**). (2) ங், ஞ், ண், ந், ம், ன்—இந்த ஆறும் மெலிந்த ஓசை உடையவை (**மெல்லினம்**). (3) ய், ர், ல், வ், ழ், ள்—இந்த ஆறும் இடைப்பட்ட ஓசையுடையவை (**இடையினம்**).

5. **உயிர்மெய் 216**—உயிர் 12, மெய் 18; ஒவ்வோர் உயிரும் 18 மெய்யோடும் சேர, (12 × 18) 216 உயிர்மெய் உண்டாகின்றன. க = க் + அ.

6. **ஆய்த எழுத்து**—அஃது, இஃது—மூன்று புள்ளி வடிவமாக இருப்பது. இது சொல்லின் இடையிலேயே வரும்.

குறிப்பு :—இவையும் பிறவும் (சுட்டு - வினாவும்) நீங்கள் முன்னரே அறிந்தவை. இவற்றை நினைவிற்கொண்டு மேல்வரும் இலக்கணப் பகுதிகளைக் கற்கவும்.

பயிற்சி

1. இப்பாடத்தை மௌனமாகப்படி; பிரிவுகட்குத் தலைப்புக் கொடு.
2. செங்குட்டுவன் வரலாற்றை 24 வரிகளில் கட்டுரையாக எழுது.
3. செங்குட்டுவன் பிறப்பு—போர்ச்செயல்கள்—கண்ணகி விழா—குணாதிசயங்கள்: இக்குறிப்புகள் கொண்டு இப்பாடப் பொருளை நான்கு பிரிவுகள் கொண்ட ஒரு கட்டுரையாக எழுது.
4. முதல் பிரிவில் உள்ள வாக்கியங்கள் எத்தனை ?
5. அதில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறு.
6. இரண்டாம் பிரிவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் கூறு.
7. மூன்றும் பிரிவில் உள்ள வேற்றுமை உருபுகளைச் சொல்லு.
8. நான்காம் பிரிவில் உள்ள வினைமுற்றுகளை வினையால் அணையும் பெயர்களாக மாற்று.
9. ஐந்தாம் பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்ச்சொற்களைக் கூறு.
10. வரலாற்றை, பட்டாபிடேகம், குணக்குன்று, ஐம்பதாண்டு —பிரித்துக் காட்டு.

2. எனது உல்லாஸப் பிரயாணம்

(மேட்டூர் அணைக்கட்டு)

சென்னை,
15—6—1941.

இந்த ஆண்டு ஜூன் மாதம் நான் என் வகுப்பு மாணவருடனும் ஆசிரியருடனும் சென்னையை விட்டு மேட்டூரைக் கண்டு மகிழச் சென்றேன். புகைவண்டிப் பிரயாணம் இன்பமாகவே இருந்தது. மேட்டூர் அணைக்கட்டு இருக்கும் இடத்தில் உண்டிச்சாலையும் தங்குவிடுதியும் இருக்கின்றன. நாங்கள் அங்குத் தங்கி உணவு கொண்டோம்; பிறகு அணைக் கட்டைச் சுமார் மூன்று மணி நேரம் சுற்றிப் பார்த்தோம். அது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. எங்கள் ஆசிரியர், 'அணைக்கட்டின் அவசியம், காவிரியின் அணைக்கட்டுகள், மேட்டூர் அணைக்கட்டின் அவசியம், அதன் வரலாறு, அதன் நன்மை' இவற்றை விளக்கமாக உரைத்தார். அவர் கூறிய தன் சுருக்கத்தை நான் உங்கட்குக் கூறுகிறேன். பிழை இருந்தால் தயவுசெய்து திருத்துங்கள்.

மலையிற் பெய்யும் மழை நீரின் பெருக்கமே ஆறுகத் தோற்றம் எடுக்கிறது என்பதை அனைவரும் அறிவர். அம் மழை நீர் ஓடுமளவும் ஓடி இறுதியிற் கடலில் கலக்கின்றது. அது கடலிற் கலப்பதால் பயன் என்னை? ஒன்றும் இல்லை. மேலும் வருடம் முழுவதும் ஆற்றில் தண்ணீர்வருவதும் இல்லை. அங்ஙனம் ஆண்டு முழுவதும் தண்ணீர் வருமாயின், வயல் கட்குத் தண்ணீர்க் குறை இராது. பல மாதங்கள் ஆறு வறண்டு இருப்பதால் பல இடங்களில் வயல் விளைச்சல் பாதிக்கப்படுகிறது. ஆதலின், ஆற்றில் வெள்ளம் வரும் போது, தக்க இடத்தில் அணை கட்டி அந்நீரைத் தேக்கி வைத்தால், நீர் இல்லாத போது, அத்தேக்கத்து நீரை வயல்

களுக்குப் பயன்படுத்தலாம். இந்நோக்கம் கொண்டே அணைக் கட்டுகள் கட்டப்படுகின்றன.

காவிரியாறு குடகுமலைப் பிரதேசத்தில் தோற்றமாகிச் சுமார் 500 மைல் தூரம் ஓடி வங்கக் கடலில் கலக்கிறது. ஆனி முதல் புரட்டாசி வரை விடா மழை பெய்வதால், காவிரி நீர் பெருக்கெடுத்து ஓடும். வழியில் பல சிற்றாறுகளும் இத் துடன் கலக்கின்றன. ஆயினும், பிற மாதங்களில் நீர் வற்றி விடுகிறது. இந்த ஆறு திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே இரண்டாகப் பிரிந்து 'கொள்ளிடம்' என்றும் 'காவிரி' என்றும் ஓடுகின்றது. கொள்ளிடத்தில் 'மேல் அணைக்கட்டு' **(Upper Anicut)** என்னும் பெயரால் ஓர் அணைக்கட்டு 1836-ல் கட்டப்பட்டது. வெள்ளப் பெருக்கால் கரைகள் உடைந்து நாசமாதலையும் மழையில்லாக் காலங்களில் ஆற்று நீரைத் தேக்கி வயல்களுக்கு விடவுமே இவ்வணைக்கட்டுக் கட் டப் பட்டது. ஆயினும், இஃது எதிர்பார்த்த அளவு பயன் தராததால், 1845-ல் திருச்சிக்குக் கிழக்கே சுமார் 10மைல்தூரத் தில் காவிரியின் குறுக்கே ஓர் அணைக்கட்டுக் கட்டப்பட்டது. இக் காவிரி யாற்றுக்கே மைசூரில் 'கண்ணம் பாடி' என்னும் இடத்தில் பெரியதோர் அணைக்கட்டும் உண்டு. சமீபகாலத்தில் கட்டப்பட்ட அணைக்கட்டே 'மேட்டூர் அணைக்கட்டு' என்பது.

மேட்டூர் என்பது சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்கள் கலக்கும் இடத்தில் உள்ளது. அங்கு இயல்பாக உள்ள மலைத்தொடரை உதவியாகக் கொண்டு பெரிய தேக்கம் உண் டாக்கப்பட்டுள்ளது. அணையில் மூன்று வித மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன. அணையின் உயரம் கடல் மட்டத் திற்கு மேல் 790 அடி இருக்கிறது. அதனால் மூன்றும் மதகு கடல் மட்டத்திற்கு 770 அடி உயரத்தில் அமைக்கப்பட் டுள்ளது. இம் மதகால் காவிரியில் வரும் அதிகமான நீர்ப் பெருக்கம் வெளிப்பட்டு வழிந்துவிடும். 720 அடி உயரத்தில்

இரண்டாம் மதகு வரிசை உள்ளது. தண்ணீர் மட்டம் 770 அடிக்குக் குறைந்து 720-க்கு மேல் இருந்தால், இக்கதவுகள் திறக்கப்படும். அதனால் தண்ணீர் விளைநிலங்கட்குத் தாராள மாகப் பாயும். நீர் மட்டம் 720 அடிக்குக் குறையுமாயின், 690 அடி உயரத்தில் உள்ள மூன்றும் வரிசை மதகுகள் திறக்கப் படும். அவற்றிலிருந்து வெளிப்படும் நீர் வயல்கட்குச் சென்று



மேட்டூர் அணைக்கட்டு

பாயும். உலக அணைக்கட்டுகளில் இது முதல்தரமானது. இது மிகுந்த அளவு தண்ணீரைத் தேக்க வல்லது; பத்து லக்ஷம் கன அடி நீரைத் தேக்கத்தக்கது. இவ்வணைக் கட்டைக் கட்டி முடிக்கச் சுமார் $4\frac{3}{4}$ கோடி ரூபாய் செலவாயிற்று. எங்கும் பயன்படுத்தப்படாத புதிய இயந்திரங்கள் இது கட்டி முடிப்ப தற்காக வரவழைக்கப்பட்டன. இவ்வணைக்கட்டின் நீரோட் டத்தால் மின்சாரஉற்பத்தி செய்யப்படுகிறது. மேற்கூறப்பட்ட மதகுகள் அனைத்தும் மின்சாரத்தின் சக்தியால் வேலை செய்

கின்றன. இவ்வணை கட்டி முடிய ஆறு ஆண்டுகள் ஆயின. ஆயிரக் கணக்கான வேலையாட்கள் நியமிக்கப்பட்டனர். பல வேலைக் கூடங்கள் ஏற்பட்டன. இப்பொழுதும் மேட்டூரில் அணைக்கட்டுச் சம்பந்தமாகப் பல உயர்தர உத்தியோகஸ்தரும் வேலைக்காரரும் இருக்கின்றனர். ஆதலின், மேட்டூர் ஓர் அழகிய சிறு நகரமாக மாறியுள்ளது.

நீரால் மானம் பார்த்த நிலப்பிரதேசங்கள் இப்பொழுது இவ் வணைக்கட்டினால் பொன் கொழிக்கும் பூமிகளாக மாறி வருகின்றன. தஞ்சாவூர், சேலம், கோயமுத்தூர் முதலிய ஜில்லாக்களில் உள்ள பாழாய்க் கிடந்த நிலங்கள் இன்று விளைநிலங்களாகக் கண் குளிரக் காட்சி அளிக்கின்றன. இங்கு மின்சார உற்பத்தி செய்தல் வெற்றி பெறுமாயின், மேட்டூரில் தொழிற்சாலைகள் அமைதல் திண்ணம்.

மனிதன் பார்க்கத் தகும் இடங்களில் மேட்டூர் அணைக் கட்டு ஒன்றாகும். அதனைப் பார்க்கும் ஒருவனுக்கு அறிவும் ஆராய்ச்சியும் அளிக்கவல்ல அற்புதச் சக்தி நன்கு புலனாகும்.

1. அரும்பத விளக்கம்

சுமார்-ஏறக்குறைய, இறுதி - கடைசி, திண்ணம் - நிச்சயம்.

2. கேள்விகள்

1. அணைக்கட்டின் அவசியம் என்ன ?
2. காவிரியாற்றில் எத்தனை அணைக்கட்டுகள் இருக்கின்றன ?
3. மேட்டூர் அணைக்கட்டின் அவசியம் யாது ?
4. அதன் வரலாறு என்ன ?
5. அதனால் உண்டாகியுள்ள நன்மை யாது ?
6. அதைப் பார்ப்பவர் உணர்வது யாது ?

3. இலக்கணம்

1. **மாத்திரை :**—இயல்பாகக் கண் இமைத்தற்கு அல்லது கைந்நொடித்தற்கு உண்டாகும் கால அளவையே (நேரமே) மாத்திரை என்பது.

(1) குறிலுக்கு மாத்திரை ஒன்று.
(2) நெடிலுக்கு மாத்திரை இரண்டு.
(3) ஆய்தத்திற்கு மாத்திரை அரை.
(4) குற்றியல் உகரத்திற்கு மாத்திரை அரை.

2. **குற்றியல் உகரம் :—உ** - இது ஒரு மாத்திரை ஓசை உடையது; ஆனால், சில இடங்களில் இது அரை மாத்திரை (ஓசை குறைந்து) ஒலிக்கும். அப்போது இது **குற்றியல்** (குறைந்து ஒலிக்கும்) உகரம் எனப்படும். இது சொல்லின் கடைசியில் வல்லின மெய்களின்மேல் வரும்; தனிக் குறிலை அடுத்து வராது.

(உ-ம்.) **ஆடு, அசடு, அஃது, பற்று, கன்று, வீழ்து.**

பயிற்சி

1. இப் பாடத்தைப் படி; ஒவ்வொரு பிரிவிற்கும் தகுந்த தலைப்புக் கொடு.
2. இதனைச் சுருக்கிக் கட்டுரையாக எழுது.
3. அணைக்கட்டுகளின் அவசியம், மேட்டூர் அணைக்கட்டின் தேவை, அதன் வரலாறு, அதன் நன்மை; இக் குறிப்புகள் கொண்டு இப்பாடப் பொருளை 4 பாராக்களில் கட்டுரை யாக எழுது.
4. கடுகு, பழுது, பழையது, கங்கு, பஃது, போழ்து, புற்று.- இவற்றில் குற்றியல் உகரம் இன்னது எனச் சுட்டு.
5. முதல் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் கூறு.
6. இரண்டாம் பிரிவில் உள்ள வினைமுற்றுகட்கு இடை நிலையும் காலமும் கூறு.
7. மூன்றாம் பிரிவில் உள்ள செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றா வினைகளைக் கூறு.
8. நான்காம் பிரிவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைச் சொல்லு.
9. கண்ணன் கடிதம் எழுதினான்.- சொல் இலக்கணம் கூறு.

3. ஐக்கிய நாணயச் சங்கம்

ஐக்கிய நாணயச் சங்கம் பத்தொன்பதாம் நூற்றுண்டுப் புதுமைகளுள் ஒன்று. இதனைத் தோற்றுவித்தவர் **'ரெய்ப்பீசன்'** என்னும் ஜெர்மானியர் ஆவர். அவர் இதனை ஒரு சிறிய கிராமத்தில் ஏற்படுத்தினர். ஆனால் இன்று இஃது உலகெலாம் பரவி மக்கட்குச் சிறந்த தொண்டாற்றுகிறது. இதன் கொள்கைகள் மிகவும் உயர்ந்தவை. அவற்றைக் கவனித்த அரசாங்கத்தார் 1904-ல் இச் சங்கத்தைச் சட்ட மூலம் ஏற்படுத்தினர். அன்றுமுதல் இச் சங்கம் இந்தியாவில் வளர்ச்சியுற்று, இன்று இலக்ஷத்துக்கு மேற்பட்ட சங்கங்களை உடையதாக விளங்குகின்றது.

விவசாயிகள், தொழிலாளர், போன்ற குறைந்த வருமானம் உள்ளவர்கள் சிக்கனம், கூட்டுறவு, சுயவுதவி, ஒற்றுமை ஆகியவற்றைப் பெருக்கி விவசாயம், கைத்தொழில் இவற்றை வளர்க்கப் பணம் கடனுகக் கொடுத்து உதவுவதே இச்சங்கத்தின் நோக்கம் ஆகும்.

இச்சங்கத்தை ஏற்படுத்திக்கொள்ள விரும்பும் கிராம வாசிகள் ஒன்று கூடி, விண்ணப்பம் ஒன்றை எழுதி அனைவரும் கையெழுத்து இட்டுக் கூட்டுறவுச் சங்க அதிகாரிகட்கு அறிவித்தல் வேண்டும். அதன் மீது அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவர் அக் கிராமத்துக்குச் சென்று, சங்கத்தால் கிராம வாசிகட்கு உண்டாகும் நன்மைகளையும் அவர்கள் சங்கத்தைப் பலப்படுத்த வேண்டும் முறைகளையும் நன்கு தெரிவிப்பார். அதனைக் கேட்டும் கிராமத்தார் தமக்குள் நன்கு யோசித்துத் தங்கள் விருப்பத்தைத் தெரிவிப்பர். உடனே அக்கிராமத்தில் ஐக்கிய நாணயச் சங்கம் ஏற்படுத்தப்படும்.

பத்து அங்கத்தினர்க்குக் குறையாமல் சங்கத்தில் இருத்தல் வேண்டும். சங்கத்தில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட

ஆடவர் பெண்டிர் அனைவரும் சேரலாம். ஜாதி வேறுபாடுகளோ, உயர்வு தாழ்வுகளோ சங்கத்தில் தோன்றுதல் இல்லை. உறுப்பினர்க்கு இருக்க வேண்டுவன நாணயமும், நன்னடக்கையுமே ஆகும். எல்லா உறுப்பினர்க்கும் சங்கத்தில் சம வுரிமை உண்டு. ஆண்டுக்கு ஒரு முறை இவ்வுறுப்பினர் நற்குணப் பெரியவர்கள் ஐவரைத் தமக்குள்ளேயே தேர்ந்தெடுத்துப் 'பஞ்சாயத்தார்' ஆக்குவர். அவர்கள் தமக்குள் ஒருவரைச் செயலாளராகவும், ஒருவரைத் தலைவராகவும் தேர்ந்தெடுப்பர். பஞ்சாயத்தார் ஆண்டுக்கு ஒரு முறை சங்கத்தின் வரவு செலவுக் கணக்கை உறுப்பினர் அனைவர்க்கும் படித்துக் காட்டுவர்.

இங்ஙனம் வேலை செய்யும் பதினைந்து சங்கங்கள் சேர்ந்தது ஒரு 'யூனியன்' ஆகும். யூனியனில் இணைக்கப்பட்ட சங்கங்களை மேற்பார்க்க அதிகாரிகள் உண்டு. சங்கங்களை மேற்பார்ப்பதே **யூனியன்** வேலையாகும். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் 'மத்திய பாங்கு' ஒன்று உண்டு. அது அந்த ஜில்லாவில் உள்ள சங்கங்கட்கு வேண்டும்போது பணம் உதவி செய்யும். யூனியன்களை மேற்பார்வை பார்க்க **ஜில்லா பெடரேஷன்** உண்டு. மாகாணப் பெடரேஷன்களைப் பார்வையிட **'மாகாண யூனியன்'** உண்டு. இவை அனைத்துக்கும் மேலாக இந்தியாவிற்கே **'ஐக்கிய கமிட்டி'** என்பதொன்று உண்டு.

மாகாணச் சங்கங்களைப் பார்வையிட 'ரிஜிஸ்ட்ரார்' என்பவர் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டுள்ளார். ஒரு ஜில்லாவுக்கு அல்லது இரண்டு ஜில்லாக்களுக்கு ஒரு 'உதவி ரிஜிஸ்ட்ரார்' உண்டு. சங்கங்களை மேற்பார்வையிட (இன்ஸ்பெக்டர்கள்) பலர் உண்டு. இவ்வதிகாரிகள் ஒவ்வொரு சங்க வேலைகளையும் பார்வையிடுவர்.

ஒவ்வோர் உறுப்பினரும் சங்கத்தில் பணங்கொடுத்து ஒரு பங்காவது எடுத்துத் தீர வேண்டும். ஒரு பங்கு 'இத்தனை

ரூபாய்' என்று சங்கத்துக்குத் தக்கபடி வேறுபடும். சங்க உறுப்பினர்க்குச் சிக்கனம் கற்பிக்கப் பலவித 'டெபாசிட்டுகள்' (Fixed and Recurring Deposits) ஏற்படுத்தியுள்ளனர். அவரவர் செயலுக்குத் தகும் அளவு பணத்தை அச்சேம வைப்பு களில் போட்டு வரலாம். சங்கத்தில் கடன் குறைந்த வட்டிக்கே தரப்படுகிறது. விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலிய பிழைப்புக்குரிய காரியங்கட்கும் திருமணம் முதலிய அவசிய மான நிகழ்ச்சிகட்குமே கடன் தரப்படும். கடன் வாங்கினவர் குறித்த காலத்திற்குள் கடனைத் தீர்த்துவிட வற்புறுத்தப் படுவர். மார்வாடிகளிடம் கடன் வாங்கி அதிக வட்டி கொடுத்து அல்லற்படும் மக்கட்கு இவ்வைக்கிய நாணயச் சங்கங்கள் பேருதவி புரிவன அன்றோ?

இத்தகைய சங்கங்களால் அயர்லண்ட், ஹாலண்ட், டென்மார்க் முதலிய சிறிய நாடுகள் தங்கள் கைத்தொழில், விவசாயம், வியாபாரம் இவற்றைப் பெருக்கி முன்னேற்ற முற்று வருகின்றன. இயல்பாகவே வறுமையுற்றுள்ள இந் நாட்டார் இச்சங்கப் பயனை நன்குணர்ந்து நாணயமாக நடப் பின், நன்னிலையை அடையலாம்.

1. அரும்பத விளக்கம்

ஐக்கியம் - ஒற்றுமை, நாணயம் - சொன்னவாறு நடத்தல், சங்கம் - கூட்டம், (இயக்கம்), பஞ்சாயத்தார் - ஐந்து உறுப்பினர் கொண்ட சபையினர், செயலாளர் - காரியதரிசி..

2. கேள்விகள்

1. ரெய்பீசன் என்பவர் யார்? அவர் செய்த அருஞ்செயல் யாது?
2. ஐக்கிய நாணயச் சங்கத்தின் நோக்கம் என்ன?
3. இதனைக் கிராமத்தில் ஏற்படுத்துவது எப்படி?
4. உறுப்பினர்க்கு உரிய நிபந்தனைகள் யாவை?
5. சங்கத்தை நடத்தும் முறை யாது? •

6. கிராமச் சங்கத்திற்கு மேற்பட்ட நிலையங்கள் எவை ?
7. ஐக்கிய நாணயச் சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் யாவர்?
8. சங்கத்தால் உண்டாகும் நன்மைகள் யாவை ?
9. இச்சங்கத்தால் மேன்மை பெற்ற நாடுகள் எவை ?

3. இலக்கணம்

ஒன்றன் பெயரே பெயர்ச்சொல். பெயர்ச்சொற்கள் பல வகைப் படும். அவை ஆறும் வகுப்புப் பாட புத்தகத்திலேயே கூறப்பெற் றுள்ளன. இங்கு, மேலும் சில காண்க:

1. **காரணப் பெயர்**—ஒரு காரணம் பற்றி இடப்பட்ட பெயர்.
   நாற்காலி, உடை, வளையல், அணி.

2. **இடுகுறிப் பெயர்**—காரணம் விளங்காத பெயர்.
   மரம், கல், வண்டு, பொன், நீர்.

3. **பொதுப் பெயர்**—பொதுவாக ஒன்றைக் குறிக்கும் பெயர்.
   விலங்கு, ஆடவர், பெண்கள்.

4. **சிறப்புப் பெயர்**—சிறப்பாக ஒன்றைக் குறிக்கும் பெயர்.
   கழுதை, முருகன், வள்ளி.

5. **காரண இடுகுறிப் பெயர்**—காற்றாடி. இது காற்றில் பறப்பது என்னும் காரணம் பற்றியது. ஆனால், இது இடுகுறி யளவாய் நின்று பட்டத்தையே குறிப்பதால், காரண இடுகுறிப் பெயர் ஆகும்.

6. **அளவைப் பெயர்கள் :—**

(1)	கால், அரை, ஒன்று	—எண்ணல்	அளவைப் பெயர்.
(2)	பலம், வீசை, பாரம்	—எடுத்தல்	,, ,,
(3)	படி, மரக்கால், கலம்	—முகத்தல்	,, ,,
(4)	மைல், பர்லாங், அடி	—நீட்டல்	,, ,,

பயிற்சி

1. பாடப் பிரிவுகட்குப் பொருத்தமான தலைப்புக் கொடு.
2. முதல் பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்ச் சொற்களைக் கூறு.

3. அதில் உள்ள அளவை, பொது, சிறப்பு, இடுகுறி, காரணப் பெயர்களைச் சொல்லு.

4. மீது, பெருக்கு, வீழ்து, ஏறு, ஏடு—குற்றியல் உகரத்தைக் காட்டு.

5. இரண்டாம் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறு.

6. அதில் உள்ள வினைமுற்றுகளின் காலம் கூறு.

7. நோக்கம், கிராமம், தலைவர், காலை, நன்மை, தலை, மாமன், மரம், பலா, முக்கண்ணன், கால், படி, மைல், பலம்—என்ன பெயர்ச் சொற்கள் ?

8. தலைவராக, அணியழகு, கண்ணுழம், தீயவி, வலையெடு, காலாழி, கணையாழி—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறு.

9. தக்க இடங்களில் ஏற்ற நிறுத்துக் குறிகளை இடு :—

(1) அவன் ஏன் வந்தான்
(2) இவன் எங்குப் போனான்
(3) அடடா அவன் வீழ்ந்தானே
(4) ஐயோ அவன் நல்லவன் நன்கு படித்தவன் நல்லவர் வீட்டுப் பிள்ளை

10. வந்தான், படித்தாள், போகிறார்கள், ஆடிற்று, பாடின—செயப்படுபொருள் குன்றாவினை, குன்றியவினைகளைக் கூறு,

11. இணைக்கப்பட்ட, சங்க அதிகாரி, விவசாயம், கடனுகை, தக்கபடி, மேற்பார்வை—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் படி,

12. கோடிட்ட இடங்களில் வினைமுற்றுகளை இடு :—

(1) நான் ——— . (2) நாங்கள் ——— . (3) நீ ——— .
(4) நீங்கள் ——— . (5) அவன் ——— . (6) அவள் ——— .
(7) அவர்கள் ——— . (8) எலி ——— . (9) பன்றிகள் ——— .

4. மாணவரும் பத்திரிகைப் படிப்பும்

பத்திரிகைகள் மிகுதியாக வாசிக்கப்படும் நாடே அறிவு மிகுந்த நாடு என்று சொல்லப்படும். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இட்டாலி, ரஷியா, ஜப்பான் முதலிய நாடுகளில் நூற்றுக்கணக்கான பத்திரிகைகள் வெளியாகின்றன. அவற்றைப் படிக்க அன்றாடம் இலக்ஷக்கணக்கான மக்கள் ஆவலோடு காத்திருக்கின்றனர்.

நமது நாட்டிலும் ஓரளவு பத்திரிகைகள் வளர்ந்து வருகின்றன. நமது தமிழ் நாட்டில் தமிழில் வெளியாகும் பத்திரிகைகள் இன்னவை என்பதை நாம் அறிந்திருத்தல் வேண்டும்: (1) சுதேசமித்திரன், தினமணி, பாரத தேவி, தாருல் இஸ்லாம் முதலியன தமிழ்த் **தினசரிப் பத்திரிகைகள்** ஆகும். (2) ஆனந்தவிகடன், சைபுல் இஸ்லாம், திரு இருதய தூதன், சுதேசமித்திரன், தமிழ் மணி, ஹனுமான், இந்துஸ்தான், குமரன், சினிமா உலகம் முதலியன **வாரப் பத்திரிகைகள்** ஆகும். (3) **சாதிச்** சம்பந்தமான கருணீக மித்திரன், யாதவ மித்திரன், தனவைசிய மித்திரன், செங்குந்த மித்திரன் முதலியனவும்; சித்தாந்தம், தாருல் இஸ்லாம், திரு இருதய தூதன் முதலிய **சமயத்**தாள்களும்; **பொதுப்**பத்திரிகைகளான ஆனந்தபோதினி, திருவிளக்கு, கலைமகள் என்பனவும்; **இலக்கியப்** பத்திரிகைகளான செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, சித்தாந்தம், தமிழ்ப் பொழில், தமிழ்க் கலை முதலியனவும் மாதப் பத்திரிகைகளாகும். இவை அன்றி வியாபார சம்பந்தமானவையும், பிறவும் தமிழில் வெளிவரும் பத்திரிகைகளாகும்.

நாட் பத்திரிகைகள் உலக நிகழ்ச்சிகளை அன்றாடம் வெளியிடுவன ஆகும். அவற்றில் அரசியல், சமூகம், கைத்தொழில், வியாபாரம், விஞ்ஞானம், இலக்கணம், இலக்கியம், கதைகள்,

புனே கதைகள், வருணனை, விகடம், சிற்பம், ஓவியம், ஆராய்ச்சி முதலிய பல பொருள்கள் சம்பந்தமான செய்திகள் வெளியாகின்றன. முன்னேற்ற நாடுகளில் நடைபெறும் பல அரிய செய்திகளைப் பத்திரிகை வாயிலாகக் காணும் பிற நாட்டார், தாமும் அவ்வத்துறையில் பயின்று முன்னேறுதற்குப் பத்திரிகைகள் பேருதவி புரிகின்றன. நாம் நம் ஆயுட்காலத்தில் காண இயலாத தூர தேசங்களில் உள்ள மக்களைப் பற்றியும், அவர்தம் நடைமுறைகளைப் பற்றியும் அறிந்துகொள்ள அருந்துணை புரிவன பத்திரிகைகளே. ஆயிரக் கணக்கான மைல்கட்கு அப்பால் நடைபெறும் கொடிய போர்ச் செயல்களை அன்றாடம் நமக்கு அறிவிப்பனவும் பத்திரிகைகளே ஆகும்.

இந்தியப் பெருமக்களாகிய விவேகானந்தர், காந்தி அடிகள், சர் சி. வி. இராமன், சர் ஜகதீச சந்திர போஸ், சர் எம். விசுவேசுவரையா, டாக்டர் பி. சி. ரே போன்றுரை அவர்தம் குணதிசயங்களோடும் தொண்டுகளோடும் பிறவற்ரேடும் உலகத்தாருக்கு அறிமுகப் படுத்தியவை பத்திரிகைகளே அல்லவா? அங்ஙனமே மேனுட்டுப் பெருமக்கள் வரலாறுகளையும் ஆராய்ச்சிகளையும் அன்றாடம் நமக்கு அறிவித்து அறிவை விளங்கச் செய்வன பத்திரிகைகளே ஆகும். அன்றாடம் பொன், வெள்ளி முதலிய உலோக விலை விவரங்களும், கோதுமை, பருத்தி, சணல் முதலியவற்றின் விலை விவரங்களும், பிறவற்றின் விலை விவரங்களும் அன்றாடப் பத்திரிகைகளில் வருகின்றன. அமெரிக்கா முதலிய மேனுட்டு விலைவாசிகளை அன்றாடம் உணர்ந்து நம் நாட்டு வியாபாரிகள் விலைவாசிகளை நிர்ணயிக்கிறார்கள். வியாபாரத்திற்கு உயிர் நாடியாக இருப்பவை பத்திரிகைகளே ஆகும். மாகாணக் கவர்னர் முதல் சாதாரண மனிதர்வரை செய்யும் தகுதியுள்ள சொற்பொழிவுகள் பத்திரிகைகளில் வெளிவரும். நூல் நிலையம், விஞ்ஞான சாஸ்திரம், உடற் பயிற்சி, கூட்டுறவு இயக்கம்,

விவசாயம், கைத்தொழில், கிராம முன்னேற்றம் முதலிய பல பொருள் பற்றிய சொற்பொழிவுகளும், கட்டுரைகளும் பத்திரிகைகளில் வெளிவரும். மாணவர்க்குரிய சிறு கதைகள், சரித்திர சம்பந்தமான இடங்களைப் பற்றிய குறிப்புகள் முதலியனவும் பத்திரிகைகளில் வெளிவரும். சுருங்கக் கூறின், 'உலக ஞானத்தைப் பெறப் பத்திரிகைகளைவிடச் சிறந்த சாதனம் வேருென்றும் இல்லை' என்று நிச்சயமாகக் கூறலாம்.

இங்ஙனம் மனிதனை அறிஞனுகச் செய்யும் தன்மை வாய்ந்துள்ள பத்திரிகைகளை மாணவர் நாள்தோறும் படித்தல் நன்று; குறிப்புப் புத்தகம் ஒன்றை வைத்துக்கொண்டு தேதியிட்டுப் பயன் தரும் செய்திகளைப் பத்திரிகைகளிலிருந்து பொறுக்கிக் குறித்துக்கொள்வது நல்லது. அவற்றைக் கட்டுரை வரையும் போதும் சொற்பொழிவு ஆற்றும்போதும் பயன்படுத்தல் மிக்க நன்மையைத் தரும். பத்திரிகைச் செய்திகளால் மாணவர் அன்ருட உலக நடவடிக்கைகளை அறிந்து, பூரண உலக ஞானம் பெற்றவர் ஆகின்றனர். ஆதலின், மாணவர் எக்காரியம் எக்கேடு கெடினும் சரி, பத்திரிகை வாசித்தல் என்பதை உணவுக்கு அடுத்தபடி முக்கியமானதாகக் கருதி நாளும் பத்திரிகை வாசித்துப் பயன் பெறல் வேண்டும்.

பத்திரிகைகளை வாங்கிப் படிக்க வசதி அற்றவர் நகராண்மைக் கழகத்தார் ஆதரவில் நடைபெறும் இலவச வாசக சாலைக்குச் சென்ருவது படித்துப் பயன் பெறுதல் வேண்டும். அங்குப் பலவகைப் பத்திரிகைகள் வரும். மாணவர் அவற்றைப் பயன்படுத்தி மேனிலையை அடைய முற்படுதலே அறிவுடைமையாகும்.

1. அரும்பத விளக்கம்

கருணீகர் - கணக்கர், யாதவர் - இடையர். செங்குந்தர்-கைத்தறி நெசவாளர் வகுப்பினர், இலக்கிய - தமிழ் நூல்களை அடிப்படையாகக் கொண்ட, செந்தமிழ் - இது மதுரைத் தமிழ்ச் சங்கத்

தார் நடத்தும் மாதத் தாள், **செந்தமிழ்ச் செல்வி** - சைவ சித்தாந்த கழகத்தார் சென்னையில் நடத்துவது, **தமிழ்ப் பொழில்**-இது தஞ்சாவூரில் உள்ள கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிடுவது. **தமிழ்க் கலை** - காஞ்சிபுரத்திலிருந்து வெளிவரும் இதழ்.

2. கேள்விகள்

1. அறிவுள்ள நாடு—எது?
2. தமிழ்நாட்டுத் தினசரித் தாள்கள் எவை? வாரத் தாள்கள் எவை? மாதத் தாள்கள் எவை?
3. சாதித் தாள்கள் எவை? சமயத் தாள்கள் எவை?
4. இலக்கியத் தாள்கள் எவை? அவை எங்கெங்கு வெளியாகின்றன?
5. இவற்றால் நாம் அடையத்தகும் பயன் என்ன?
6. மாணவர் பத்திரிகைப் படிப்பால் எங்ஙனம் பயன் பெறலாம்?
7. ஏழை மாணவர் என்ன செய்தல் வேண்டும்?
8. நீ இப்பாடத்தால் அறிவது யாது?

3. இலக்கணம்

1. **தொழிற்பெயர்** :—தொழிலை உணர்த்தும் பெயர்.

(உ-ம்.) போதல், போக்கு, பார்வை, நோக்கம், வற்றல்.

தொழிற்பெயர் விகுதிகள்— தல், அல், அம், ஐ, கை, வை, பு, கு, சி, தி, உள், வி, காடு, பாடு, மதி, து, மை.

(உ-ம்.) படித்தல், செல்லல், கூட்டம், விலை, செய்கை, பார்வை, நடப்பு, போக்கு, காட்சி, மறதி, விக்குள், கல்வி, சாக்காடு, ஏற்பாடு, ஏற்றுமதி, நடப்பது, நடந்தமை.

2. **வினையால் அணையும் பெயர்**—(வினையால் அணைந்த பெயர்)

(1) பாடினான்—வினைமுற்று.

(2) பாடினான் வந்தான்—வினையால் அணையும் பெயர்.

(3) பாடுதல்—தொழிற்பெயர்.

பயிற்சி

1. சென்ருன், போதல், தூங்குதல், பார்வை, வற்றல், கண்டேன், வந்தவன்—இவற்றுள் ஒவ்வொன்றுக்கும் மற்ற இரண்டு பெயர்களையும் கூறு.

மாதிரி:—சென்ருன் —வினைமுற்று.

சென்ருனை —வினையால் அணையும் பெயர்.

செல்லல் —தொழிற் பெயர்.

இங்ஙனமே ஒவ்வொன்றுக்கும் கூறு.

2. பாடத்தின் முதல் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறு.

3. அதில் உள்ள தொழிற் பெயர், பொது—சிறப்புப் பெயர்களைக் கூறு.

4. வெளியாகின்றன, வெளியிட்டனர், சென்ருர், படிப்பார், கற்றனள், உண்டான், பார்ப்பாள்—முக்கால இடைநிலைகளைக் கூறு.

5. ஆகின்றன, வந்தான், படிக்கிருள், வருவார்—எதிர்மறை கூறு.

6. மேற்சொன்னவற்றுள் செயப்படுபொருள் குன்ருவினைகள் எவை? செயப்படுபொருள்குன்றிய வினைகள் எவை?

7. இரண்டாம் பிரிவில் உள்ள ஐம்பால் பெயர்களைக் கூறு.

8. பகல், ஆதி, மேலே, துன்பம்—எதிர்ப்பதம் கூறு.

9. இலக்கியம், அரசியல், உயிர் நாடியாக, முன்னேற்றம், சம்பந்தமான—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

10. முன்+ஏற்றம், பனை+பழம், கோ+இல், காந்தி+அடிகள், தே+ஆரம், பால்+அழகு.—சேர்த்துப் புணர்ச்சி இலக்கணம் கூறு.

11. மூன்ரும் பிரிவில் உள்ள வேற்றுமை உருபுகளை எழுது.

12. 'பத்திரிகை வாசித்தல்' என்பதுபற்றி 24 வரிகளில் ஒரு கட்டுரை எழுது.

13. அடியில் வரும் வாக்கியங்களுக்குப் பெயர்ப் பயனிலைகள் கொடு:—

(1) நாம் படிக்கும் பள்ளிக்கூடத்தின் பெயர் ——.

(2) கணவனைத் தெய்வமாக வழிபட்ட கற்பரசி ——.

(3) பல ஜீவநதிகளுக்குப் பிறப்பிடம் ——.

14. பின்வரும் வாக்கியங்களுக்கு வினைப்பயனிலைகள் கொடு:—

(1) சில உடற்பயிற்சிகள் உடம்பிலுள்ள சில உறுப்புக் களுக்கே பயிற்சியை ——.

(2) சிலர் சோம்பலால் உடற்பயிற்சி செய்வது ——.

(3) மாணவர்கள் குறித்த நேரத்தில் பள்ளிக்குச் செல்ல ——.

15. கீழ் வருவனவற்றிற்கு வினாப் பயனிலைகள் கொடு:—

(1) இங்கு வந்தவன் ——.

(2) நீ கடையில் வாங்கிய பொருள்—

(3) சென்னை இராஜதானியில் ஜனத்தொகை மிகுந்த நகரம் ——.

---

5. செல்வம்

(பாட்டு)

உலகில் வாழ்வோர், உறவினர் நண்பர்
அயலவர் பகைவர் அடைவுடன் மதிக்கத்
தகுந்த பெருமையைத் தருவது **செல்வமே.**
எளியவர் எனவே எதிருற வருமவர்க்
கீயவும் மனத்தினுக் கின்பந் தந்து
புகழை நல்கும் தகையது செல்வமே;
உழவுக் குரிமை உதவுவ ததுவே;
வித்தும் ஏரும் வேண்டுமோ ருழவன்
பொருளிலன் ஆயிற் புரிவ தியாதே?

வணிகத் தொழிலினில் மனங்கொளும் அவனும்
பல்வகைப் பண்டமும் பகர்ந்து இதுசொலப்
பெரும்பொருட் குவியல் பெறவிரும் புவனே.
கண்ணிலன் காதிலன் கையிலன் வாயிலன்
எவ்வகை வினையும் இயற்றற் குரிய
அறிவு மில்லான் ஆயினும் மனிதன்
பொருளால் அன்றே பொருந்துவன் யாவும்!
காணற் குரிய காட்சிகள் காணவும்
கேட்டற் குரிய கேள்விகள் கேட்கவும்
உண்ணற் குரிய உணவினை உண்ணவும்
உடுத்தற் குரிய உடைகளை உடுக்கவும்
பூணற் குரிய பொன்னணி பூணவும்
ஆற்றலைத் தருவ தரும்பொருள் அன்றோ?
மண்ணினைக் கல்லினை வலியப் பிளந்து
மன்னர் முடிமேல் வயங்கத் தக்க
நவமணிக் குவையை நல்குவ தியாதே?
செல்வஞ் சிறந்தான் சிறப்பெலாம் அடைதல்போல்
நாடுகள் தம்முள் நலமெலாங் கொழிக்கும்
வாழ்வும் பெருமையும் வாய்த்திட வேண்டுமேல்,
துறைபல புகுந்து நிறைவுறு பொருளைத்
தேடுத லன்றோ செய்யத் தக்கது!
உழவால் தொழிலால் உயர்வா ணிகத்தால்
பெரும்பொருள் தேடி அரும்புகழ் பூண்ட
நாட்டார் அன்றோ நாகரி கத்தால்
உயர்ந்தோ ராகி உலகினில் ஓங்குவர்;
வல்லர செனுமோர் மதிப்பும் பெறுவர்;
செல்வஞ் செழியாச் சிறுமையால் அன்றோ
நாடுகள் உரிமையும் நலமும் இழப்பன!
ஆதலின், எவரும் அறிவொடு புகழொடு

நலமொடு வாழ்வுற நல்குநற் பொருளினை
உயிரொடு வாழுநாள் ஓவா துழைத்துத்
தேடுதல் வேண்டும்; 'தேடாத ழிப்பவர்
பெரும்பா டடைவர்; பெருமை இழப்பர்,'
எனமுன் நூல்களும் இயல்புற மொழிந்தன.
தேடுக பொருளைத் தேடுக புகழை
நாடுக நலத்தை நன்குவா ழியவே!

1. அரும்பத விளக்கம்

அயலவர் - பக்கத்தார், அடைவுடன் - சேர்ந்து, புரிவது - செய்வது, பொருந்துவன் - அடைவான், ஆற்றல் - வசதி, வயங்க - விளங்க, கொடுக்கும் - தரும்.

2. கேள்விகள்

1. பெருமை தருவது செல்வமே—எத்தகைய பெருமையை ?
2. உழவன், வணிகன்—பொருள் விரும்புவதேன் ?
3. என்னென்ன ஆற்றலைத் தருவது செல்வம் ?
4. 'செய்யத் தக்கது'—யாது ? எதற்காக ?
5. எவர் உலகில் ஓங்குவர் ? எவர் தாழ்வர் ?
6. நாம் வாழ்வுற யாது செய்தல் வேண்டும் ?
7. முன்னூல்கள் மொழிந்தன—எதனை ?
8. நீ இப்பாடத்தால் அறிவது யாது ?

3. இலக்கணம்

1. அநுவயம் (Prose Order):—செய்யுட்களில் பெரும்பாலும் சொற்கள் இடம் மாறி வருவதுண்டு. அச்சொற்களைப் பொருளுக்கு ஏற்பக் கூட்டிக் கூறுவதே அநுவயம் எனப்படும்.

(உ-ம்.) "பச்சை இளம்புல் செழித்து வளர்ந்ததோர்
பழைய காட்டிலே
இச்சையுடன் நண்பு பூண்டொரு காக்கை
இருந்தது மானுடனே."

அநுவயம்:—பச்சை இளம்புல் செழித்து வளர்ந்ததோர் பழைய காட்டினிலே ஒரு காக்கை மானுடனே இச்சையுடன் நண்பு பூண்டு இருந்தது.

பயிற்சி

1. இப்பாட்டின் பொருளை 20 வரிகளில் எழுது.
2. 'செல்வத்தின் அவசியம்' என்பது பற்றி 15 வரி எழுது.
3. இப்பாட்டில் உள்ள வினையால் அணையும் பெயர்களைச் சொல்லு.
4. இச்செய்யுளில் உள்ள வினைமுற்றுகளைக் கூறு.
5. இதில் உள்ள வினை, பெயர், வினைப் பயனிலைகளைச் சொல்லு.
6. இதில் இருக்கும் அறுவகைப் பெயர்ச்சொற்களைக் கூறு.
7. இதில் இருக்கும் அளவை, படர்க்கை, சாதி, பொது, சிறப்புப் பெயர்களைக் குறிப்பிடு.
8. வணிகன் மூட்டையை விற்றான்.—சொல் இலக்கணம் கூறு.
9. உதவுவது, பூட்டு, கதறு, பூசு, அஃது.—குற்றியல் உகரத்தைச் சுட்டிக் காட்டு.
10. இதில் உள்ள தொழிற் பெயர்களைச் சொல்லு.
11. இதில் இருக்கும் ஐம்பால் பெயர்களைக் கூறு.
12. இதில் உள்ள காரணப் பெயர்களைத் தெரிவி.

---

6. கிராமச் சீர்திருத்தம்

ஒரு நாட்டிற்கு உயிர்நாடியாக இருப்பவை கிராமங்களே ஆகும். கிராமங்களில் வசிப்பவர் பெரும்பாலும் பயிர்த் தொழில் செய்பவராகவே இருப்பர். விவசாய நாடே முன்னேற்றம் பெற்றுள்ள நாடாகும். நமது நாட்டில் பயிர்த் தொழிலாளர் எண்ணிக்கையே அதிகம். கிராமங்களே பல. இந்தியாவில் சுமார் ஐந்து லக்ஷம் கிராமங்கள் இருக்கின்றன.

அவற்றில் வசிப்பவர் தொகை ஏறக்குறைய இருபத்தெட்டுக் கோடியாகும். இவ்விருபத்தெட்டுக் கோடி மக்களில் பெரும் பாலர் விவசாயிகளே ஆவர். இவர்களது உழைப்பின் பலனையே மற்றவர் அனுபவிக்கின்றனர். இவர்கள் பயிர் செய்யாவிடின் நகர மக்கள் கதி யாதாகும்? சிறிது எண்ணிப் பாருங்கள்.

'வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயர்வான்.'

ஆதலால், நாட்டு மக்கள் நல்வாழ்க்கையும் அரசனது செங் கோற் சிறப்பும் விவசாயிகளிடத்தே அடங்கியுள்ளன. அத் தகைய விவசாயிகளின் நிலைமை, அஃதாவது கிராமங்களின் நிலைமை உயர்ந்தாற்றான், நாட்டு நிலைமை உயர்வடையும்.

நமது நாட்டுக் கிராமங்களில் உள்ள குறைபாடுகள் பல: போதுமான கல்விச் சாலைகள் இல்லை. ஏன்? பல கிராமங்களில் பள்ளிக்கூடங்களே இல்லை. ஒன்றிரண்டு பள்ளிக்கூடங்கள் இருப்பினும், அவை செவ்வையாக நடத்தப்படுவதும் இல்லை; அங்ஙனம் நடத்தப்படினும், விவசாயிகட்கு உரிய முறையில் போதிக்கப்படுவதில்லை. இன்று கிராம மக்கள் பெறும் கல்வி, கடன் வாங்கும் பத்திரங்களில் கையெழுத்துப்போட மட்டும் பயன்படுகிறதே தவிரப் புத்தகங்களின் அறிவையோ—விவசாய அறிவையோ—தொழில் அறிவையோ—சன்மார்க்க அறிவை யோ ஊட்டக் கூடுவதாக இல்லை. விவசாயிகளும் படிப்பில் கவலை கொள்ளாது, கிணற்றுத் தவளைகளைப் போல உலகச் செய்திகளை அறிய ஆர்வம் இன்றி உண்டுண்டு உறங்குவதி லேயே காலம் கழிக்கின்றனர். அவர்கள் கண்மூடிகளாகக் காலை முதல் மாலை வரை வயல்களில் உழைக்கின்றனரே தவிரப் போதிய அறிவுடன் மேனாட்டு விவசாயிகளைப் போலப் புதிய

துறைகளில் வேலை செய்வதில்லை; அங்ஙனம் செய்வதற்குரிய வசதிகளைத் தேடிக்கொள்ளவும் முயல்வதில்லை. கிராமங்களில் விவசாயப் பள்ளிகள் இல்லை; விவசாயத்தைப் பற்றிய நூல்கள் இல்லை; விவசாய முறைகளை எடுத்து விளக்குவார் போதிய அளவு இல்லை; தக்க அளவு பொருள் உதவி செய்வார் இல்லை. சுருங்கக் கூறின், நம் கிராம மக்கள் வாழ்க்கை இன்றுள்ள நிலையில் பயனற்றதாகவே இருக்கின்றது. அதனால் கிராமங்கள் உயரக் கூடவில்லை; ஆதலின், நாடும் உயரமுடியவில்லை.

அரசாங்கம் விவசாயிகட்குக் குறைந்த வட்டிக்குப் பணம் கடன் கொடுத்தல் வேண்டும்; ஜில்லாவுக்கொரு விவசாயக் கல்லூரியை வைத்து அத்துறையில் ஆண்டுதோறும் மாணவர் பலரைத் தயார் செய்ய வேண்டும்; அவர்களைக் கிராமங்களில் தொண்டு செய்ய ஏவுதல் வேண்டும்; அவர்கள் துணையைக் கொண்டு விவசாயிகள் சீர்பெறுமாறு செய்தல் வேண்டும்; மேனாட்டு விவசாய முறைகளைப் படங்கள் மூலமும், பிரசங்க மூலமும் குடியானவர்க்கு விளக்குதல் வேண்டும்; விவசாயம், கைத்தொழில், அரசியல், மதம், பொது அறிவு பற்றிய நூல்களைக் கொண்ட நூல் நிலையங்களைக் கிராமத்தார் பயன்படுத்தச் செய்தல் வேண்டும். சுருக்க விலையில் விவசாயம், கைத்தொழில் பற்றிய செய்திகளை அறிவிக்கும் நூல்களை வெளியிட்டுக் குடியானவர்களிடைப் பரப்புதல் வேண்டும். பால் பண்ணை, கோழிப் பண்ணை, ஆட்டுப் பண்ணை, தேனீ வளர்த்தல், நூல் நூற்றல், நெசவு முதலிய கைத்தொழில்களை எப்படி வளர்த்தல் வேண்டும் என்பதைப் போதித்துச் செயல் முறையில் செய்துகாட்டல் வேண்டும்; கிராமச் சுகாதாரம் போதித்தல் வேண்டும்; ஆங்காங்குப் போதிய வைத்திய சாலைகள் ஏற்படுத்துதல் வேண்டும்; பத்திரிகைகளைப் படிக்கும் பழக்கம் உண்டாகச் செய்தல் வேண்டும்.

இத்துறைகளில் கிராமத்தார் பயிற்சி பெறுவாராயின், நம் நாட்டுக் கிராமங்களில் பயிர்த் தொழிலும், கைத்தொழிலும் முன்னேற்றம் பெறும்; பொருளாதார நிலை சீர்பெறும்; கிராமவாசிகள் சுகம் பெறுவர். அவர்களால் நாமும் சுகம் பெறுவோம்.

1. அரும்பத விளக்கம்

உயிர் நாடியாக - முக்கியமானதாக, (பெரும்பாலும் × சிறுபாலும்) கிணற்றுத்தவளை போல - அதற்கு வெளிவிஷயம் தெரியாதவாறுபோல, உண்டு உண்டு - அடுக்குத்தொடர், கண்மூடிகள் - அறியாதவர்கள், துறை - வழி, போதிய - ஏற்ற (தகுந்த).

2. கேள்விகள்

1. நம் நாட்டில் உள்ள கிராமங்கள் எத்தனை? விவசாயிகள் எண்ணிக்கை யாது?
2. 'வரப்புயர'...என்றுதொடங்கும் பாவின் பொருள் யாது?
3. கிராமத்தில் உள்ள குறைபாடுகள் யாவை?
4. அரசாங்கததார் கிராம முன்னேற்றத்திற்கு யாது செய்தல் வேண்டும்?
5. எப்பொழுது கிராமத்தார் சுகம் பெறுவர்?

3. இலக்கணம்

ஆகுபெயர்:—ஒன்றன் பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொன்றுக்கு ஆகி வருதல் ஆகுபெயராம்.

(உ-ம்.) ஊர் சிரிக்கிறது - ஊர் என்பது இடத்தின் பெயர். இங்கு அச்சொல் ஊரில் உள்ள மக்களுக்கு ஆகி வருகிறது. ஆதலின், இது இட ஆகுபெயர் எனப்படும்.

ஆகுபெயர் பல வகைப்படும். இங்கு ஏழு ஆகு பெயர்களை மட்டும் காண்போம்:

(1) முதல் ஆகுபெயர்—தாமரை போன்ற முகம். தாமரை என்னும் கொடியின் (முதல்) பெயர் இங்கு அதன் சினை யாகிய மலருக்கு ஆகி வருவதால், முதலாகு பெயர்.

(2) இடவாகுபெயர்—ஊர் சிரிக்கிறது.

(3) கால ஆகுபெயர்—சித்திரை வந்தான். 'சித்திரை' என்பது காலத்தின் பெயர். அது அக்காலத்தில் பிறந்தவனுக்கு ஆகி வருதலால், கால ஆகு பெயர்.

(4) சினை ஆகுபெயர்—வெற்றிலை நட்டான். வெற்றிலை என்னும் சினைப்பெயர், அதன் முதலாகிய கொடிக்கு ஆகி வருவதால், சினை ஆகுபெயர்.

(5) பண்பாகுபெயர்—வீட்டிற்கு வெள்ளை அடி. வெள்ளை என்னும் பண்புப் பெயர், சுண்ணும்புக்கு ஆகி வருத லால், பண்பாகு பெயர்.

(6) தொழில் ஆகு பெயர்—பொங்கல் உண்டேன். பொங்கல் என்னும் தொழிற் பெயர் அத்தொழிலை அடைந்த உண விற்கு ஆகி வருதலால், தொழில் ஆகுபெயர்.

(7) உவமை ஆகுபெயர்—மயில் வந்தாள். மயில் என்னும் பறவையது பெயர் அம்மயில் போன்ற சாயலையுடைய பெண்ணிற்கு (உவமையாக) ஆகி வருதலால், உவமை ஆகுபெயர்.

பயிற்சி

1. கொவ்வை போன்ற உதடு, தெருச் சிரிக்கிறது, கார் அறுத்தான், மருக்கொழுந்து நட்டான், வண்ணான் வெள்ளை கொணர்ந்தான், வற்றல் உண்டாள்—தடித்த எழுத்திலுள்ளவை என்ன ஆகுபெயர்கள் ?

2. பாடத்தின் முதற்பிரிவில் உள்ள பொதுப்பெயர்—சிறப் புப் பெயர்களைச் சொல்லு.

3. அதில் உள்ள அறுவகைப் பெயர்களைக் கூறு.

4. அதிலுள்ள பெயர், வினை, வினைப் பயனிலைகளைச் சொல்லு.

5. அதில் இருக்கும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறு.

6. இரண்டாம் பிரிவில் உள்ள வினைமுற்று—வினையாலணையும் பெயர்—தொழிற் பெயர்களைக் கூறு.

7. அதில் உள்ள பெயரெச்ச, வினையெச்சங்களைக் குறி; அவற்றின் காலமும் குறி.

8. பொருளாதார, விவசாயப்பள்ளி, மணியடி, கண்ணாடி, பற்பொடி—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறு.

9. எழுவாய்க்கேற்ற பயனிலை கூறு:—

(1) முருகன்—. (2) வள்ளி——. (3) நான்——.
(4) நீ———. (5) மாடு———. (6) மாடுகள்——.

10. இப்பாடத்தை மௌனமாகப் படி; பிரிவுகட்குத் தலைப்புக் கொடு.

11. இப்பாடத்தை 24 வரிகளில் ஒரு கட்டுரையாக எழுது.

12. கிராம முற்போக்கின் அவசியம்-நம் கிராமங்கள் நிலைமை-அரசியலார் கடமைகள்—முடிவு: இக் குறிப்புகளைக் கொண்டு 4 பிரிவுகளில் ஒரு கட்டுரை எழுது.

7. திருவிதாங்கூர்

இந்தியாவில் ஏறக்குறைய அறுநூறு சமஸ்தானங்கள் இருக்கின்றன. அவற்றுள் மிகப்பெரியன சிலவே. அச்சிலவற்றுள் ஒன்று தமிழ் நாட்டில் உள்ள 'திருவிதாங்கூர்ச் சமஸ்தானம்' என்பது. இந்நாட்டில் இயற்கை வளங்கள் யாவும் மலிந்துள்ளன; இயற்கை அன்னையின் இன்பக் காட்சிகள் பலவும் இங்குக் கண்டு களிக்கலாம். எங்குப் பார்க்கினும் மலைத்

தொடர்கள், மரச்சோலைகள், நீர் நிலைகள், காறுைகள், கால் வாய்கள், வளங்கொண்ட காடுகள் முதலியன இடையரு இன்பத்தை அளித்துக்கொண்டிருக்கின்றன. இந்நாடு மிகப் பழைய காலந்தொட்டே சேரமன்னர் பரம்பரையினரால் ஆளப்படுவதாகும்.



பண்டைத் தமிழகத்து மூவேந்தருள் 'சேரர்' என்பவர் மேற்குப்புற நாட்டை ஆண்டவர். திருவாங்கூர், கொச்சி முதலிய இடங்கள் சேர நாட்டைச் சேர்ந்தவை. அக்கால அரசர் '**வரம்பர்**' எனப்பட்டனர். இக்கால அரசர் '**வர்மர்**' (வர்மா) எனப் பட்டம் கொள்கின்றனர். சேரன்-செங்குட்டு வன், இமயவரம்பன் - நெடுஞ்சேரலாதன் என்னும் சங்க கால சேர மன்னரும், சேரமான் பெருமாள் நாயனர் எனப்பட்ட இடைக்காலச் சேரமன்னரும் திருவிதாங்கூரை ஆண்டவர்களே ஆவர்.

சேரநாடு நெடுங்காலம் தமிழ் நாடாகவே இருந்தது; பின்னர் வடமொழியாளர் கூட்டுறவாலும், அந்நாட்டு மக்களின் பேச்சு முறையாலும் பழந்தமிழ் மாறுதல் அடைந்து, மலையாளம் ஆகியது; மக்களும் 'மலையாளிகள்' என்று வழங்கப் பெற்றனர். இப்பொழுது அந்நாட்டில் மலையாள மொழியே வழங்குகின்றது. பழைய மலையாள நூல்கள் யாவும் தூய தமிழ் நூல்கள் என்றே கூறல் தகும். கி.பி. 17-ஆம் நூற்றுண்டு வரை மலையாள மாப்பிள்ளைகள் தமிழ் எழுத்துகளையே எழுதி வந்தனர். மலையாளப் பகுதிகளில் தமிழ்ச் சாஸனங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

திருவிதாங்கூருக்குத் தலைநகரம் **திருவனந்தபுரம்** ஆகும். அது அழகு மிக்க நகரம்; திருமால் அனந்த சயனத்தில் உள்ள பெருங்கோவிலையுடைய புண்ணிய ஸ்தலம்; அந்தப் பெருமானுக்குப் பத்மநாப ஸ்வாமி என்று பெயர். அரசரது அரண்மனை, உயர் நீதி மன்றம், சட்டசபை முதலிய பல பெரிய கட்டிடங்களும் காரியாலயங்களும் நிறைந்துள்ள இடம்; கடற்கரை ஓரத்தில் உள்ள நகரம்.

நாட்டுச் சட்ட திட்டங்கள், நீதிமுறை, நிருவாகப்பொறுப்பு இவற்றைச் சட்ட சபையோடு கூடிய **திவான்** அரசர் சார்பாகக் கவனித்து வருகின்றார். அவரே சட்டசபைக்குத் தலைவராவர். அவருக்குக் கீழ்ப் பல இலாகாக்கள் இருக்கின்றன. இப்பொழுது திருவிதாங்கூரின் திவானாகத் திகழ்பவர் **சர். சி. பி. இராமஸ்வாமி ஐயர்** என்பவர். இவர் அரசியல் அறிவு மிக்குடையவர்; சென்னை அரசாங்கத்திலும் இந்திய அரசாங்கத்திலும் பெரும் பதவிகள் வகித்து, 'சிறந்த அரசியல் நிபுணர்' எனப் பெயர் பெற்றவர். இவரது நிருவாகத்தில், திருவிதாங்கூர் உயர் நிலையை அடைந்துவருகின்றது.

இச்சமஸ்தானத்தில் பொதுவாகப் பயிர்த்தொழிலும் கைத்தொழிலும் சாதாரண நிலையிலேயே இருந்து வருகின்றன. எனினும், மற்றச் சமஸ்தானங்களைவிட இந்தச் சமஸ்தானத்தில்

கைத்தொழிற்சாலைகள் அதிகமுண்டு. காகிதம் செய்யும் தொழிற்சாலையும், மின்சாரத்தை உண்டாக்கும் நிலையமும், சர்க்கரைத் தொழிற்சாலையும் இங்குச் சிறந்த வேலைசெய்து வருகின்றன.

கல்வித் துறையில் இச் சமஸ்தானம் மிகுந்த முன்னேற்றம் அடைந்திருக்கிறது. இங்குத் தாய்மொழிக் கல்வி, ஆங்கிலக் கல்வி, உயர்தரக் கல்லூரிக் கல்வி என்னும் மூன்று துறைகளிலும் கல்வி அளிக்கப்படுகின்றது. தாய்மொழிக் கல்வி எல்லோருக்கும் இலவசமாக அளிக்கப்படுகின்றது. பெண் மக்களுக்கு எவ்விதக் கல்விக்கும் பாதிக் கட்டணமே விதிக்கப்பட்டுள்ளது. இங்குச் சுமார் 8 கல்லூரிகள், 50 ஆங்கிலக் கலாசாலைகள், 3500 தாய்மொழிப் பள்ளிகள் இருந்து கல்விப்பணி புரிகின்றன. அவற்றில் பெருந்தொகையினரான பெண்கள் கல்வி பயின்று வருதல் குறிப்பிடத்தக்கது.

பெண்கள் முன்னேற்றம், நவீன முன்னேற்றம், சீர்திருத்த நிலை இவற்றுக்குப் பெருங்காரணக் கர்த்தராக இருந்து ஏழாண்டுகள் இடையறுத் தொண்டு செய்தவர் இப்போதுள்ள அரசரின் பெரிய தாயார் **சேது லக்ஷ்மிபாய்** அம்மையாரே ஆவர். இவருக்குப் பின் 1931-ல் இன்றுள்ள **சித்திரைத் திருநாள் மஹா ராஜா** பட்டம் அடைந்தார். அவரும், அவர் தாயாராகிய **சேது பார்வதிபாய்** அம்மையாரும் இன்று இச்சமஸ்தானத்தைக் கவனித்து வருகின்றனர்; நாட்டு முன்னேற்றத்துக்குரிய பல துறைகளில் வேலை செய்கின்றனர். சமீபத்தில் இவ்விருவரும் திவானுடன் இந்தியா முழுவதும் சுற்றினர்; இங்கிலாந்து சென்று, அரசியல் விஷயங்களை அறிந்து மீண்டனர். அரசர் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் 'கோவில் நுழைவு உரிமை'யை மனமுவந்து அளித்துள்ளார்; சாதி மத வேறுபாடுகள் திருவிதாங்கூரில் கவனிக்கப்பட்டில. அறிஞர்கள் உயர் பதவிகளைப் பெற்று வருகின்றனர். பெண்மணிகள் பலர் உயர்ந்த பதவிகளில் இருந்து வருகின்றனர். விவசாய நீர்ப்

பாசன வசதி, குழாய் நீர், இருப்புப்பாதைப் பெருக்கம், 'பஸ்' போகும் பாதைகளின் பெருக்கம், மின்சார விளக்கிடுதல் முதலிய பல முன்னேற்ற ஏற்பாடுகள் திறம்பட அமைந்துள்ளன.

திருவாங்கூர் மகாராஜா

கன்னியா குமரி முனை காணத்தக்க இடமாகும். அது முக் கடல் கூடும் இடமாகும்; சூரியன் தோற்றமும் மறைவும் தெளிவாகப் புலப்படும் அரிய இடமாகும். இயற்கை அழகும்

செயற்கைச் சிறப்பும் கொண்டுள்ள திருவிதாங்கூரைத் தமிழ் மக்கள் கண்டு களித்தல் வேண்டும்.

மலையாளிகள் சிக்கன வாழ்வு நடாத்துபவர்; அறிவும் ஆற்றலும் உடையவர். அவர்களை அத்துறைகளில் பின் பற்றல் தமிழ் மக்கள் முன்னேற வழியாகும். மலையாள நாடு மகிழ்ச்சி தரும் நாடாகும்.

1. அரும்பத விளக்கம்

இடையறு - நீங்காத, கானாறு - காட்டாறு, சங்க காலம் - 1800 வருஷங்கட்குமுன் கடைச்சங்கம் நடைபெற்ற காலம், இடைக்காலம் - கி. பி. 8 அல்லது 9-ஆம் நூற்றாண்டு, வடமொழியாளர் - சம்ஸ்கிருதம் பேசியவர், மாப்பிள்ளைகள் - முஸ்லிம்களாயுள்ள மலையாளிகள் அனந்தன் - ஆதிசேடன், சயனம் - படுக்கை.

2. கேள்விகள்

1. திருவிதாங்கூரின் இயற்கைச் சிறப்பு யாது?
2. சேரர் யாவர்? 'வரம்பர்', 'வர்மர்' - குறிப்பு எழுது.
3. சங்ககாலம், இடைக்காலம் - யாவை? அவ்வக்கால அரசர் யாவர்?
4. சேரநாடு தமிழ் நாடு என்பதை எப்படி மெய்ப்பிக்கலாம்?
5. திருவனந்தபுரம் - குறிப்பு எழுது.
6. இச்சமஸ்தானத்தில் உள்ள தொழிற்சாலைகள் எவை?
7. அங்குக் கல்விநிலை எப்படி இருக்கிறது?
8. இச்சமஸ்தானத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்ற ஏற்பாடுகள் எவை?
9. கன்னியாகுமரி முனையின் சிறப்பு யாது?
10. மலையாளிகள் எத்தகையவர்?

3. இலக்கணம்

சென்ற வகுப்பில் எட்டு வேற்றுமைகளைப் பற்றிப் படித்தீர்கள். இப்பொழுது அவ்வேற்றுமைகளை ஏற்கும் பொழுது பெயர்கள் சில மாறுதல் அடைதலை இங்குக் காண்போம்:

1. யான் என்பது என் எனத் திரியும்.

(உ-ம்.) 1. யான் 2. என்னை 3. என்னால் 4. எனக்கு 5. என்னில் 6. எனது 7. என்னிடம்.

2. யாம் என்பது எம் எனத் திரியும்.

(உ-ம்.) 1. யாம் 2. எம்மை 3. எம்மால் 4. எமக்கு 5. எம்மில் 6. எமது 7. எம்மிடம்.

குறிப்பு:—இதனோடு கள் என்பதும் சேர்ந்து, யாங்கள், எங்களை, எங்களால், எங்களுக்கு, எங்களின், எங்களது, எங்களிடம் எனவும் வருவதுண்டு.

3. நாம் என்பது நம் எனத் திரியும்.

(உ-ம்.) (1) நாம் (2) நம்மை (3) நம்மால் (4) நமக்கு (5) நம்மின் (6) நமது (7) நம்மிடம்.

4. நீ என்பது, நின் எனவும், உன் எனவும் திரியும்.

(உ-ம்.) (1) நீ (2) நின்னை (3) நின்னால் (4) நினக்கு (5) நின்னின் (6) நினது (7) நின்னிடம்.

(1) நீ (2) உன்னை (3) உன்னால் (4) உனக்கு (5) உன்னின் (6) உனது (7) உன்னிடம்.

5. நீர் என்பது நும் எனவும், உம் எனவும் திரியும்.

(உ-ம்.) (1) நீர் (2) நும்மை (3) நும்மால் (4) நுமக்கு (5) நும்மின் (6) நுமது (7) நும்மிடம்.

(1) நீர் (2) உம்மை (3) உம்மால் (4) உமக்கு (5) உம்மின், (6) உமது (7) உம்மிடம்.

குறிப்பு:—இந்த உம் என்பதோடு கள் என்பது சேர்ந்து உங்கள் உங்களை, உங்களால், உங்களுக்கு, உங்களின், உங்களது, உங்களிடம் எனவும் வருவதுண்டு.

6. தான் என்பது தன் எனத் திரியும்.

(உ-ம்.) (1) தான் (2) தன்னை (3) தன்னால் (4) தனக்கு (5) தன்னின் (6) தனது (7) தன்னிடம்.

7. தாம் என்பது தம் எனத் திரியும்.

(உ-ம்.) (1) தாம் (2) தம்மை (3) தம்மால் (4) தமக்கு (5) தம்மின் (6) தமது (7) தம்மிடம்.

குறிப்பு:—தம் என்பதோடு கள் என்பது சேர்ந்து, தங்கள் தங்களை, தங்களால், தங்களுக்கு, தங்களின், தங்களது, தங்களிடம் எனவும்வரும்.

பயிற்சி

1. பின் வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்கள் என்னென்ன வேற்றுமையை ஏற்று வந்தன எனக் கூறுக:—(1) அறிவுடையார் **எக்காரியத்தையும்** எளிதில் செய்வார். (2) **கோவிலுக்குச்** செல்லுதல் நல்லது. (3) **வேலனது** நாய் நல்ல நாய். (4) **மலையின்கண்** மூங்கில் மிகுதி. (5) **மரத்தினின்றும்** பழம் உதிர்ந்தது. (6) **நண்ப,** நீ சொல்லுவது மிகவும் நல்லது.

2. பின் வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் ஏற்ற வேற்றுமை உருபுகளை அமைத்து வாக்கியங்களைப் பூர்த்தி செய்:—(1) சீதை——கணவன் இராமன், (2) கேசவன் பரீக்ஷை——தேர்ச்சி பெற்றுப் பரிசும் பெற்றான். (3) சாலை——இருபுற——மரங்கள் நெடுக இருந்தன. (4) சுந்தரம் கோயில் வாசலில் ஒரு குழந்தை——கண்டான். (5) குழந்தை சிரித்துக்கொண்டு சுந்தரம்——வந்தது. (6) நான் தங்கள்——ஒரு விஷயம் கூற வந்தேன்.

3. பின் வரும் வாக்கியங்களில் வேற்றுமையை ஏற்ற சொற்களில், வேற்றுமை உருபு இன்னது என்று எடுத்து எழுது:—(1) விறகுவெட்டி கோடரி கொண்டு மரத்தை வெட்டினான். (2) நீ ஊரினின்றும் எப்பொழுது வந்தாய்? (3) கூலிக்கு வேலை செய்தான். (4) கண்ணனுடைய புத்தகத்தை நீ எடுத்தாயா? (5) கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் சென்றார்கள். (6) சென்னைக்குத் தெற்கில் நாகைப்பட்டினம் இருக்கிறது.

4. பாடத்தின் முதல் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறு.

5. இரண்டாம் பிரிவில் உள்ள வினை, வினா, பெயர்ப் பயனிலைகளைச் சொல்லு.

6. மூன்றும் பிரிவில் உள்ள அறுவகைப்பெயர்களைத் தெரிவி.

7. நான்காம் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலைகளுக்குச் சொல் இலக்கணம் கூறு.

8. ஐந்தாம் பிரிவில் உள்ள முற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் குறிப்பிடு.

9. ஆறும் பிரிவில் உள்ள வேற்றுமை உருபுகளைச் சுட்டு.

10. அப்பிரிவில் உள்ள தொழிற்பெயர், வினையால் அணையும் பெயர்களைச் சொல்லு.

11. ஏழாம் பிரிவில் உள்ள செயப்படுபொருள் குன்றிய வினை, குன்றா வினைகளைக் கூறு.

12. எட்டாம் பிரிவில் இருக்கும் ஐம்பால் பெயர்களைச் சொல்லு.

13. ஒவ்வொரு பிரிவிற்கும் தலைப்புக் கொடு.

14. இப்பாடத்தைச் சுருக்கி 24 வரிகளில் எழுது.

15. திருவிதாங்கூரின் இயற்கை அழகு - அரசர் வரலாறு - அரசியல் முன்னேற்றம் - தலைநகரம் : இக்குறிப்புகளைக் கொண்டு 4 பிரிவுகள் கொண்ட கட்டுரை எழுது.

8. கடிதம் எழுதுதல்

கடிதம் எழுதுதல் என்பது ஒருவர் வேற்றூரிலுள்ள மற்றொருவருக்குக் கடித மூலம் விஷயங்களை அறிவிப்பதாம். கடிதங்கள் யாருக்கு எழுதப்பட வேண்டுமோ, அவர்களின் தகுதி அறிந்து தக்கவாறு எழுதப்பட வேண்டும்.

கடிதங்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை, 1. **உறவினர், நண்பர் முதலியவர்களுக்கு எழுதப்படும் கடிதங்கள்,** 2. **அழைப்புக்கடிதங்கள்,** 3. **விண்ணப்பக் கடிதங்கள்,** 4. **வியாபாரக் கடிதங்கள்** என்பன.

அவற்றுள் உற்றூர் உறவினர்க்கு எழுதப்படும் கடிதங்கள், 1. **பெரியோருக்கு எழுதப்படுவது,** 2. **சம நிலையினருக்கு எழுதப்படுவது,** 3. **சிறியோருக்கு எழுதப்படுவது** என மூன்று வகைப்படும். அழைப்புக் கடிதங்கள் சாதாரணமாய் உற்றூர் - உறவினர்க்கே எழுதப்படும். ஆகையால், மேற்கூறியவாறு மூவகையாக எழுத வேண்டுவதே முறை ஆயினும், பொதுவில் எழுதப்பட வேண்டி யிருப்பதால், பெரியோருக்கு எழுதப்படுவது போல எழுதப்படும். விண்ணப்பக் கடிதங்கள் உயர்ந்த நிலையில் இருப்பவருக்கு எழுதப்படுமாகையால், பெரியோருக்கு எழுதப்படுவதுபோல எழுதப்படும். வியாபாரக் கடிதங்கள் சம நிலையில் உள்ளவருக்கு எழுதப்படுவதுபோல எழுதப்படும்.

மேற்குறித்த எல்லாவகைக் கடிதங்களும் 1. **தொடக்கம்,** 2. **விஷயம்,** 3. **முடிவு,** 4. **விலாசம்** என்னும் நான்கு பிரிவுகளை உடையனவாம். அந்தந்த வகைக் கடிதங்களுக்கு ஏற்றவாறு இந்த நான்கு பிரிவுகளும் அமைந்திருக்க வேண்டும்.

1. உறவினர், நண்பர் முதலியவர்களுக்கு எழுதும் கடிதங்கள்

உறவினர்களுக்கு எழுதும் கடிதங்கள்

தொடக்கம்:

உறவினருள் வயதில் மூத்தோருக்கு அவரது உறவின் முறைப்பெயரையும்அதற்குமுன்**தேவரீர்**என்பதையும்அமைத்து

தேவரீர் தகப்பனார் அவர்களுக்கு, **தேவரீர்** மாமா அவர்களுக்கு, **தேவரீர்** அண்ணா அவர்களுக்கு—என்றும்,

உறவினருள் வயதில் சிறியவருக்கு அவரது உறவின் முறைப் பெயருக்குமுன் **சிரஞ்சீவி, நிறைநாட் செல்வன்** என்பனவற்றுள் ஏதாவது ஒன்றையும், அதற்குப் பின் அவரது சொந்தப் பெயரையும் அமைத்துச்,

சிரஞ்சீவி தம்பி கோபாலனுக்கு, **நிறைநாட் செல்வன் மைத்துனன்** சீனிவாசனுக்கு—என்றும்,

உறவின் முறையாருள் பெண்பாலராயின் வயதில் மூத்தோருக்கு அவரது முறைப் பெயருக்குமுன் **தேவரீர்** என்பதை வைத்து, **தேவரீர் பாட்டியார்** அவர்களுக்கு, **தேவரீர் தாயார்** அவர்களுக்கு என்றும்,

உறவின் முறையாருள் பெண்பாலராயின் வயதில் சிறியவருக்கு அவரது உறவின்முறைப் பெயருக்குமுன் **சௌபாக்கியவதி, நிறைநாட் செல்வி** என்பவற்றுள் ஒன்றை அமைத்து,

சௌபாக்கியவதி தங்கை ஜானகிக்கு, மருமகள் **நிறைநாட் செல்வி** கமலத்துக்கு என்றும் எழுதப்படும்.

குறிப்பு:—சிரஞ்சீவி என்பதைச் சுருக்கமாகச் **சி.** என்றும், சௌபாக்கியவதி என்பதைச் சுருக்கமாகச் **சௌ.** என்றும் குறிப்பதும் உண்டு.

இத் தொடக்கங்கள் சம நிலையினருக்கு எழுதப்படும் போது வயதின் சிறுமை, பெருமைகளைக் கவனித்து, மேற்கூறிய இருவகையுள் ஏதாவது ஒரு வகையாக எழுதப்படும்.

நண்பர்களுக்கு எழுதும் கடிதங்கள்

ஆண்பாலாரான நண்பருள் பெரியாருக்கு அவரது பெயருக்கு முன் **நண்பர், அருமை நண்பர்** என்பவற்றுள் ஒன்றை வைத்து,

நண்பர் மகாதேவ ஐயர் அவர்களுக்கு, **அருமை நண்பர்** நடராஜ பிள்ளை அவர்களுக்கு—என்றும்,

ஆண்பாலாரான நண்பருள் சமநிலையில் உள்ளோருக்கும், சிறியோருக்கும் அவர்கள் பெயருக்கு முன் **நண்பன், அருமை நண்பன்** என்பவற்றுள் ஒன்றை வைத்து, **நண்பன்** மகாதேவனுக்கு, **அருமை நண்பன்** விசுவநாதனுக்கு—என்றும் எழுதப்படும்.

பெண்பாலாரான நண்பருள் வயதில் பெரியவரானால் அவரது பெயருக்குமுன் **ஸ்ரீமதி** அல்லது **திருவாட்டி** என்பதை அமைத்து,

ஸ்ரீமதி காமாக்ஷி அம்மாள் அவர்களுக்கு, **திருவாட்டி** விசாலாக்ஷி அம்மாள் அவர்களுக்கு—என்றும்,

பெண்பாலாரான நண்பருள் சம நிலையினருக்கும், சிறியோருக்கும் அவர்கள் பெயருக்குமுன் **சிநேகிதி, அருமைச் சிநேகிதி** என்பவற்றுள் ஒன்றை வைத்து,

சிநேகிதி பாலம்மாளுக்கு, **அருமைச் சிநேகிதி** ஜானகிக்கு-என்றும் எழுதப்படும்.

முன் பின் அறியாதாருக்கு எழுதும் கடிதங்கள்

முன் அறியாதாருள் ஆண்பாலாருக்கு அவரது தகுதிக்கேற்ப அவரது பெயருக்குமுன் **மகா-ா-ா-ஸ்ரீ, திருவாளர், உயர் திருவாளர்** என்பவற்றுள் ஒன்றைவைத்து,

மகா-ா-ா-ஸ்ரீ இராமகிருஷ்ணையர் அவர்களுக்கு, **திருவாளர்** வாசுதேவப் பிள்ளை அவர்களுக்கு, **உயர் திருவாளர்** திருநாவுக்கரசு முதலியார் அவர்களுக்கு என்றும்,

பெண்பாலாருக்கு அவரது பெயருக்கு முன் **ஸ்ரீமதி** அல்லது **திருவாட்டி** என்பதை அமைத்து,

ஸ்ரீமதி பாலாம்பாள் அம்மாள் அவர்களுக்கு என்றும், **திருவாட்டி** தாமரைக்கண்ணி அம்மையார் அவர்களுக்கு என்றும் எழுதப்படும்.

இவ்வாறு எழுதியபின் இத்தொடக்கத்துடன் வயதில் பெரியவருக்காயின் **நமஸ்காரம், வணக்கம், வந்தனம், வந்தனம் செய்து எழுதுவது, வணக்கத்துடன் விண்ணப்பித்துக் கொள்வது**—என்பவற்றுள் ஒன்றும், வயதில் சிறியவருக்காயின் **ஆசீர்வாதம், எல்லா நன்மைகளும் அமைவதாக**—என்பவற்றுள் ஒன்றும் உடன் எழுதப்படும்.

இத் தொடக்கத்தின்பின் க்ஷேமலாப சம்பந்தமான சம்பிரதாய வார்த்தைகள் சில எழுதப்படும். அவையாவன:—**இங்கு யாவரும் நலம். அங்குள்ளாரது நலம் பற்றி அடிக்கடி கடிதம் எழுத வேண்டுகிறேன்; இன்பம், இன்பம் அறிய விழைகின்றேன்; உபய க்ஷேமம்; இருதலையும் இன்பம் பெருகுக** முதலியன.

2. அழைப்புக் கடிதங்கள்

தொடக்கம் :

.................அவர்களுக்கு, நலம். நலம் அறிய அவா. என்று எழுதப்படும்.

3. விண்ணப்பக் கடிதங்கள்

தொடக்கம் :

1. கனந்தங்கிய நகரசபைத் தலைவர் அவர்களுக்கு விண்ணப்பித்துக் கொள்வது.

2. மாட்சிமை தங்கிய கவர்னர் துரை அவர்கள் திவ்விய சமுகத்துக்கு விண்ணப்பித்துக் கொள்வது.

3. கனந்தங்கிய ஆசிரியர் அவர்கட்கு, அடியேன் மாணவன் வணக்கத்துடன் எழுதுவது.

4. வியாபாரக் கடிதங்கள்

தொடக்கம் :

1. திருவாளர், இரத்தினவேலுப பிள்ளை அவர்களுக்கு, கனந்தங்கிய ஐயா,

2. உயர்திரு, வேதாசல முதலியார் அவர்களுக்கு,

அன்புமிக்க ஐயன்மீர்,

விஷயம் :

தொடக்கம் ஆனதும் விஷயம் எழுதவேண்டும். இது அவரவர்கள் எழுத விரும்பும் விஷயத்தைக் குறிப்பதாம். பொதுவாக விஷயம் சுருக்கமாய் இருத்தல் நலம். பின்னர்க் காட்டப்படும் மாதிரிக் கடிதங்களில் இது நன்கு விளக்கப் படும்.

முடிவு

1. உறவினர், நண்பர் முதலியவர்களுக்கு எழுதும் கடிதங்கள்

1. **உறவினருள் பெரியவருக்கு:**

இங்ஙனம்,
தங்கள் கீழ்ப்படிதலுள்ள குமாரன் (குமாரி),

இங்ஙனம்,
தங்கள் பாதங்களைப் போற்றும்
வணக்கமுள்ள தம்பி (தங்கை),

2. **உறவினருள் சிறியவருக்கு:**

இங்ஙனம்,
உனது அன்புள்ள தந்தை (மாமன்),

3. நண்பருக்கு:

இங்ஙனம்,
உனது அன்புள்ள நண்பன், அருமை நண்பன்,
(சிநேகிதி, அருமைச் சிநேகிதி),

4. முன்பின் அறியாதவருக்கு:

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,

2. அழைப்புக் கடிதங்கள்

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,

3. விண்ணப்பக் கடிதங்கள்

1. எஜமானருக்கு:

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள ஊழியன்,

2. அரசாங்க உத்தியோகஸ்தருக்கு:

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள குடிகள்,

3. ஆசிரியருக்கு:

இங்ஙனம்,
தங்கள் வணக்கமுள்ள மாணவன்,

4. வியாபாரக் கடிதங்கள்

இங்ஙனம்,
தங்கள் அன்பிற்குரிய,

விலாசம்

விலாசம் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருக்கவேண்டும். முதலில் மரியாதைக்காக **மகா-ா-ா-ஸ்ரீ, ஸ்ரீமான், திருவாளர்,**

உயர்திரு, கனந்தங்கிய, மாட்சிமை தங்கிய முதலிய அடைமொழிகளையும் அதனுடன் விலாசக்காரருடைய பெயரையும் எழுத வேண்டும். அப்பால் **வீட்டு எண், தெரு, ஊர், தபால் நிலயம்** முதலியவற்றை எழுதவேண்டும். கிராமமாயின் **ஊர், தபால் நிலயம், வழி, ஜில்லா** முதலியவற்றை எழுதவேண்டும். விலாசத்தில் உறவின் முறைப் பெயரை எழுதுவது கூடாது.

உதாரணம் :—

1. திருவாளர்
இராமையர் அவர்கள்,
485, தங்கசாலைத் தெரு,
பார்க் டவுன் போஸ்டு,
சென்னை.

2. மகா-௱-௱-ஸ்ரீ
தங்கவேலுப் பிள்ளை அவர்கள்,
மிராசுதார், தென்னூர்,
வரதராஜப்பேட்டை போஸ்டு,
சிதம்பரம் வழி,
தென் ஆர்க்காடு ஜில்லா.

3. கனந்தங்கிய
ரெஜிஸ்ட்ரார் அவர்கள் சமுகத்துக்கு,
சென்னை யூனிவர்ஸிடி,
திருவல்லிக்கேணி போஸ்டு,
சென்னை.

4. மாட்சிமை தங்கிய
கவர்னர் துரையவர்கள்,
சென்னை.

5. திருவாளர்
மானேஜர் அவர்கட்கு,
ஸி. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ்,
புத்தக வியாபாரம்,
ஜ்யார்ஜ் டவுன் போஸ்டு,
சென்னை.

மாதிரிக் கடிதங்கள்

1. உறவினர், நண்பர், முதலியவர்களுக்கு எழுதும் கடிதங்கள்

1. பெரியவருக்கு:

கீழ ஆண்டார் வீதி,
திருச்சி,
7—8—'38.

அன்புள்ள தகப்பனர் அவர்களுக்கு,

வணக்கம். இங்குத் தமக்கை முதலிய யாவரும் நலம். அங்கு எல்லாருடைய நலத்தையும் அடிக்கடி அறிவிக்கவேண்டுகிறேன்.

நான் இங்கு மிகவும் கவனமாக என் பாடங்களைப் படித்து வருகிறேன் ; இவ்வருஷம் பரீக்ஷையில் தேறுவேன் என்று நம்புகிறேன். இப்போது பணம் ஓரளவு வேண்டியிருப்பதால், தங்களிடம் முன்னமே தெரிவித்தபடி ரூபாய் 12 அனுப்ப வேண்டுகிறேன் ; தங்கை ஜானகியை அக்காள் இங்குச் சில நாள் வைத்துக்கொள்ள விரும்புவதால், தாங்கள் விரைவில் அவளை இங்கு அழைத்துக்கொண்டு வருவீர்களென நம்புகிறேன்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள குமாரன்,
கோபாலன்.

2. சிறியவருக்கு:

கீழ்ப் பழுவூர்.
10—8—'38.

சிரஞ்சீவி கோபாலனுக்கு,

அநேக ஆசீர்வாதம். உபய க்ஷேமம். நீ அனுப்பிய கடிதம் கிடைத்தது. நீ கவனமாய்ப் படித்து வருவதைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். உனக்கு இன்னும் இரண்டு நாட்களில்

பணம் அனுப்புகிறேன். பரீக்ஷை நெருங்கிவிட்டதால், கவனமாகப் படிக்கவும். எனக்கு இங்கே இன்னும் 15 நாட்களுக்கு வேலை இருப்பதால், வேலை முடிந்ததும் சௌ. ஜானகியைக் கூட்டிக்கொண்டு வருகிறேன். இதை உன் அக்காளுக்குத் தெரிவிக்கவும்.

இங்ஙனம்,

உன் அன்புமிக்க தகப்பனர்,

நடராஜையர்.

3. நண்பருக்கு :

37, ஐயன் கடைத் தெரு.

தஞ்சாவூர்,

8—9—'38.

அருமை நண்பன் மாணிக்கத்துக்கு,

நலம். நலம் தெரிய விரும்புகிறேன்.

இந்த விடுமுறையில் நான் ஒருவேளை சென்னைக்குச் செல்ல நேரும் என்று கூறியிருந்தேன் அல்லவா? சென்னையில் என் மாமன் வீட்டிலிருந்து நான் எதிர்பார்த்தபடி கடிதம் வந்துவிட்டது. நான் இன்னும் ஒரு வாரத்தில் சென்னைக்குப் புறப்படப்போகிறேன். உன்னை விட்டுத் தனித்துச் சென்ருல், எனக்கு யாதொரு உற்சாகமும் ஏற்படாது. ஆகையால், நீயும் வர வேண்டுகிறேன். கூடிய விரைவில் நீ இங்கு வந்தால், இருவரும் சேர்ந்து புறப்படலாம்.

இங்ஙனம்,

உனது அன்பிற்குரிய நண்பன்,

கோவிந்தசாமி.

15, தெற்கு மாசி வீதி,
மதுரை.
10-4-'41.

அருமைச் சிநேகிதி கமலத்துக்கு,

அநேக ஆசீர்வாதம். உபய க்ஷேமம்.

சென்ற வாரத்தில் நீ எழுதிய கடிதம் கிடைத்தது. உன் தங்கைக்கு இவ்வாண்டு திருமணம் நிச்சயமானதுபற்றி மகிழ்கிறேன். அச்சமயம் நான் அங்கு வரும்போது, நீ கேட்ட திருவிளையாடற்புராண நூலைக் கொண்டுவருகிறேன். ஓய்வு நேரத்தை வீணாக்காமல் தாய் மொழியாகிய தமிழில் பற்று வைத்து, நீ தமிழ் இலக்கியங்களை வாசித்து வருவது மிகவும் நல்லது. நான் சில சமயங்களில் முன் அவ்வாறு படித்து வந்தபோது, நீ என்னைப் பரிகசித்தது உனக்கு நினைவு இருக்கும். அந்த மனப்பான்மையை விட்டு, இப்போது நீயே இவ்வாறு படிக்க முற்பட்டது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

இங்ஙனம்,
உனது அருமைச் சிநேகிதி,
இராஜம்மாள்.

2. அழைப்புக் கடிதங்கள்

திருவாளர் இராமசாமி முதலியார் அவர்களுக்கு,

இருதலையும் இன்பம் பெருகுக.

ஐயா,

6-9-'38 அன்று மாலை கண்டோன்மெண்டில் உள்ள எங்கள் பங்களாவிற்கு, மேன்மை தங்கிய கலெக்டர் துரை அவர்கள் வருவதை முன்னிட்டு, அன்னார்க்கு ஒரு தேநீர் விருந்தும், அதன்பின் ஒரு பாட்டுக் கச்சேரியும் நடத்த நினைத்

திருக்கிறோம். அச்சமயம் தாங்கள் வந்திருந்து என்னைச் சிறப்பிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

உறையூர், திருச்சி,
4—9—'38.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
சுந்தரம் ஐயர்.

ஸ்ரீமதி நீலாம்பிகை அம்மாள் அவர்களுக்கு,
அம்மணி,

நாளை மாலை எங்கள் புது வீட்டில் நண்பர்களுக்கு ஒரு சிறு விருந்து நடத்துவதோடு, பாட்டுக்கச்சேரி ஒன்றும் நடத்த விரும்புவதால், தாங்கள் அச்சமயம் வந்திருந்து எங்களைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

கண்ணகி அகம்,
திருச்சி.
10-11-'39.

வணக்கம்,
அம்மணிஅம்மாள்.

3. விண்ணப்பக் கடிதங்கள்

நகரசபைத் தலைவருக்கு எழுதும் கடிதம்

15, ஆண்டார் தெரு,
திருச்சி.
1—7—'39.

கனந்தங்கிய நகரசபைத் தலைவர் அவர்கள் திவ்விய சமுகத்துக்கு,

தென்னூர் பட்டாபிராம ஐயர் தெருவில் உள்ள பழனிச் சாமி பிள்ளை வணக்கமாக எழுதிக்கொண்ட விண்ணப்ப மாவது :

சமீப காலத்தில் புதிதாகக் கட்டப்பட்ட என் வீட்டிற்குத் தண்ணீர்க் குழாய் வசதி வேண்டியிருப்பதால், ஒரு தண்ணீர்க் குழாய் வைத்துக்கொள்ள உரிமையளிக்க வேண்டுகிறேன்.

அது சம்பந்தமாக முனிசிபல் சட்டப்படி ஏற்படும் செலவுகளை நான் ஒப்புக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன்.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
ஆ. பழனிச்சாமி பிள்ளை.

ஆசிரியர்க்கு எழுதும் கடிதம்

5, வடக்கு மாசி வீதி,
மதுரை.
5—9—'39.

கனந்தங்கிய உபாத்தியாயர், அவர்களுக்கு மாணவன் வீராசாமி வணக்கத்துடன் எழுதுவது:

கனந்தங்கிய ஐயா,

எங்கள் வீட்டில் உள்ளார் யாவரும் எனது அண்ணன் திருமணத்திற்காகத் தஞ்சாவூருக்குப் போகவேண்டியிருப்பதால், நாளை முதல் ஒரு வாரத்திற்கு (6-9'39 முதல் 12-9'39 வரை) எனக்கு விடுமுறை அளிக்குமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
தங்கள் கீழ்ப்படிதலுள்ள மாணவன்,
வீராசாமி.

திருவாளர் மு. இராமலிங்க ஆச்சாரியார் அவர்கள்,
7-ஆம் வகுப்பு ஆசிரியர்,
நகரசபைப் பாடசாலை, மதுரை.

4. வியாபாரக் கடிதங்கள்

27, மண்டி, மயிலஞ்சந்தை,
திருச்சி.
3—10—'39.

அன்பு மிக்க ஐயா,

இச்சமயம் இங்கு அரிசி விலையேறி விற்குமென்று தோன்றுவதால், கல், மண் முதலியன இல்லாமல் தூய்மையாக நல்ல மிளகுசம்பா அரிசி 50 படி மூட்டை, 200 அனுப்பி

வைக்க வேண்டுகிறேன். இன்று தங்கள் பேருக்கு ரூ. 200-0-0 (ரூபாய் இருநூறு மட்டும்) இன்ஷூர் செய்திருக்கிறேன். மற்ற விபரங்களுக்குக் கடிதம் எழுதவும்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
தி. குலசேகரன்.

திருவாளர் கு. முத்துசாமி முதலியார் அவர்கள்,
அரிசி மண்டி,
5, கீழ ராஜ வீதி, தஞ்சாவூர்.

1. கேள்விகள்

1. உன் நண்பன் ஒருவன், உன்னைத் தன் கிராமத்தில் இரண்டு நாட்கள் வந்திருந்து பொழுது போக்க விரும்புகிறான். உன் தகப்பனார் அதற்கு அனுமதி தரவில்லை இதைப் பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.
2. உங்கள் பள்ளிக்கூடத்தில் பந்தய ஆட்டங்கள் நடைபெற்றன. அதில் நீ சில பரிசுகளைப் பெற்றாய். அவைப் பற்றி உன் தகப்பனாருக்கு ஒரு கடிதம் எழுது.
3. ஒரு புத்தகக் கடைக்குச் சில புத்தகங்களை வி. பி. பி.-யில் அனுப்புமாறு கடிதம் எழுது.
4. உங்கள் வீட்டில் நடக்கும் ஒரு சிறப்பு நாள் கொண்டாட்டத்திற்கு விடுமுறை வேண்டும் என்று, உன் ஆசிரியருக்கு ஒரு விண்ணப்பக் கடிதம் எழுது.
5. வீடு தீப்பற்றிய செய்தியைப் பற்றி, நகரசபைக்குத் தெரிவிக்க ஒரு கடிதம் எழுது.

2. இலக்கணம்

பதம் (=சொல்) பகுபதம், பகாப்பதம் என இருவகைப்படும்.

(1) பகுதி, விகுதி முதலியனவாகப் பகுக்கக்கூடிய பதம் பகுபதம்.

(உ-ம்.) பொன்னன் : (பொன்—பகுதி; அன்—விகுதி) பெயர்ப் பகுபதம்.

தேறினன் — (தேறு — பகுதி, இன்—இடைநிலை, ஆன்—விகுதி) வினைப் பகுபதம்.

(2) பகுதி, விகுதி முதலியனவாகப் பகுக்க முடியாத பதம் பகாப்பதம்.

(உ-ம்.) மண் - பெயர்ப் பகாப்பதம்.

நட - வினைப் பகாப்பதம்.

கீழ்வரும் சொற்களில் பகுபதம்,பகாப்பதங்களைக் குறிப்பிடு:-

கல்வி, நாடு, இருந்தார், மரம், உடல், தேர்ச்சி, கலைஞர், பயின்றார், அவள், உண்மை.

பகுபத உறுப்புக்களைப் பிரித்துக் கூறு:—

மணந்தார், விளக்கினர், கூனன், போற்றினர், இடைச்சி, கொன்றனர், கொணர்ந்தான்.

பயிற்சி

1. முதல் கடிதத்தில் உள்ள வாக்கியங்களை எண்ணிச் சொல்லு.
2. அவற்றில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் களைக் கூறு.
3. அவற்றில் உள்ள பெயர், வினை எச்சங்களைச் சொல்லு.
4. இரண்டாம் கடிதத்தில் உள்ள வேற்றுமை உருபுகளைக் கூறு.
5. அதில் உள்ள செயப்படுபொருள் குன்றிய வினை, செயப் படுபொருள் குன்றா வினைகளைத் தெரிவி.
6. மூன்றாம் கடிதத்தில் உள்ள அறுவகைப் பெயர்ச்சொற் களைச் சொல்லு.
7. அதில் உள்ள குற்றியல் உகரம் ஏற்ற சொற்களை எழுது.
8. அதில் உள்ள முக்கால வினைமுற்றுகளையும் கூறு.
9. அவ்வினைமுற்றுகளுக்குப் பகுதி ,விகுதி, இடைநிலைகளைக் கூறு.
10. மூன்றாம் கடிதத்தில் இருக்கும் எழுவாய், பயனிலைகளின் பொருத்தத்தை எடுத்துக் காட்டு.

முத்துக் குளித்தல்



நவீன முறை

பழைய முறை

9. முத்து

முத்து என்பது நவரத்தினங்களுள் ஒன்று. அது வெண்ணிறமும் ஒளியும் உடையது. ஆதலின், பெண் மக்கள் அதனை நகையாகச் செய்து அணிந்து கொள்கின்றனர். அரசர்களது கழுத்திலும் மாலையாக அது விளங்குகின்றது. சிறந்த முத்துகளின் விலை மிகவும் அதிகம்.

கடலிலுள்ள சிப்பிகளிலிருந்து முத்துக்கள் உண்டாகின்றன. அம்முத்துச் சிப்பிகள், இலங்கைத் தீவை அடுத்த **மன்னார்** குடாவிலும், தூத்துக்குடிக்குப் பக்கத்திலுள்ள **பிரவை** என்னும் இடத்திலும், **பாரசீகக் குடா**க்கடலிலும், வேறு சில இடங்களிலும் கிடைக்கின்றன. இவ்விடங்களில் கிடைப்பவை அனைத்தும் வெண்ணிற முத்துக்களே. ஏனைய நிற முத்துக்கள் **மெக்ஸிகோ, கலிபோர்னியா** முதலிய இடங்களில் கிடைக்கின்றன. அவை அவ்வளவு சிறந்தனவாகா. சீன தேசத்தவர்கள் முத்துப் பரிசீலனையில் நிபுணர்கள். அவர்களே முத்துக்கள் உண்டாகும் தன்மையையும் அவற்றைக் கடலிலிருந்து எடுக்கும் வழிகளையும் முதலில் கண்டு பிடித்தவர்கள்.

நாம் ஆறுகளில் காணும் கிளிஞ்சல்களைப் போல, முத்துச் சிப்பிகள் பெரியனவாயும் வட்டமாயும் இருக்கின்றன. அச்சிப்பிகளில் ஒரு வகையான புழுக்கள் இருக்கின்றன. அப்புழுக்களின் முதுகுத் தோலுக்கும், சிப்பிகளின் உட்பாகத்திற்கும் தொடர்புண்டு. தற்செயலாகச் சிப்பியினுடைய துளை வழியாக மணல் நுழைந்து விடுமானால், அது திரும்பிவர முடியாது. ஆகவே அஃது உள்ளிருக்கும் புழுவிற்கு ஒரு வகையான துன்பத்தை உண்டுபண்ணுகிறது. அத்துன்பம் பொறுத புழு, சுற்றிச் சுற்றிப் புரளுகிறது. அப்பொழுது அதன் உடலிலிருந்து ஒரு வகையான நீர் வெளிப்பட்டு

மணலை மூடிக்கொள்ளுகிறது. அதுவே பின்பு சிறந்த முத்தாக மாறுகிறது.

புழுவின் நீரினால் மூடப்பட்ட மணல் சிறந்த முத்தாக மாறுவதற்கு ஐந்து ஆண்டுகள் செல்லும். மதிப்புக் குறைவான முத்துக்கள் எல்லாம் ஓராண்டிற்குள்ளேயே எடுக்கப்பட்டனவாகும்.

முத்துக்கள் எடுப்போர் கடலிற் சென்று மூழ்கி எடுப்பர். அவ்வாறு எடுப்பதற்கு '**முத்துக் குளித்தல்**' என்று பெயர். முத்துக் குளிப்போர் சாதாரணமாக ஐம்பது அல்லது அறுபது பேர் வரையில் படகுகளில் ஏறிக் கடலுக்குள் நெடுந்தூரம் செல்வார்கள். அவர்கள் தண்ணீருள் நெடுநேரம் மூச்சை அடக்கிக் கொண்டு இருக்கக்கூடிய பழக்கம் வாய்ந்தவராக இருப்பர்; தம் உடம்பு முழுதும் ஆமணக்கெண்ணெயைத் தடவிக்கொண்டிருப்பர். கடலுள் ஐம்பது அடி முதல் எழுபத்தைந்து அடி வரையில் உள்ள ஆழமான இடங்களில் முத்துச் சிப்பிகள் கிடக்கும்.

இறங்கும் பொழுது தம்மை இழுத்துக்கொண்டு உள்ளே செல்வதற்காக, கயிற்றால் பிணைக்கப்பட்ட பெருங் கற்களின் மீது வலது காலை ஊன்றி, அதிலுள்ள கயிற்றில் மாட்டிக் கொண்டு நின்றுகொள்வார்கள் ; முத்துச் சிப்பிகளைப் போட்டுக் கொள்வதற்காக இடது காலில் ஒரு வலைப்பையைக் கட்டி வைத்துக்கொள்வர்; வலைப்பையோடு உறுதியான கயிறு ஒன்று கட்டப்பட்டிருக்கும்; உள்ளே சென்றதும், காலில் மாட்டியுள்ள வலைப்பையைக் கழுத்தில் போட்டுக்கொண்டு, அங்கே உள்ள சிப்பிகளை எல்லாம் வாரிவாரிப் போட்டுக்கொள்வார்கள்; நீருள் இனி இருக்க இயலாதென்று கண்டதும், கல்லை விட்டுவிட்டு மேலே வந்துவிடுவார்கள். இவற்றை எல்லாம் இங்கே காட்டியுள்ள படத்திற் பாருங்கள்.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட சிப்பிகளைக் காயவைப்ப தற்காகத் தரையில் குழி தோண்டி, அவற்றை வைத்து மூடி விடுவர். ஒரு வாரமான பின் திரும்பவும் அவற்றை எடுத்துக் கொதிநீரில் போட்டுத் தூய்மைசெய்வர். அப்பொழுது உண்டாகும் நாற்றத்திற்கு ஓர் அளவில்லை; என்றாலும், பெருத்த இலாபம் கிடைக்கும் என்பதனால் பொறுத்துக்கொள்வர். சிலருக்கு அந்நாற்றத்தினால் தொத்து நோய்கள் வருதலும் உண்டு. கொண்டுவரப்பட்ட சிப்பிகளிலெல்லாம் முத்துக்கள் இரா. அதனால், தூய்மை செய்தவற்றை ஒவ்வொன்றாகச் சோதிப்பர். சிலவற்றில் சிறிதும், சிலவற்றில் பெரிதுமான முத்துக்களும், வேறு சிலவற்றில் ஒன்றும் இன்றியும் இருக்கும்.

அச்சமயம் முத்து வியாபாரிகள் சென்று அவற்றை மொத்தமாகவும் சில்லரையாகவும் பெற்றுக்கொள்வர். முத்துக்களில் அவாவுள்ளோர், வியாபாரிகள் கேட்ட பொருளைக் கொடுத்து அவற்றை விலைக்கு வாங்கி மாலையாகவும், மற்றை இரத்தினக் கற்களோடு சேர்த்து அணியாகவும் செய்து அணிந்துகொள்வர். சிறிது காலத்துக்கு முன்பு, சிறந்த முத்து ஒன்று அரபி தேசத்தில் பதினொரு லக்ஷம் பவுனுக்கு விலை போயிற்றாம். உயர்ந்த முத்து எவ்வளவு ஊதியம் தருகிறது என்பதைப் பார்த்தீர்களா? அணிகளுக்குத் தகுதி இல்லாத முத்துக்கள் எல்லாம் மருந்திற்கும் பிறவற்றிற்கும் பயன்படுகின்றன. நம் நாட்டினர் இவ்வகையான முத்துக்களையும் புடம் வைத்து நீற்றிச் சுண்ணாம்பாகவும் ஆக்குகின்றனர். இதுபோல் மேனாட்டினரும் இம்முத்துக்களைப் பல வழிகளில் பயன்படுத்துகின்றனர்.

1. அரும்பத விளக்கம்

நவரத்தினங்கள் - முத்து, பவளம், கோமேதகம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், இரத்தினம், நீலம், பச்சை.

2. கேள்விகள்

1. நவரத்தினங்கள் எவை ?
2. முத்துச் சிப்பிகள் அகப்படும் இடங்கள் எவை ?
3. முத்தெடுப்பதில் நிபுணர் யாவர் ?
4. முத்து எப்படி உண்டாகிறது ?
5. முத்து எப்படி உண்டாகிறதென்று முன்னோர் நினைத்தனர் ?
6. முத்து எடுப்பது எப்படி ?
7. சில தொத்து நோய்களைச் சொல்லு.
8. முத்து விற்கப்படுவது எப்படி ?

3. இலக்கணம்

பகுபதத்துள் பகுதி, விகுதி, இடைநிலை என்பனவே சிறந்த உறுப்புகள். பகுதி சொல்லின் முதலில் வரும்; விகுதி சொல்லின் இறுதியில் வரும்; இடைநிலை சொல்லின் இடையில் வரும்.

(உ-ம்.) (1) செய்தான் = செய் + த் + ஆன்

செய்	த்	ஆன்
↓	↓	↓
பகுதி	இறந்தகால இடைநிலை	ஆண்பால் வினைமுற்று விகுதி

(2) செய்கிருள் = செய் + கிறு + ஆள்

செய்	கிறு	ஆள்
↓	↓	↓
பகுதி	நிகழ்கால இடைநிலை	பெண்பால் வினைமுற்று விகுதி

(3) செய்வார் = செய் + வ் + ஆர்

செய்	வ்	ஆர்
↓	↓	↓
பகுதி	எதிர்கால இடைநிலை	பலர்பால் வினைமுற்று விகுதி

(4) கற்றது = கல் + ற் + து

↓ ↓ ↓

பகுதி இறந்தகால இடைநிலை ஒன்றன்பால் வினைமுற்று விகுதி

(5) கற்கின்றன = கல் + கின்று + அ

↓ ↓ ↓

பகுதி நிகழ்கால இடைநிலை பலவின்பால் வினைமுற்று விகுதி

குறிப்பு:—(1) சென்ற வகுப்பில் படித்த முக்கால இடைநிலைகளை நினைவிற்கொண்டு இவற்றைப் பிரி.

(2) பகுதி—வா, போ, காண், நில், எழு, படி, தூங்கு என்றாற்போல ஏவலாக வருவது. இது தொழிலை உணர்த்தும்.

(3) விகுதி—அன், ஆன்; அள், ஆள்; அர், ஆர்; து, டு, று; அ என்றாற்போல வருவது. இது பாலை உணர்த்தும்.

பயிற்சி

1. கண்டான், வருவாள், போயிற்று, போவான், பழக்கினார், செய்கின்றாள், பார்த்தான், கற்றது, நிற்பன— இவற்றில் உள்ள பகுதி, விகுதி, இடைநிலைகளைக் கூறு.
2. தக்க நிறுத்தக் குறிகளை இடு:—

   அவன் வந்தானா
   ஏன் அவன் வரவில்லை
   அடடா அவனா இறந்தான்
   ஐயோ அவன் நல்லவன்
3. இப்பாடத்தின் முதல் பிரிவில் உள்ள வடசொல், திசைச்சொற்களைக் கூறு.
4. அப்பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்ச்சொற்களைக் கூறு.
5. அதில் உள்ள முக்கால வினைமுற்றுகளைக் கூறு.

6. இரண்டாம் பிரிவில் உள்ள செயப்படுபொருள் குன்றிய வினை, குன்றுவினைகளைச் சொல்லு.
7. மூன்றும் பிரிவில் உள்ள இருதிணை, ஐம்பால் பெயர்களைக் கூறு,
8. நான்காம் பிரிவில் உள்ள உடன்பாட்டு, எதிர்மறை வினைகளைக் கூறு.
9. ஒவ்வொரு பிரிவையும் படித்துத் தலைப்புக் கொடு.
10. செய்யலானுர், ஒழுக்கக்கேடு, படங்களைச் சிறப்பாக, பற்பொடி, கற்பலகை, மணியடி, கோவில், வேலாயுதம், நல்லரசு—இவற்றைப் பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறு.
11. இப்பாடத்தின் பொருளைச் சுருக்கி 20 வரிகளில் கட்டுரை எழுது.
12. முத்து உண்டாக்கும் விதம்—முத்துக் குளித்தல்—முத்தெடுக்கும் இடங்கள்—முத்தின் விலைமதிப்பு: இக்குறிப்புகள் கொண்டு இப்பாடத்தின் பொருளை 4 பிரிவுகளில் ஒரு கட்டுரையாக எழுது.

---

10. வறுமை

வறுமை கொடிதே! வறுமை கொடிதே!
'இன்மை தன்னின் இன்னு தில்'லென
வள்ளுவப் புலவர் வாய்மலர்ந் தருளினர்.
மக்கள் வாழ்வினில் வளருமின் புற்றுச்
சுரத்தல் ஒழிந்து கரத்தல் செய்யும்
வறுமை என்னுமவ் வன்பகை வருமேல்,
நிலங்கள் புலங்கள் நெல்லைக் கரும்பைத்
தந்து செழிக்கினுந் தம்பெரு முயற்சியால்

பெறுவோர்க் கன்றிப் பிறர்க்கவை பயன்படா.
குழிந்த கண்ணும் குறுகிய வுடலும்
தளர்ந்த நடையும் சாம்பிய முகமும்
வறுமையின் வாடுவோர்க் குறுமிலக் கணமாம்.
தெளிந்த விழியும் சீரிய வுடலும்
நிமிர்ந்த நடையும் நேரிய வுடலும்
வறுமையை வென்ற மக்கள் தன்மையாம்.
உண்ண வுணவும் உடுக்க வுடையும்
படுக்கப் பாயும் பயிலக் குடிசையும்
இல்லா ஒருவன் எங்ஙனம் முயலினும்
சிறப்புறு கருத்திற் சிந்தை செலுத்துமா ?
மண்ணினிற் பிறந்து மண்ணில் உழன்று
மண்ணிடை மாயும் மண்புழுப் போன்று
தன்னைப் பற்றியும் தன்னைப் படைத்த
தலைவனைப் பற்றியும் தானினை யாதே
வறியவன் பிறந்து மடிந்தொழிந் திடுமோ ?
தொழிலின் வளத்தைத் துணிபுற வளர்க்கவும்
திரைகடல் ஓடித் திரவியந் தேடவும்
அரசர்க் குரிய அறவினை ஆற்றவும்
நாட்டவர் போற்ற நலம்பொலி வுறவும்
வறியவன் நினைப்பின் வழியுள தாமோ ?
பிறப்பாற் பெறுங்குலம் பிறவுள வேனும்
வறுமை என்னும் சிறுமையை ஒடுக்கிய
சிறப்பாய்ப் பெறுங்குலம் சீருறு முலகினில்
குயிலைக் குரலால் மயிலைத் தோகையால்
அவாவி வளர்க்கும் அறிவுடை மனிதன்
தன்னினத் தொருவன் தலைதாழ் வுறுமிடி
வீழ்ந்திடு மென்னின் வித்தை சிறப்பினும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1942
MADRAS

மதியா னன்றே; மதிநலன் இல்லாக்
கசடனே ஆயினும் கைப்பொருள் உடையனை
மக்கள் இனத்தார் மகிழ்ந்துசூ ழுவரே ;
நாடுகள் தம்முள் ஞானமும் மானமும்
பண்டைப் புகழும் பற்பல இயற்கைச்
சிறப்பும் பொருந்தினும் செல்வ நலமிலார்
ஒன்றையஃ துள்ளன வுரிமையி னடக்குமே !
ஆதலின், வறுமையை அறவே அகற்றி
நன்னெறி முறையால் நற்பொருள் ஈட்டித்
துறைகள் தெரிந்து நிறைவுற வளர்த்த
புகழால் வாழ்வினிற் பொலிந்துவா ழுவமே !

1. அரும்பத விளக்கம்

வறுமை - தரித்திரம், இன்மை - பொருள் இல்லாமை, இன்னாது - கொடியது, வள்ளுவப் புலவர் - திருவள்ளுவர், திருக்குறளை இயற்றிய சங்க காலப் புலவர், சாம்பிய - வெதும்பிய, பயில - வசிக்க, வல்லவன் ஒழிந்திடும் - 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று, அறவினை - தரும வழியில் செய்யும் செயல்கள், ஈட்டி - சம்பாதித்து.

2. கேள்விகள்

1. வள்ளுவப் புலவர் யார் ? அவர் என்ன சொல்லி இருக்கிறார் ?
2. 'பிறர்க்கவ்வ பயன்படா'—எவை ? யாரைத் தவிர ?
3. வறுமையாளர் —இலக்கணம் என்ன ?
4. வறுமையை வென்றவர்—இலக்கணம் என்ன ?
5. 'இல்லா ஒருவன்'—எவை இல்லா ஒருவன் ?
6. மண்புழுப் போன்று மடிவான்—எவன் ? இந்த உவமை எப்படிப் பொருந்தும் ?
7. 'வழியுளதாமோ?'—எவன் நினைப்பின் ? எவற்றை நினைப்பின் ? ஏன் வழியில்லை ?

8. குயில் - மயில் : குறிக்கப்பட்டமை ஏன் ?
9. 'மகிழ்ந்து சூழ்வர்'—எவர் ? எவரை ? ஏன் ?
10. யாரை எத்தகைய மனிதன் மதியான் ? ஏன் ?
11. 'உரிமையின் நடக்குமே'—எது ? எப்படி ?
12. இப்பாடத்தால் நீ அறிவது யாது ?

3. இலக்கணம்

1. **வினையெச்சம்:**—உண்டு (வந்தான்).

உண் + ட் + உ

↓ ↓ ↓

பகுதி | இறந்தகால இடைநிலை | வினையெச்ச விகுதி

2. **பெயரெச்சம்:**—உண்ணுகின்ற (பையன்).

உண் + கின்று + அ

↓ ↓ ↓

பகுதி | நிகழ்கால இடைநிலை | பெயரெச்ச விகுதி

3. **தன்மை வினைமுற்று:**—இது தன்மை ஒருமை வினைமுற்று, தன்மைப் பன்மை வினைமுற்று என இருவகைப்படும். தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் **என், ஏன், அன், அல்** என்பனவாம். இவற்றுள், 'அல்' விகுதி எதிர்காலத்தில் மட்டும் வரும். தன்மைப்பன்மை வினைமுற்று விகுதிகள் **அம், ஆம், எம், ஏம், ஓம்** என்பனவாம்.

(உ-ம்.)

தன்மை ஒருமை

இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்	விகுதி
உண்டனென்	உண்கின்றனென்	உண்பென்	என்
உண்டேன்	உண்கின்றேன்	உண்பேன்	ஏன்
உண்டனன்	உண்கின்றனன்	உண்பன்	அன்
		உண்பல்	அல்

தன்மைப் பன்மை

இறந்தகாலம்	—	நிகழ்காலம்	—	எதிர்காலம்	—	விகுதி
கண்டனம்	—	காண்கின்றனம்	—	காண்பம்	—	அம்
கண்டாம்	—	காண்கின்றும்	—	காண்பாம்	—	ஆம்
கண்டனெம்	—	காண்கின்றனெம்	-	காண்பெம்	—	எம்
கண்டேம்	—	காண்கின்றேம்	—	காண்பேம்	—	ஏம்
கண்டோம்	—	காண்கின்றோம்	—	காண்போம்	—	ஓம்

பயிற்சி

1. இப்பாட்டின் பொருளைச் சுருக்கி 20 வரிகளில் எழுது.
2. இப்பாட்டிற்குரிய பல தலைப்புகள் கொடு.
3. வள்ளுவர் கூற்று—வறியவன் இழிவுநிலை—செல்வன் மிடுக்கு நிலை—செல்வத்தின் அவசியம் : இக்குறிப்புகளைக் கொண்டு வறுமை என்பதுபற்றி 24 வரிகளில் கட்டுரை வரை.
4. இப்பாட்டில் உள்ள பெயர், வினை எச்சங்களைக் கூறு.
5. இதில் உள்ள அறுவகைப் பெயர்களைச் சொல்லு.
6. இதில் உள்ள வாக்கியங்களை ஒழுங்காகக் குறி.
7. அவற்றில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் களைக் கூறு.
8. இதில் உள்ள செயப்படுபொருள் குன்றியவினை, செயப் படுபொருள் குன்றுவினைகளைச் சொல்லு.
9. இதில் உள்ள பொது, சிறப்பு, இடுகுறி, காரணப் பெயர்களைக் கூறு.
10. பயன்படா, அருளினர், வாழுவம், வென்ற, மகிழ்ந்து, தெரிந்த, ஈட்டி — பகுதி, விகுதி, இடைநிலைகளைக் கூறு.

11. சந்தன மரம்

மர இனங்களுள் சந்தன மரம் நமக்கு மிகவும் பயன் படும் சிறந்த மரமாகும். திருமணம், பூசை முதலான நற் காரியங்களுக்கும், திருவிழா முதலிய கொண்டாட்டங் களுக்கும் சிறப்பாக நாம் பயன்படுத்தும் நறுமணப் பொருள் களுள் சந்தனமும் ஒன்ருகும். ஆகையால், நமக்கு இத்துணை உபயோகமான சந்தனத்தைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியமன்ருே?

இச்சந்தன மரங்கள் மைசூர் இராஜ்யத்திலும், மலையாளத் திலும், சேலம் ஜில்லாவிலும், தெற்கேயுள்ள பொதிய மலையி லும் மிகுதியாகக் காணப்படுகின்றன. அன்றியும் மலேயா, சாவ கம் முதலான இடங்களிலுள்ள மலை நாடுகளிலும் இம் மரங்கள் மிகுதியாகப் பயிரிடப்படுகின்றன. ஆயினும், நம் தமிழ் நாட்டிலுள்ள சந்தன மரங்களைப் போல மலேயா, சாவ கம் முதலிய தீவுகளில் விளைவன சிறந்தன ஆகா. முற்காலத் தில் நம் நாட்டவரிடமிருந்து சந்தனக் கட்டைகளையும், ஏலம், மிளகு, இலவங்கம் முதலிய நறுமணப் பொருள்களையும் பிற நாட்டார் வாங்கிக்கொண்டு சென்றனர் என்று, நம் நாட்டுப் பழந் தமிழ்நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. இதனுல், முன்னுளி லும் நம் தமிழ் நாட்டு இயற்கை விளைபொருள்களில் சந்தன மரங்கள் மிக உயர்ந்தனவாகக் கருதப்பட்டு வந்தன என்று கூறுதல் மிகையாகாது.

சாதாரணமாக, ஏனைய சில வகையான மரங்களைப்போலச் சந்தன மரங்கள் மிக்க உயரமாய் வளருவதில்லை; சற்றேறக் குறைய, கொய்யா முதலிய மரங்களை ஒத்த உயரமும் சுற்றளவும் உடையனவாக வளரும். நிலத்தின் தட்ப, வெப்ப நிலைக்கு ஏற்றவாறு அதன் வளர்ச்சியும் அமையும். மலையாளத் திலும் சேலம் ஜில்லாவிலும் மைசூர் இராஜ்யத்திலும் இம்

மரங்கள் சாதாரணமாக ஐம்பதடி உயரமும், ஆறு அல்லது ஏழு அடிச் சுற்றளவும் உடையனவாக இருக்கின்றன என்று கூறப் படுகிறது. சில நாடுகளில் இவை, கடல் மட்டத்திற்கு ஆயிரத் திருநூறு அடி மேடான இடங்களிலும், மற்றுஞ் சில நாடு களில் மூவாயிரம் அடி உயரமான இடங்களிலும் செழித்து வளருகின்றன. ஐம்பது ஆண்டுகள் ஜீவித்திருக்கும் மரங்களி லேதான், வைரம் பற்றி உயர்ந்த வாசனையுள்ள கட்டைகள் கிடைக்கும். ஐம்பதாண்டு நிரம்பப் பெருத மரங்களில் வைரம் பற்றிய கட்டைகள் கிடைப்பதில்லை. வைரம் பற்றிய கட்டை மஞ்சள் நிறம் கலந்த வெண்மை நிறமுடையதாக இருக்கும். மரத்தின் மேற்பாகத்திலுள்ள கட்டைகள் வெளுத்துக் காணப்படும். அவை சந்தனம் அரைப்பதற்கு உபயோகப் படமாட்டா; பெரும்பாலும் விறகிற்கே பயன்படுகின்றன. அவற்றின் இலைகள் ஆடுமாடுகளுக்கு உணவாகின்றன.

சந்தன மரங்களைப் பயிரிடுவோர், அவற்றின் விதைகளை நன்ருகக் காயப்போட்டு வைப்பர். அவ் விதைகள் சாதாரண மாக, மிளகைப் போலவே உருட்சியும் திரட்சியும் உடையன வாக இருக்கும். அவ்வாறு காயவைத்த விதைகளை, மழை பெய்து பூமி குளிர்ந்தவுடன் நிலத்தில் குழி தோண்டி, இரண் டிரண்டு விதைகளாகப் போட்டு மூடிவிடுவர். அதன்பின், அக் குழிகளிலிருந்து விதைகள் முளைகளாகி வெளியில் வரு வதற்கு ஒரு மாத காலமாகும். அதற்குள், அவற்றிற்கு யாதொரு ஊறும் நேராதபடி, அவற்றைச் சுற்றிலும் முள் வேலிகளை அமைத்தோ, அல்லது உயரமான வரப்புகளைக் கட்டியோ பாதுகாப்பர். முளை கிளம்பியவுடன் அச்செடிகளை மிகவும் சாக்கிரதையாகப் பாதுகாப்பது வழக்கம். அன்றியும், அம்முளைகள் சூரிய வெப்பத்தால் பட்டுப் போகாதவாறும், சூரிய வெளிச்சம் சிறிது படுமாறும் அவற்றின்மேல் தழை களைப் போட்டு மூடிவைப்பதும் உண்டு. இவ்வாறு

கிளம்பிய முளைகள் செடிகளாகிப் பின்பு மரங்களாய் வளருவதற்கு ஏறக்குறைய இருபது வருடகாலம் பிடிக்கும். அதன்பின், அடிமரம் வைரம்பற்றி நமக்குப் பலன் கொடுப்ப தற்கு, அதற்குமேல் முப்பது வருடகாலம் செல்லும்.

சந்தன மரத்தின் இலைகள் தனித்தனியாயும், பசுமை நிறம் உடையனவாயும், நுனி கூர்மையாயும், அடிப்பாகம் அகன்றும் இருக்கும். அவை, கிளைகளின் இருமருங்கிலும் எதிர் எதிராகவே இருக்கும். பூக்களோ, இலைகளை அடுத்தும் கிளைகளை அடுத்தும் கொத்துக் கொத்தாகக் காணப்படும். காய்களும் கனிகளும் பெரும்பாலும் நாவல் மரத்தின் பழங்களையும் காய்களையும் ஒத்தனவாக இருக்கும்.

நமக்கு இம்மரத்தில் உபயோகப்படுவன எல்லாம், அடி மரத்தில் வைரம் பற்றியிருக்கும் பாகமும் அடிவேருமே ஆகும். சந்தன மரத்தின் மேற்பாகமும் கிளைகளும் சந்தனம் அரைப் பதற்குப் பயன்படா; விறகாக உபயோகிப்பதற்கே பயன்படு வனவாம். அடிமரத்தின்மேல் மூடிக்கொண்டிருக்கும் சிறு சிறு பொருக்குத் துண்டுகளை, மலைகளில் வாழும் மக்கள் தாம் பூலத்திற்குப் பாக்குப்போல உபயோகிக்கின்றனர்.

வெண்ணிறமான கட்டைகளில் மணம் இராது. எனினும், வர்த்தகர்கள் அவற்றைக் கொண்டுபோய்க் கடைகளில் குறைந்த விலைக்கு விற்றுவிடுவர். சந்தன வியாபாரிகள் அவற்றையும் அறைத்து, அவற்றுடன் நல்ல வாசனைப் பொருள் களைச் சேர்த்துக் **கலவைச் சந்தனம்** என்று விற்பனை செய்வர். சந்தன மரத்தின் கிளை, காய், கனி முதலியன நமக்கு மிகுதியா கப் பயன்படாவிடினும், அதன் அடிமரம் பல விதத்திலும் பயன்படுகின்றது. அரசர்களும் பிரபுக்களும் சந்தன மரத்தினு லேயே ஆசனங்களும், நாற்காலிகளும், ஊன்றுகோல்களும் செய்துகொள்ளுகின்றனர். அப்பொருள்கள் உறுதியாகவும்

நல்ல வாசனை உடையனவாகவும் இருக்கும். மேலும் அம் மரத்தாலாகிய பொருள்களைக் கரையான் அரிப்பதில்லை. அவை தண்ணீரினாலும் கெட்டுப்போவதில்லை.

நம் அரசாங்கத்தார், சந்தன மரங்களில் கிடைக்கும் இலாபத்தைக் கருதி, அவை இருக்கும் இடங்களில் காவல் வைத்துக் காக்கின்றனர்; வருடந்தோறும் முதிர்ந்த மரங்களை வெட்டி மணத்திற்குத் தக்கவாறு கட்டைகளைப் பிரித்து ஏல விற்பனை செய்கின்றனர். மைசூர் அரசாங்கத்தாரோ, அவற்றில் கிடைக்கும் மிகுந்த இலாபத்தைத் தாமே அடையக் கருதி, தாங்களே அவற்றைப் பக்குவம் செய்து சந்தனம், சோப்பு, தைலம் முதலியன தயாரித்துப் பிறநாடுகளுக்கு அனுப்பி, அளவில்லா ஊதியத்தை அடைகின்றனர். சாதாரணமாகச் சந்தனக் கட்டை, 'டன்' ஒன்றிற்கு ஆயிரம் ரூபாய் விலை மதிப்புள்ளதாக இருக்கின்றது.

நம் நாட்டில் வாழும் இந்துக்களும், கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் பிறரும் நற்காரியங்களில் சந்தனத்தை அரைத்துப் பூசிக்கொள்கின்றனர். சிலர், அனலில் சாம்பிராணிக்குப் பதிலாகச் சந்தனத் தூளைப் போட்டுத் தூபம் இடுகிறார்கள். அன்றியும், இம்மரத்தின் வைரம் பற்றிய கட்டைகளிலிருந்து சந்தன அத்தரும் தைலமும் இறக்குகிறார்கள். அவை அதிக விலையுடையனவாயும், நறுமணப் பொருள்களில் எல்லாம் சிறந்தனவாயும் இருக்கின்றன. ஆதலின், எல்லா மதத்தினரும் அவற்றைப் பல்வேறு வகைகளில் பயன்படுத்திக் கொள்கின்றனர். சந்தனத் தைலத்தை நாற்பத்தைந்து தினங்கள் வரையில் ஒன்றுவிட்டு ஒருநாள் முறையாகத் தேய்த்து நீராடி வந்தால் மூளைக் கொதிப்பும் வயிற்றுவலி முதலிய உடலைப் பற்றிய நோய்களும் நீங்கிவிடுகின்றன. மேலும், வைத்தியர்கள் சந்தனக் கட்டைகளைக் கொண்டு சில மருந்துகளும் செய்கின்றனர்.

இத்தகைய நன்மைகள் இம்மரங்களினுல் உண்டாவதால், நம் அரசாங்கத்தார் மலைப் பிரதேசங்களிலும் காடுகளிலும் காவல் வைத்து, இம்மரங்களை எவரும் வெட்டாவண்ணம் காத்து வருகின்றனர். அன்றியும் யாருடைய நிலத்தில் சந்தன மரம் இருந்தாலும், இம்மரத்தின் பலனை அனுபவிக்கும் பொழுது, அவர்கள் அரசாங்கத்தாருடைய விதிகளை அனுசரிக்க வேண்டுமென்று சில சட்ட திட்டங்களையும் ஏற்படுத்தி இருக்கின்றனர். இதுபோலவே பிற நாடுகளிலும் இச்சந்தன மரத்தைப் பொறுத்த வரையில் சிற்சில சட்டதிட்டங்கள் ஏற்பட்டுள்ளன.

1. அரும்பத விளக்கம்

நறு - நல்ல; ஊறு - கெடுதல்; பல்வேறு - பல விதமான.

2. கேள்விகள்

1. சந்தன மரத்தைப் பற்றி நாம் ஏன் தெரிந்துகொள்ள வேண்டும் ?
2. இம்மரங்கள் எங்கே காணப்படுகின்றன ?
3. சந்தன மரத்தின் வளர்ச்சியைப் பற்றி உனக்கென்ன தெரியும் ?
4. சிறந்த சந்தனக் கட்டைகள் எத்தகைய மரங்களில் கிடைக்கும் ?
5. சந்தன மரத்தைப் பயிராக்குவது எவ்வாறு ?
6. சந்தன மரத்து இலை, பூ, காய், கனிகளைப் பற்றி நீ யாது அறிவாய் ?
7. மரத்தின் எந்தப் பகுதி சந்தனம் அரைக்கப் பயன்படுகிறது ?
8. மரத்தின் பொருக்கு எதற்குப் பயன்படுகிறது ?
9. 'கலவைச் சந்தனம்'—என்பது யாது ?
10. அடிமரம் எப்படிப் பயன்படுகிறது ?
11. அரசாங்கத்தார் சந்தன மரக் காடுகளை எப்படிக் காத்து இலாபம் பெறுகின்றனர் ?
12. மைசூர் அரசியலார் சந்தன மரத்தைக்கொண்டு யாது செய்கின்றனர் ?
13. சந்தன மரத்தால் செய்யப்படும் பொருள்கள் யாவை ?

3. இலக்கணம்

1. முன்னிலை வினைமுற்று :—இது முன்னிலை ஒருமை வினைமுற்று, முன்னிலைப் பன்மை வினைமுற்று என இருவகைப்படும். முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகளாவன : ஐ, ஆய், இ என்பன. இவற்றுள் இகர விகுதி தானே எதிர்காலம் காட்டும். முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் இர், ஈர் என்பனவாம்.

(உ-ம்.)

முன்னிலை ஒருமை

இறந்தகாலம்	—	நிகழ்காலம்	—	எதிர்காலம்	—	விகுதி
சென்றனை	—	செல்கின்றனை	—	செல்வை	—	ஐ
சென்றாய்	—	செல்கின்றாய்	—	செல்வாய்	—	ஆய்
சென்றி	—	செல்லாநின்றி	—	சேறி	—	இ

முன்னிலைப் பன்மை

இறந்தகாலம்	—	நிகழ்காலம்	—	எதிர்காலம்	—	விகுதி
சென்றனிர்	—	செல்கின்றனிர்	—	செல்விர்	—	இர்
சென்றீர்	—	செல்கின்றீர்	—	செல்வீர்	—	ஈர்

2. படர்க்கை வினைமுற்று :—இஃது ஆண்பால் வினைமுற்று, பெண்பால் வினைமுற்று, பலர்பால் வினைமுற்று, ஒன்றன்பால் வினைமுற்று, பலவின்பால் வினைமுற்று என ஐந்து வகைப்படும். ஒருமை, பன்மைகள் இவற்றுக்குள்ளேயே அடங்கியிருத்தல் காண்க. படர்க்கை வினைமுற்று விகுதிகளாவன :

				விகுதிகள்
(1)	ஆண்பால்	வினைமுற்று	—	அன், ஆன்
(2)	பெண்பால்	வினைமுற்று	—	அள், ஆள்
(3)	பலர்பால்	வினைமுற்று	—	அர், ஆர், ப, கள்
(4)	ஒன்றன்பால்	வினைமுற்று	—	து, று
(5)	பலவின்பால்	வினைமுற்று	—	அ

இவற்றுள் 'ப' விகுதி நிகழ்காலத்தில் வராது ; தானே காலங் காட்டும். 'று' விகுதி இறந்த காலத்தில் மட்டுமே வரும். 'கள்' விகுதி, விகுதிமேல் விகுதியாக வரும்.

ஆண்பால் வினைமுற்று

(உ-ம்.)

இறந்தகாலம்		நிகழ்காலம்		எதிர்காலம்		விகுதி
செய்தனன்	-	செய்கின்றனன்	-	செய்வன்	-	அன்
செய்தான்	-	செய்கின்றான்	-	செய்வான்	-	ஆன்

பெண்பால் வினைமுற்று

செய்தனள்	-	செய்கின்றனள்	-	செய்வள்	-	அள்
செய்தாள்	-	செய்கின்றாள்	-	செய்வாள்	-	ஆள்

பலர்பால் வினைமுற்று

செய்தனர்	-	செய்கின்றனர்	-	செய்வர்	-	அர்
செய்தார்	-	செய்கின்றார்	-	செய்வார்	-	ஆர்
செய்ப	-	——	-	செய்ப	-	ப
செய்தார்கள்	-	செய்கின்றார்கள்	-	செய்வார்கள்	-	கள்

ஒன்றன்பால் வினைமுற்று

செய்தது	-	செய்கின்றது	-	செய்வது	-	து
போயிற்று	-	——	-	——	-	று

பலவின்பால் வினைமுற்று

செய்தன	-	செய்கின்றன	-	செய்வன	-	அ

பயிற்சி

1. இப்பாடத்தைப் படித்துப் பிரிவுகளுக்கு உரிய தலைப்புகள் கொடு.
2. சந்தனமரம் பயிராகும் இடங்கள், பயிரிடும் விதம், பயன், அரசியலார் செய்துள்ள ஏற்பாடுகள் : இக்குறிப்புகளைக் கொண்டு இப்பாடத்தை ஒரு கட்டுரையாக எழுது.
3. வந்தேன், வந்தாய், வந்தோம், வந்தீர், வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன - இவை என்னென்ன வினைமுற்றுகள் ? விகுதிகள் 'இன்ன விகுதிகள்' எனக் கூறு.
4. இப்பாடத்தின் முதல் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறு.

5. இரண்டாம் பிரிவில் உள்ள வினைப் பகுபதம், வினைப் பகாப்பதங்களைக் கூறு.

6. மூன்றும் பிரிவில் உள்ள முற்று, எச்சங்களைச் சொல்லு.

7. நான்காம் பிரிவில் உள்ள வேற்றுமை உருபுகளைத் தெரிவி.

8. ஐந்தாம் பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்ச்சொற்களைக் கூறு.

9. ஆறும் பிரிவில் உள்ள செயப்படுபொருள் குன்றிய வினை, குன்றா வினைகளைக் குறிப்பிடு.

10. ஏழாம் பிரிவில் இருக்கும் பொது, சிறப்பு, இடுகுறி, காரணப் பெயர்களைச் சொல்லு.

11. நற்காரியம், கொண்டாட்டம், தீவுகள், ஊறு, கொத்துக் கொத்தாக. - இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்லு.

12. சிறந்த, நறுமணம், முற்காலம், சில, ஏற்றவாறு, ஒத்தன வாக - எதிர்ப்பதங்கள் கூறு.

---

12. உடற்பயிற்சி

கடவுளால் அருளப்பட்ட உடல் நல்ல நிலைமையில் இருந்தால்தான், நாம் நம் கடமைகளைச் சரிவரச் செய்ய இயலும். இவ்வுடல் நுட்பமான ஓர் இயந்திரம் போன்றது. இது இயல்பாகவே சுறுசுறுப்பும் ஊக்கமும் உடையதாய் வேலை செய்வதற்கெனவே அமைக்கப்பட்டது. உடல் வருந்த உழைத்து வேலை செய்யும் உழைப்பாளிகள் ஆரோக்கியத்துடன் வாழ்வதும், தாம் ஒன்றும் வேலை செய்யாது பணியாளர்களால் வேலை செய்வித்துக்கொள்ளும் செல்வவான்கள் அடிக்கடி பற்பல நோய்களால் பீடிக்கப்பட்டு வருந்துவதும் தினமும் நாம் கண்கூடாகக் காணும் காட்சிகளாம்.

ஒட்டப்படாத இயந்திரம் பாழாவது போலவே வேலையற்றுச் சோம்பலாக இருந்தால் உடம்பு பாழாகும். உடல் நலமுற்று இருப்பதற்கு உடற்பயிற்சி இன்றியமையாதது. இவ்வுலகில் மனிதர் தமது வாழ்க்கையை நடத்தப் பற்பல தொழில்களைச் செய்கின்றார்கள். உத்தியோகசாலையில் வேலை செய்யும் எழுத்தாளர்கள், நியாயாதிபதிகள் முதலியோர் மனோ முயற்சியையே அதிகம் கொண்டவர்களாகவும், தச்சு, கொல்லு முதலிய தொழில்களைச் செய்பவர்களும், உழுதொழில் செய்யும் குடியானவர் முதலியோரும் உடல் உழைப்பையே அதிகம் உடையவர்களாகவும் இருக்கிறார்கள். உடல் உழைப்பையே பிழைப்பாகக் கொண்டுள்ளவர்கள் சில சமயங்களில் அளவுக்கு மேலும் உழைக்க நேரிடுகிறது. அதனால் அவர்கள் உடல் நலம் குன்றியவர்களாகவும் ஆகிறார்கள். ஆகையால், தொழிலாளர்களுக்கு உடற்பயிற்சி வேண்டுவதின்று. மனோ முயற்சியை மட்டும் கொண்டவர்களுக்கே அது அதிக அவசியம். தேகப்பயிற்சி இல்லாது மனமுயற்சியை மட்டும் உடையவர், நாளடைவில் சிறிது சிறிதாகத் தமது உடல் நலம் குன்றி, இராக் காலத்தில் தூக்கம் இல்லாதவர்களாகவும், ஜீரண சக்தி குறைந்தவர்களாகவும் ஆகிறார்கள்.

உடற்பயிற்சி செய்யுங்கால் உடம்பிலுள்ள கை, கால் முதலிய உறுப்புகள் அசைகின்றன. அவ்வாறு அசைவதால் உடலிலுள்ள இறைச்சி இரத்தக் குழாய்களை அழுத்த, அதனால் இரத்தம் வேகமாகத் தள்ளப்படுகிறது. அவ்விரத்தம் வேகமாக ஓடத் தொடங்கி உடம்பு முழுவதும் விரைவில் பரவுகிறது. இக்காரணத்தால் இருதயம், காற்றுப்பை, குடல் முதலிய உறுப்புகள் தத்தம் வேலைகளை வேகமாகச் செய்கின்றன. இதனால், அதிக இரத்தம் விரைவில் தூய்மை செய்யப்பட்டு விரைவில் உடல் முழுவதும் பரவுகிறது. இவ்வாறே, உடம்பிலுள்ள அழுக்கும் வியர்வையாக விரைவில் கழிந்து விடுகின்றது. இங்ங


S.B

னம் உடல் முழுதும் பரவும் தூய இரத்தம் உடம்பிற்கு ஊட்டம் கொடுத்து, உடல் வன்மை, ஊக்கம், உற்சாகம், ஞாபக சக்தி முதலியவற்றை உண்டாக்குகிறது.

உடற்பயிற்சியை இளமை தொட்டே செய்துவந்தால் அது மிகுந்த நன்மை பயக்கும். இளமையில் இயற்கையிலேயே வளரும் தன்மையை உடல் பெற்றிருப்பதால், உடற்பயிற்சியால் அவ்வியற்கைத் தன்மை மிகுதியாக்கப்பட்டு, மார்பு விசாலிப்பு, நாடி நரம்புகள் வலிமை உடையனவாதல், தசை நார்கள் வன்மை உடையனவாக ஆதல், உடல் உயரமும் பருமனும் மிகுதல் முதலிய பல நன்மைகள் உண்டாகின்றன.

உடற்பயிற்சி செய்வதற்குக் காலையும் மாலையுமே ஏற்ற காலங்களாம்; அதிலும் காலை நேரம் மிகவும் நல்லது. காலையில் தூக்கத்தை விட்டு எழுந்திருந்ததும், காலைக் கடன்களை முடித்துவிட்டு உடற்பயிற்சி செய்யத் தொடங்கவேண்டும். இக்காலத்தில் இரவில் உண்ட உணவு ஜீரணமாகி மலமும் கழிக்கப்பட்டுப் போய்த் தேகம் நிர்மலமாயும், கலகலப்பாயும் இரவில் தூங்கிய தூக்கத்தால் சோர்வு நீங்கி, வேலை செய்யத்தக்க நிலையிலும் இருப்பதால், உடற்பயிற்சி செய்வதற்கு மிகவும் ஒத்த காலம் இதுவெனக் கூறப்பட்டது. காலையில் உடற்பயிற்சி செய்தவுடன் வியர்வையும் சோர்வும் நீங்குகிற வரையில் இளைப்பாறி யிருந்து, பிறகு குளித்துவிட்டு உணவருந்த வேண்டும்.

அவரவர் வயதிற்குத் தக்கபடி மிகுதியாகவோ, அல்லது குறைவாகவோ உடற்பயிற்சி செய்யவேண்டும். உடற்பயிற்சி செய்கின்றவன் தொடக்கத்தில் சில பயிற்சிகளையும், பிறகு நாள் செல்லச் செல்லப் படிப்படியாகப் பல பயிற்சிகளையும் செய்ய வேண்டும்; அளவுக்கு மிஞ்சி ஒருபோதும் செய்யக்கூடாது. 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்' அன்றோ? உண்டவுடனே யாவது, மிக்க பசியாயிருக்கும் காலங்களிலாவது உடற்பயிற்சி

செய்தல் கூடாது. உண்டதிலிருந்து, குறைந்தது மூன்றுமணி நேரம் சென்ற பிறகே உடற்பயிற்சி செய்யத் தொடங்க வேண்டும். உடற்பயிற்சி செய்யுங் காலங்களில் இடையிடையே சிற்றுண்டிகள் உட்கொள்ளுதலும் நீர்பருகுதலும் ஆகா. உடலில் உள்ள ஒவ்வோர் உறுப்பும் பயிற்சி பெறுமாறு செய்யும் உடற்பயிற்சியே சிறந்தது. உதாரணமாக இப்பொழுது பள்ளிக்கூடங்களில் செய்யப்படும் **டிரில்** என்னும் பயிற்சியைக் கூறலாம். பள்ளிக்கூடங்களில் இதுவன்றி, ஓடுதல், தாண்டுதல், பலவிதப் பந்து விளையாடுதல், நீந்துதல், பலவிதக் கரணங்கள் போடுதல், பார் முதலிய ஆட்டங்கள் ஆடுதல், சிலம்பம் பழகுதல் முதலியவையும் உடற்பயிற்சிக்கு ஆனவைகளே. ஆனால், இவற்றை அவ்வளவு மேலான பயிற்சிகளென்று கூற இடமில்லை. ஏனெனில், இவற்றுட் சில பயிற்சிகள் உடம்பிலுள்ள சிற்சில உறுப்புகளுக்கு மட்டுமே பயிற்சியைக் கொடுப்பனவாக இருக்கின்றன; சில பயிற்சிகள் உறுப்புகளுக்கு ஊனம் உண்டாக்குவனவாக இருக்கின்றன. சில பயிற்சிகள் உயிருக்கே கேடு விளைவிப்பனவாக இருக்கின்றன. ஆனாலும், இவற்றை முற்றும் விட்டுவிட வேண்டும் என்று சொல்ல இயலாது. ஏனெனில், இவற்றுட் சில ஆபத்துக் காலத்தில் உதவி செய்ய உதவுவதால், கவனமாகத் தக்க ஆசிரியர்களது உதவி கொண்டு இவற்றைக் கற்றுக்கொள்ளலாம். முதியவர்களுக்கு ஏற்ற உடற்பயிற்சியாவது உலாவுதலாம்; தூய காற்றுத் தாராளமாக வீசும் வெளியிடங்களே உலாவுவதற்கு ஏற்ற இடங்களாம். அவ்விதம் உடற்பயிற்சி செய்வதற்கும் நல்ல தனி இடங்கள் வேண்டும். அவ்விடங்கள் போதுமானபடி அகன்றவையாகவும், தூய காற்று உலாவப் பெற்றவையாகவும் இருக்கவேண்டும்.

அறியாமையினால் சிலர் விலாப்புடைக்க உண்பதும், எப்பொழுதும் உறங்குவதும் உடம்பிற்கு நன்மை பயப்பதெனக்

கருதுகின்றனர். சோம்பலால் சிலர் உடற்பயிற்சியைக் கைக் கொள்வதில்லை. வேறு சிலர் தொடக்கத்தில் சில நாள் உடற்பயிற்சி செய்துவிட்டு, அதனுல் முதலில் சிறிது உடல் வலி ஏற்பட, 'இது துன்பத்தைத் தருவது' எனக் கருதி விட்டு விடுகின்றனர். பணக்காரர்களில் பலர் பணியாளரைக் கொண்டு வேலை செய்வித்துக் கொள்ளுவதே பெருமை தரும் எனக் கருதித் தமக்கு வேண்டிய எல்லா வேலைகளையும் வேலையாளர் களாலேயே செய்வித்துக் கொள்கின்றனர். இத்தகையோர் யாவரும் உடல்நலம் குன்றி, உற்சாகம் குறைந்து, பலவித நோய்வாய்ப்பட்டு வருந்துவர் என்பதில் ஐயமுண்டோ ?

ஆகையால், நீங்கள் தினந்தோறும் சிறிது நேரமாவது தவ ருமல் உடற்பயிற்சி செய்ய முயலுங்கள்; உங்கள் பள்ளிக் கூடத்தில் அதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் நேரத்தில் தவ ருது சென்று பயிலுங்கள்.

1. அரும்பத விளக்கம்

சுறுசுறுப்பு - இஃது இரட்டைப்படவே வரும் சொல். ஆத லின், இஃது இரட்டைக் கிளவி (கிளவி - சொல்) எனப்படும். படபடப்பு, கடுகடுப்பு, படபட, தடதட - இரட்டைக் கிளவிகள்.

பாம்பு பாம்பு-இது பிரிக்கக் கூடிய தொடர். ஆதலின், இஃது அடுக்குத் தொடர் எனப்படும்.

2. கேள்விகள்

1. காரணங் கூறு :—

   (i) தொழிலாளர்களுக்கு உடற்பயிற்சி வேண்டுவதின்று.

   (ii) உடற்பயிற்சியை அளவுக்கு மிஞ்சி ஒருபோதும் செய் யக் கூடாது.

2. உடற்பயிற்சியை இளமை தொட்டே ஏன் செய்ய வேண்டும் ?

3. உடற்பயிற்சிக்கு மாலையைவிடக் காலையே ஏற்றதென்பதைக் காரணத்துடன் விளக்கு.

4. 'அளவுக்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சாகும்' - இப் பழமொழியின் கருத்தை விளக்கு.

5. ஆசிரியர்களின் உதவிகொண்டு செய்ய வேண்டும் பயிற்சிகள் யாவை?

6. முதியவர்கள் எவ்வாறு தமது உடல் நலத்தைப் பாதுகாத்துக் கொள்ளலாம்?

3. இலக்கணம்

சில வினைச்சொற்கள்

I. வினைச்சொல்லை செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றா வினை என இரண்டு பிரிவுகளாகவும் பிரிக்கலாம்.

1. **செயப்படுபொருள் குன்றிய வினை :—** செயப்படுபொருள் இல்லாத வினை செயப்படுபொருள் குன்றிய வினையாம்.

(உ-ம்.) ஓடிற்று, நடந்தான்.

2. **செயப்படுபொருள் குன்றா வினை :—** செயப்படுபொருள் உள்ள வினை செயப்படுபொருள் குன்றா வினையாம்.

(உ-ம்.) செய்தான், படித்தான்.

II. வினைச்சொல்லை தன்வினை, பிறவினை என வேறு இரண்டு வகைகளாகவும் பிரிக்கலாம்.

1. **தன்வினை:—** ஒரு தொழிலை ஒருவன் தானே செய்வதாகக் குறிப்பது தன்வினையாம்.

(உ-ம்.) படித்தேன், நடந்தாய், அடிப்பான்.

2. **பிறவினை :—** ஒரு தொழிலை ஒருவன் மற்றொருவனைக் கொண்டு செய்விப்பதாகக் குறிப்பது பிறவினையாம்.

(உ-ம்.) படிப்பித்தேன், கட்டுவித்தாய்.

III. வினைச்சொல்லை **செய்வினை, செயப்பாட்டுவினை** என வேறு இரண்டு வகையாகவும் பிரிக்கலாம்.

1. **செய்வினை** :—கருத்தாவின் தொழிலை நேராய்க் குறித்துக் காட்டும் வினை செய்வினையாம்.

(உ-ம்.) இராமன் கிருஷ்ணனை **அடித்தான்.**

மாடு வண்டியை **இழுத்தது.**

இவ்வாக்கியங்களில் உள்ள வினைகள் கருத்தாவின் தொழிலை நேராய்க் குறித்தல் காண்க.

2. **செயப்பாட்டு வினை** :—கருத்தாவின் தொழிலைச் செயப்படுபொருள் ஏற்றதாகக் காட்டும் வினை செயப்பாட்டு வினையாம். இஃது **அகரச் சாரியையையும், 'படு'** விகுதியையும் பெற்று வரும்.

(உ-ம்.) கிருஷ்ணன் இராமனுல் **அடிக்கப்பட்டான்.**

வண்டி மாடுகளால் **இழுக்கப்பட்டது.**

இவற்றிலுள்ள வினைகள் கருத்தாவின் தொழிலைச் செயப்படு பொருள்கள் ஏற்றனவாகக் காட்டுதல் காண்க. மற்றும் அகரச் சாரியையும் 'படு' விகுதியும் பெற்று வருதல் காண்க.

பயிற்சி

1. சரிவர, சுறுசுறுப்பு, கண்கூடாக, உழைப்பு, ஏற்ற, ஊட்டம் - இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்லு.
2. முதல் பிரிவில் உள்ள தன்வினை, பிற வினைகளைக் கூறு.
3. இரண்டாம் பிரிவில் உள்ள செய்வினை, செயப்பாட்டு வினைகளைத் தெரிவி.
4. மூன்றும் பிரிவில் உள்ள செயப்படுபொருள் குன்றுவினை, செயப்படுபொருள் குன்றிய வினைகளைக் கூறு.
5. கண்டேன், தூங்கினர், படித்தோம், எழுகிருய், வருவீர், நிற்கிருன், குனிந்தன, ஆடிற்று, நகைப்பாள்.—என்ன வினைமுற்றுகள் ?
6. இவற்றில் உள்ள பகுதி, விகுதி, இடைநிலைகளைக் கூறு.
7. ஒவ்வொரு விகுதியும் 'இன்ன விகுதி' எனக் கூறு.

8. ஒவ்வோர் இடைநிலைக்கும் காலம் கூறு.
9. நான்காம் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் கூறு.
10. ஐந்தாம் பிரிவில் இருக்கும் தொழிற் பெயர் வினையால் அணையும் பெயர்களைச் சொல்லு.
11. ஆறும் பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்ச்சொற்களைக் குறிப்பிடு.
12. பணியாள், நாளடைவில், வரவேற்றான், கண்ணழகு,— இவற்றைப் பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறு.
13. ஒவ்வொரு பிரிவையும் மௌனமாகப் படி; பொருத்தமான தலைப்புக் கொடு.
14. இப்பாடத்தைச் சுருக்கமாக நான்கு பிரிவுகள் கொண்ட கட்டுரையாக எழுது.
15. உன் பள்ளிக்கூடத்தில், உடற்பயிற்சி பயிற்றுவிக்கும் முறையைப்பற்றிக் கூறு.
16. உடற்பயிற்சியின் இன்றியமையாமையை உனது உபாத்தியாயர் போதிப்பதுபோலப் பேசு.
17. உடற்பயிற்சிக்கு உரிய பயிற்சிகளைப் பற்றிக் கூறு.
18. பின்வரும் குறிப்புக்களைக் கொண்டு, உடற்பயிற்சியைப் பற்றி ஒரு கட்டுரை வரை:—

(i) உடற்பயிற்சியின் இன்றியமையாமை.

(ii) உடற்பயிற்சி செய்யத் தக்கவரும் செய்யத் தகாதவரும்.

(iii) உடற்பயிற்சி செய்வதற்குரிய பருவமும் காலமும்.

(iv) பல வகையான உடற்பயிற்சிகளும், அவற்றைச் செய்யும்போது கவனிக்க வேண்டும் விதிகளும்.

(v) உடற்பயிற்சியினால் உண்டாகும் நன்மைகள்.

19. உடற்பயிற்சியின் அவசியத்தைப் பற்றித் தெரிந்துகொள்ளாத உனது நண்பனுக்கு, அவன் உடற்பயிற்சியில் ஊக்கம் கொள்ளும் வண்ணம் ஒரு கடிதம் வரை.

13. பெஞ்சமின் பிராங்க்லின்

ஒவ்வொரு நாட்டிலும் எளிய குடும்பத்திலே பிறந்த சிலர் தங்கள் ஊக்கத்தாலும் அரிய உழைப்பாலும் பெரிய மனிதராகப் பிற்காலத்தில் விளங்கி இருக்கின்றனர். அவர் களுள் அமெரிக்க நாட்டில் பிறந்த **பெஞ்சமின் பிராங்க்லின்** என்பாரும் ஒருவராவர். இளமையில் அச்சுக் கோப்பவராக இருந்த அவர், தமது முயற்சியால் அமெரிக்க ஐக்கிய மாகா ணத்திற்குக் கவர்னராகி, அந்நாடு மேன்மை அடைவதற்குக் காரணராகி உலகமெங்கும் புகழ் பெற்று விளங்கினர். அத்தகைய பெரியாரது சரித்திரம் நாம் அறியத்தக்க தன்றோ?

சற்றேறக் குறைய இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் **ஜோஸியா பிராங்க்லின்** என்பவர், இங்கிலாந்திலிருந்து சென்று, வட அமெரிக்காவிலுள்ள போஸ்டன் நகரில் குடி யேறினர். அங்குச் சென்ற சில ஆண்டுகளில் அவருடைய மனைவியார் காலமானர். பின்னர் அவர் **அபியா பால்கர்** என்ற கன்னியை மணம் செய்துகொண்டார். அப் பெண் மணி நற்குணங்களுக்கு உறைவிடமானவள். அவளுக்கு நாளடைவில் பத்துக் குழந்தைகள் பிறந்தன. அவர்களுள் பத்தாவது பிள்ளைதான் பெஞ்சமின் பிராங்க்லின். அவர் கி. பி. 1706-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 6-ஆந் தேதி பிறந் தார். பெற்றோர் பெஞ்சமினைக் கருத்துடன் காத்துவந்தனர். சிறு வயதிலேயே பெஞ்சமின் நுட்ப அறிவு வாய்ந்தவராக விளங்கினர்.

பெஞ்சமினுடைய தந்தையார் துணிகளுக்குச் சாயம் போடும் தொழிலைச் செய்துவந்தார்; அத்தொழிலில் போது மான வருமானம் கிடைக்கவில்லை; ஆதலால், சோப்பும் மெழுகு வர்த்தியும் செய்து விற்று ஜீவனம் செய்துவந்தார். பெஞ்சமி னுக்கு ஐந்து வயது நிரம்பியதும், பெற்றோர் அவரைப் பள்


S. BRAHMA.

ளிக்கூடத்திற்கு அனுப்பினார்கள். பெஞ்சமின், ஆசிரியரும் வியக்குமாறு கருத்தாகக் கல்வி கற்றார். ஆயினும், குடும்பக் கஷ்டங்கள் அதிகரித்தமையால், பெற்றோரால் அவருக்குப் பணம் கொடுத்து நீண்ட காலம் படிக்கவைக்க முடியவில்லை. அதனால் பெஞ்சமின் பிராங்க்லின் சிறு வயதிலேயே பள்ளியை விட்டு விலகினார்; ஆனால், பிறரிடமிருந்து புத்தகங்களை இரவல் வாங்கி அவைகளை நன்றாகப் படித்து, அரிய கருத்துக்களை அறிந்து அவற்றின்படி நடந்தார். தமது தகப்பனார் செய்துவந்த தொழில் அவருக்குப் பிடிக்கவில்லை; ஆதலால் தம்முடைய தமையனார் வைத்திருந்த சிறிய அச்சுக்கூடத்திலே அச்சுக் கோக்கப் பழகும் பையனாக அமர்ந்தார்; தாம் வேலை செய்த அச்சுக்கூடத்திலிருந்து வெளிவரும் செய்தித் தாளைத் தெருக்களில் கொண்டுபோய் விற்றுவந்தார். அவர் தம் ஓய்வு நேரங்களிலெல்லாம் தமது கல்வியைப் பெருக்கிக் கொண்டார்.

பத்திரிகையில் கட்டுரைகள் எழுதி வெளியிட வேண்டுமென்ற விருப்பம் பெஞ்சமினுக்கு உண்டாயிற்று. ஆனால் தாம் எழுதிக் கொடுத்தால் வெளியிடமாட்டார்கள் என்பது அவருக்குத் தெரியும். அதற்காக அவர் ஒரு தந்திரம் செய்தார். முதலில் ஒரு கட்டுரை வரைந்து, அதில் தம் பெயரைக் குறிப்பிடாமல், யாரும் அறியாதபடி அதனைத் தமது தமையனாரது அச்சுக்கூடத்திற்குள் போட்டார். இவ்வாறு போடப்பட்ட கட்டுரையைக் கண்ட அவரது தமையனார், அதனை எடுத்துப் பலர்க்கும் காட்டினார். அவர்கள் நன்றாக இருக்கின்றதென அபிப்பிராயம் கொடுத்ததால், அதனை வெளியிட்டார். இதனைக் கண்ட பெஞ்சமின் மகிழ்ச்சி அடைந்து, மேலும் மேலும் கட்டுரைகள் எழுதி, அவ்வாறே யாரும் அறியாதபடி அச்சுக்கூடத்திற்குள் போட்டுவந்தார். அவைகளும் அவ்வாறே வெளியிடப்பட்டன. அவை யாவும் தம் பெயரை

வெளிப்படுத்திக்கொள்ள விரும்பாத யாரோ ஓர் அறிஞரால் எழுதப்பட்டவை என்று யாவரும் எண்ணினர்.

சில மாதங்கள் சென்ற பின், பெஞ்சமின் தாம் செய்து வந்த சூழ்ச்சியை வெளியிட்டார். அனைவரும் வியப்புற்றனர். பெஞ்சமினுடைய பெயர் பரவியது. அதைக்கண்டு அவருடைய முன்னோனே பொறாமை கொண்டான்; அவருக்குப் பல இன்னல்களை இழைத்தான். அவர் அத்துன்பங்களைப் பொறாமல், தம் நண்பர் ஒருவருடைய உதவியைக் கொண்டு, போஸ்டனிலிருந்து முந்நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள நியூயார்க் நகரத்திற்குக் கப்பலேறிச் சென்றார்.

நியூயார்க் நகரத்தில் பெஞ்சமின் இறங்கிய போது, அவருக்கு வயது பதினேழு; நியூயார்க்கில் அவருக்கு ஒரு வேலையும் கிடைக்கவில்லை; பிறகு அங்கிருந்து நூறு மைல்களுக்கு அப்பாலிருந்த பிலடல்பியா என்ற நகரை அடைந்தார்; அங்கே மிக்க துன்பம் அடைந்து, ஒருவரிடம் அச்சு வேலையில் அமர்ந்தார்; பின்னர், ஒரு பெரிய மனிதருடைய ஆசை வார்த்தையை நம்பி ஏமாந்து இங்கிலாந்து போய்ச் சேர்ந்தார்; அங்கே பல நாட்கள் வரையில் உழன்று ஓர் அச்சுக்கூடத்தில் அமர்ந்தார்; அங்கு அச்சுச் சம்பந்தமான எல்லா வேலைகளையும் நன்றாகக் கற்றுக்கொண்டார்.

பெஞ்சமின் அமெரிக்காவிற்குத் திரும்பிவந்தார்; பிறகு ஒருவருடன் கூட்டாகச் சேர்ந்து அச்சுக்கூடம் ஒன்றை வைத்தார்; ஊக்கம் குன்றாது வேலை செய்து, தொழிலை விருத்தி செய்தார்; பின்னர்த் தாமே அந்த அச்சுக்கூடத்தை விலைக்குப் பெற்றார்; ஒரு பத்திரிகையை ஆரம்பித்து நடத்தினார். அப்பத்திரிகையில், மக்களுக்கு நன்மை தரும் பல கட்டுரைகள் வெளிவந்தன. மக்கள் பெஞ்சமினைப் போற்றினார்கள். பெஞ்சமின் வாய்மை, நேர்மை முதலிய தூய குணங்கள் அமைந்து செவ்வனே ஒழுகினார்.

பெஞ்சமின் தாம் வசித்த நகரத்துக்குப் பல நன்மைகள் செய்தார். மின்சார விஷயமாய் ஆராய்ச்சி செய்து, இடியாற் கட்டிடங்கள் சேதம் அடையாதவாறு, **'மின்வாங்கி'** என்பதைக் கண்டுபிடித்தார். அச்சோதனையின்போது அவரது மகன் அருகில் நிற்பதைப் படத்தில் பாருங்கள்.

அமெரிக்கா சட்டசபைக்குக் குடிகளின் சார்பாகப் பெஞ்சமின் தேர்ந்தெடுக்கப்பட்டார்; பின்னர், தாம் வசித்த மாகாணத்திற்கே கவர்னரானார்; நாட்டின் நன்மையின் பொருட்டு இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் தூதராகச் சென்றார். அமெரிக்காவின் உரிமைப் போரில் தக்க விதமாகத் தொண்டு செய்து, அதன் விடுதலைக்கே சிறந்த காரணராக விளங்கினார்.

இவ்வாறு பெஞ்சமின் பிராங்க்லின், ஏழைக் குடும்பத்திற் பிறந்தும், பிற்காலத்தில் பெரிய மனிதராய் விளங்கியதற்குக் காரணம் என்ன? அவர் தம் சலியாத ஊக்கமும் உழைப்புமே அல்லவா? மாணவர்களே! நீங்களும் உயர் குணங்களாகிய ஊக்கத்தையும் உழைப்பையும் கைக்கொண்டு உயர்ந்து விளங்குவீர்களாக.

1. அரும்பத விளக்கம்

எளிய - ஏழ்மையான, தமையனார் - அண்ணன், பிரசுரம் - வெளியீடு, உழன்று - துன்பப்பட்டு.

2. கேள்விகள்

1. எளியவர் பெரியவராக விளங்கக் காரணம் என்ன?
2. பெஞ்சமின் பிறப்பைப்பற்றி உனக்கென்ன தெரியும்?
3. பெஞ்சமின் இளமையில் என்ன வேலைகளைச் செய்தார்?
4. அவர் சிறந்த எழுத்தாளர் எனப் பெயர்பெற்றது எப்படி?
5. அவர் நியூயார்க்குக்குச் சென்றதேன்?

6. அவர் இங்கிலாந்து சென்றதேன்? அங்கு அவரது அனுபவம் யாது?

7. அமெரிக்காவுக்கு மீண்ட பெஞ்சமின் எப்படி முன்னேற்றம் பெற்ருர்?

8. அவர் வரலாற்ருல் நீ அறிவது யாது?

3. இலக்கணம்

1. ஏவல் வினை முற்று

வா, போ, நட, நில்—எனக் கட்டளைப் பொருளில் வருவது ஏவல் வினைமுற்ரும்.

(உ-ம்.) (1) உண்ணுய் — ஆய் விகுதி } ஏவல்
உண்ணுதி — இ விகுதி } ஒருமை

(2) உண்மின் — மின் விகுதி } ஏவல்
உண்ணும் — உம் விகுதி } பன்மை

2. வியங்கோள் வினைமுற்று

1. வியங்கோள் வினைமுற்று மரியாதையோடு கூடிய கட்டளைப் பொருளிலும், வாழ்த்துதல், வைதல், வேண்டிக்கொள்ளுதல் முதலிய பொருள்களிலும் வரும் வினைமுற்ரும். இஃது ஐம்பால் மூவிடங்களிலும் வரும். இதில் ஒருமை, பன்மை என்னும் பகுப்பு இல்லை.

2. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் க, இய, இயர், இ, அ என்பனவாம். இவ்வினைமுற்று எதிர்மறையில் வருங்கால், மேற்கூறிய விகுதிகளோடு அல் என்னும் இடைநிலையும் பெற்று வரும்.

	வாழ்த்துதல்	வைதல்	கட்டளை	வேண்டிக் கொள்ளுதல்	விகுதி
	வாழ்க	ஒழிக	செய்க	அருள்க	- க
யான், யாம்,	வாழிய	ஒழிய	செய்யிய	அருளிய	- இய
நீ, நீர். நீங்கள்,	வாழியர்	—	செய்யியர்	அருளியர்	- இயர்
அவன், அவள்,	வாழி	—	—	—	- இ
அவர், அது, அவை.	வாழ	—	—	அருள	- அ

பயிற்சி

1. இதனை மௌனமாகப் படி; பிரிவுகளுக்குப் பொருத்தமான தலைப்புக் கொடு.

2. இப்பாடத்தைச் சுருக்கி 24 வரிகளில் எழுது.

3. பெஞ்சமின் இளமைப்பருவம்—பலவேலைகள்—முன்னேற்றம்—முடிவு: இக்குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரை வரை.

4. வாராய், போதி, வாழ்க, அழிக, செய்க, ஒழிக—ஏவல் எவை? வியங்கோள் எவை?

5. வந்தேன், உண்டேன், எழுந்தேன், படித்தேன்.—பிறவினை ஆக்கு.

6. கண்டேன், செய்தேன், பெற்றாள், ஓடினேன், வருகிறான், வருகின்றோம், போவாய், போயினை, பார்ப்பாள்.—இடைநிலைகளையும் அவற்றின் காலங்களையும் கூறு.

7. மேற்சொன்ன வினைமுற்றுக்களுக்குப் பகுதி, விகுதி, இடைநிலைகளைக் கூறு.

8. முதல் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் கூறு.

9. இரண்டாம் பிரிவில் இருக்கும் அறுவகைப் பெயர்களைச் சொல்லு.

10. மூன்றாம் பிரிவில் உள்ள பொதுப் பெயர், சிறப்புப் பெயர்களைக் குறிப்பிடு.

11. நான்காம் பிரிவில் உள்ள செயப்படுபொருள் குன்றிய வினை, குன்றா வினைகளைக் கூறு.

12. ஐந்தாம் பிரிவில் இருக்கும் எழுவாய், பயனிலைகளுக்குப் பொருத்தம் காட்டு.

14. கடற்சிங்கமும் சீல்மீனும்

கடலில் வாழும் உயிர்களில் **கடற்சிங்கம்** என்பது ஒன்றாகும். **சீல்** என்னும் ஒருவகை மீனும் கடலில் வாழ்கிறது. இவ்விரண்டும் துருவக் கடல்களில் மிகுதியாய் உண்டு. கடற்சிங்கம், வெளிப்பார்வைக்கு நிலத்தில் வாழும் பெரிய விலங்கு போலவே தோன்றும். அதன் தலை பெருத்



சீல் மீன்

துக் காணப்படும். நீண்ட காதுகளும், அகன்ற கண்களும், பெரிய வாயும், வாயின் மேற்புறம் நீண்ட மீசைகளும், தலையைத் தாங்கும் நீண்ட கழுத்தும் உள்ள இப்பிராணி, கடற்கரடி போல இருக்கும். இது கீழே படுத்திருந்தாலும் முன்னங்கால் பின்னங்கால் என்னும் உறுப்புகளின் உதவியால் உயரமாகவே தோன்றும். பாதத்தை நன்றாக உற்று நோக்கும்போது, இது நீர்வாழ் பிராணி என்பது தெளிவாகத் தெரியும்.

சீல் மீன் பெரிய சாக்கு மூட்டைபோல இருக்கும். அதன் தலை குட்டையாயும் அகலமாயும் இருக்கும். கழுத்து இருப்பதே தெரியாது. இம்மீன் நன்கு படுத்தால் இதன் சிறு கைகள் தரையைத் தொடக்கூடும். கடற் சிங்கத்துக்கு உடம்பின் நீளத்தில் மூன்றிலொரு பங்கு தலைப்பகுதி ஆகும்; சீல் மீனுக்கோ காற்பங்கு ஆகும். கடற்சிங்கத்தின் உடம்பின் பின் பகுதி குட்டையாகவும் கீழ்நோக்கி வளைந்தும் இருக்கும்.

நிலத்தில் வாழும் சிங்கம் தனது அரசியல் இருக்கை யாகிய காட்டிலே, தனது இரையைத் தேடும்பொருட்டு, விரைவாகப் பாய்ந்து போவது போலவே, கடற்சிங்கமும் கடலிலே தன் இரையைத் தேடி விரைவாகப் பாய்ந்து போகும். இதற்கு இயற்கையில் நீந்துவதற்கு உதவியாக, உடம்பின் பிற்பகுதி படகுகளின் துடுப்புப் போல அங்கும் இங்கும் அசைந்து கொடுக்கிறது. இதன் உடம்பு நினைத்த பக்கமெல்லாம் திரும்பத் தக்கவாறு அமைந்திருப்பதால், நிலத்தில் ஏறினாலும் மனிதன் ஓடத்தக்க விரைவில் ஓடும் வலிமை இதற்கு உண்டு. புதர்களும் பாறைகளும் உள்ள கடற்கரைகளில் இது மனிதரை ஏமாற்றி நீரிலும் நிலத்திலும் உள்ள ஆற்றலை விளக்கிக் காட்டும்.

கடற்சிங்கம் தன் வயிற்றுக்குத் தக்க உணவு கிடைத்தால், வாயில் உள்ள பற்களால் நன்கு கவ்விப் பிடித்து, ஒரே விழுங்காக விழுங்கிவிடும். விழுங்கும்போது, நீர் மட்டத்துக்கு மேல் தலையைத் தூக்கி வைத்துக்கொள்ளும். வாய்க்குள் போகத் தகாத பெருமீன்களைப் பிடித்துவிட்டால், தலையை அங்கும் இங்கும் அசைத்துத் தன் உணவைத் துண்டம் துண்டமாகச் செய்து உண்ணும். துண்டிக்கும்போது, நீர்க்குள் விழுந்த துண்டத்தை உடனே மூழ்கி எடுத்து விழுங்கும். பெருமீன் உணவாக அகப்பட்டு, அதைப் பத்து முறை கடித்து விழுங்க வேண்டியிருந்தாலும், சலிப்பின்றிக் கடித்து நீரில் நீந்தியும்

மூழ்கியும் உண்டே தீர்க்கும். இவ்வதிசயப் பிராணியானது மீன் நண்டு, கடற்பறவை முதலிய உயிர்களை வயிறு நிறைய உண்டு கடலில் வாழ்கிறது.

கடற்சிங்கம் பறவைகளைப் பிடித்துத் தின்ன ஒரு தந்திரத்தைக் கைக்கொள்ளுகிறது: இது நீர் மட்டத்தில் மூக்கை வைத்துக் கொண்டு, உடம்பை நீருக்குள் நன்கு மறைத்துக்



கடற் சிங்கம்

கிடக்கும்போது, பறவைகள், 'இது நமக்கு உதவும் உணவுப் பொருள்' என்று எண்ணி இதன் அருகே வரும். இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துப் பொறுமையோடு காத்திருக்கும் கடற்சிங்கம், உடனே அவற்றைப் பிடித்து விழுங்கிவிடும். கடற்சிங்கத்தை வேட்டையாடிப் பிடித்துக் கொன்று அதன் வயிற்றைக் கிறிப்பார்த்தவர்கள், 'அதனுள் சிறு சிறு கூழாங் கற்கள் இருப்பதுண்டு' என்று கூறுகிறார்கள்.

இக்கற்கள் இதன் உடம்பினுள் எப்படி வந்தன என்பதை ஆராய்ந்த அறிஞர் சிலர் பின்வருமாறு கூறுகின்றனர்:

தண்ணீர் மட்டத்தில் மிதக்கத் தக்கவாறு அமைந்த தன் உடம்பு உள்ளே அமிழ வேண்டுமென்று எண்ணும்போது, கடற்சிங்கம் தன் உடம்பில் தகுந்த பாரம் உண்டாகும் பொருட்டுப் பல கற்களை விழுங்குமாம். இப்படி விழுங்கிய கற்களை நீர் மட்டத்தில் வந்த பிறகு கரையோரங்களில் வாய் வழியே வெளிப்படுத்துமாம். இப்படி வெளிப்படுத்தும் காலங்களில் எஞ்சி நின்ற சில கற்களே இதன் வயிற்றுள் இருக்கவேண்டும். வெளிப்படுத்தும் காலத்துக்கு முன் மனிதர் கையிற் பிடிபட்டாலும் கற்கள் இருக்கும். இந்தப் பிராணி யின் உடம்பில் உள்ள கொழுப்பு மிகவும் சத்துள்ளது என்று கூறுகின்றார்கள். இதற்கு அமைந்த தோலும் கொழுப் பும் உயிர் உள்ள வரையில் இது கடலில் நீந்தி வாழ உதவு மாயினும், பின்பு அவையே இதனைப் பலர் வேட்டையாடிப் பிடிக்கத் தூண்டும் காரணங்கள் ஆகின்றன. மயிலுக்கு அதன் தோகையும், மானுக்கு அதன் கொம்பும் இயற்கைப் பகையாக அமைந்த வண்ணமே, இப்பிராணிக்கும் அதன் தோலும் கொழுப்புமே பகையாய் அமைந்துள்ளன.

கடற்சிங்கத்துடன் வாழும் சீல் மீன்களின் வரலாற்றை யும் நாம் சிறிது அறிந்து கொள்வோம்: சீல் மீன்கள், மனிதர் பழக்கம் மிகுதியாய் இல்லாத கடல் துறைகளில் கூட்டம் கூட்ட மாக வாழும். கடலோரங்களில் உள்ள கற்பாறைகளில் இவை வெயில் காய்வதற்காக வருவதுண்டு. ஒருமுறை ஒரு நாட்டில் உள்ள ஒரு பாறைக்கு வந்து பழகினால், உயிருள்ள வரையில் வருடந்தோறும் குறித்த காலத்தில் அதே இடத் துக்கு வருவது இப்பிராணியின் இயல்பாம். இதனால் சீல் வேட்டையாடுவோர் இவ்வகை இடங்களும் உரிய காலங்களும் அறிந்தே கடலிற் புறப்படுவர்.

இம்மீன்கள் கடற்கரைகளில் உள்ள பாறைகளில் வாழும் போது, குட்டிகள் மணலிலே விளையாடிக் கொண்டிருக்கும்.

உயர்ந்த பாறைகள் இவற்றின் பள்ளியறையாக உதவும். குஞ்சுகள் இன்ன இடத்தில் இவ்வளவு தூரம் போய்வரலாம் என்ற வழிகளைப் பெரிய சீல்கள் தம் குஞ்சுகளுக்கு வெகு ஒழுங்காகவும் கண்டிப்பாகவும் தெரிவிக்கும். காவல் உள்ள உறைவிடங்களில் வயதேறிய ஆண்களும் பெண்களும் வாழும். குட்டிகள் நீரில் நீந்திக்கொண்டு, தாழ்நிலங்களில் திரிந்து தாய்களைத் தேடி மெல்ல மெல்ல மேலே வரும். சில சமயங்களிற் குட்டிகள் பாறைகளின் உச்சிக்கே போய்விடுவதும் உண்டு.

குளிர்காலத்தில் சீல்கள் பாறைகளில் வந்து தங்குவதில்லை. கடற்சிங்கம் எல்லாக் காலங்களிலும் நிலத்தில் ஏறிவந்து நடமாடும். சீல்களோ, தரையில் பனிக்கட்டி அதிகமாய் இல்லாத கோடைகாலங்களில்தான் மெல்ல மெல்ல நிலத்தை நோக்கி வரும். இவை தரையின்மேல் ஏறுமுன்பு பல நாள் கடலில் நீந்திச், 'சுற்றிலும் ஆபத்து இல்லாமல் இருக்கிறதா' என்று பார்க்கும். ஆண் சீல்கள் ஆயிரக்கணக்கில் கரையேறி நாற்புறமும் சுற்றி நிச்சயமாக ஆபத்தில்லை என்று அறிந்த பிறகு, பெண் இனமும் குட்டிகள் கூட்டமும் கரையேற முயலும். ஒவ்வோர் ஆணும் தனக்கு உரிய இடமாக ஒரு பத்தடி நிலத்தைப் பிடித்துக்கொள்ளும்; அங்கு யார் வந்தாலும் எதிர்த்துப் போர்செய்து, தன் நிலத்தைக் காத்துக்கொள்ளும். இந்த நிலத்தின் காவலுக்காக, மனிதர் தம் நாடுகளுக்காகப் போராடுவது போல, இது பெரும்போர் புரிவதுண்டு.

இவை பகையாய் நின்று ஒன்றையொன்று எதிர்க்கும்போது, பல்லால் எதிரியைக் கிழித்துக் காயப்படுத்துவதே இயல்பாம். சில கிழங்கள் ஐம்பது அறுபது போர் புரிந்து வென்று, தம் பத்தடி நிலத்தைக் காத்துக்கொள்ளும். தோற்ற பிராணி, தலையைத் தொங்க விட்டுக்கொண்டு திரும்பிப் பாராமல் தண்ணீருக்குள் போகும். வென்ற சீல் கம்பீரமாக நிலத்தில் அரசன் போல அமர்ந்து நாற்புறமும் பார்க்கும். இப்போர்களில்

தோல்வி பெற்ற ஆண்கள், இருக்க இடமும் உடன்வாழப் பெட்டையும் பெருமல், கண்காணுத நாடுகளுக்குப் போய்த் தம் மானக்கேட்டைப் பிறர் அறியாமல் மறைந்து வாழும். ஆயிரக் கணக்கிலே பெருங்கூட்டமாக ஆணும் பெண்ணுமாய்க் கரை யேறி வாழும் இந் நீர்வாழ் பிராணிகள், தமக்குள் ஓர் ஒழுங்கு அமைத்துக்கொண்டு தரையிலும் நீரிலும் வாழ்வதை நேரிற் பார்த்த அறிவாளிகள், 'இவை மனிதரைப் போலவே பகுத் தறிவு உள்ளன' என்று துணிந்து உரைக்கிருர்கள்.

இந்தப் பிராணி இனத்தில் ஆண் பெண் உறவில் ஒரு வகை ஒழுங்கு உண்டு: பெண்சீல் கரையேற வரும்போது, தனக்குப் பழக்கமான குரலொலி கேட்கும் பொருட்டுக் குரல் காட்டும். நாயகனைத் தேடிப் பாறையில் ஏறும் சமயத்தில் எல்லாப் பெட்டைகளுக்கும் அவை அவை எதிர்பார்த்த தலைவன் கிடைப்பது அருமையே. வலிமை மிக்க சில ஆண்சீல்கள் கரையோரத்தில் இருந்து, கடலில் வரும் பெண்சீல்களை வழி மறித்து வம்பு செய்து இழுத்துப்போவதும் உண்டு. முதலில் அன்பு காட்டி அழைத்துப் பின்பு வெருட்டி இழுத்துப் போவதே இவ்வினத்தின் இயல்பாம்.

தாய்கள் குட்டிகளிடம் அன்பு காட்டுவது இவ்வினத்தில் இல்லை. பூனைக்குட்டிகள் பெறும் தாயன்பு சீல் குட்டிகளுக்கு வாய்ப்பதில்லை. ஆனால், ஆயிரம் குட்டிகளின் குரலுக்கு இடையில் சீல்தாய் தன் குட்டியின் இனிய குரலை அறிந்து கொள்ளும். இப்படியே குட்டிகளும் தாயின் குரலை அறியும் என்று துணிந்து கூற இயலாது. குட்டி ஒரு மாதப் பரு வத்தில் நீரில் நீந்தத் தொடங்கும்; அப்போது, தட்டித் தள்ளாடி மனிதக் குழந்தை போலவே நடை பழகும். மூன்று மாத காலத்தில் குட்டி நீந்துவதற்குத் தெரிந்துகொள்ளும் குட்டிகளுக்கு நீந்தும் சக்தி வந்ததும் எல்லாம் ஓரே கூட்ட மாக வெளியேறித் தம் பழைய இடங்களுக்குப் போகும்.

இந்தப் பிராணியை மனிதர் வேட்டையாடி மிக்க பொருள் ஈட்டுகிறார்கள். கடவுள் படைப்பில் உள்ள விசித்திரங்கள் இன்னும் எத்தனையோ, அறிந்தவர் யாவர்?

1. கேள்விகள்

1. கடற் சிங்கம் எப்படி மனிதருக்குப் பயன்படுகிறது?
2. அதன் உடல் அமைப்பு எப்படி இருக்கிறது?
3. அது நீரிலும் நிலத்திலும் தன் ஆற்றலை எவ்வாறு விளக்குகிறது?
4. கடற் சிங்கத்தின் வயிற்றுள் கூழாங்கற்கள் இருப்பதைப்பற்றி என்ன காரணம் கூறுகின்றனர்?
5. சீல்மீன் ஏன் வேட்டையாடப்படும்?
6. 'வல்லான் வகுத்தது வாய்க்கால்' என்ற பழமொழி சீல்களின் வாழ்வில் எவ்வாறு பொருந்தும்?
7. சீல்களின் இயல்பு யாது?

2. இலக்கணம்

1. வேறு, இல்லை, உண்டு என்னும் வினைமுற்றுகள்.

வேறு, இல்லை, உண்டு என்னும் குறிப்புவினை முற்றுகள் ஐம்பால் மூவிடங்களிலும் வருவனவாம்.

(உ-ம்.) யான், யாம்,
நீ, நீர், நீங்கள்,
அவன், அவள், அவர்,
அது, அவை.
} வேறு / இல்லை / உண்டு

இதனை யான் வேறு, நீ வேறு, யான் உண்டு, நீ உண்டு, யான் இல்லை, நீ இல்லை என முறையே சேர்த்துக் கொள்க.

2. 'யார்?' என்னும் வினைமுற்று

யார் என்பது வினாப்பொருளில் வரும் வினைக்குறிப்பு முற்றும். அஃது உயர்திணைக்குரிய ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய மூன்று பால்களிலும் வரும்.

(உ-ம்.) அவன் யார்? அவள் யார்? அவர் யார்?

குறிப்பு:—அஃதியார், அவை யார் என அஃறிணையில் வருதலும், யான் யார், யாம் யார், நீ யார், நீர் யார், நீங்கள் யார் எனத் தன்மை முன்னிலைகளில் வருதலும் **புதியன புகுதலாம்.** புதியன புகுதலாவது - புதியனவாய் இக்காலத்தில் வழங்கி வருதலாம்.

3. 'எவன்'? என்னும் வினைமுற்று

எவன் என்பது வினாப்பொருளில் வரும் வினைக்குறிப்பு முற்றும். அஃது அஃறிணைக்குரிய ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய இரண்டு பால்களிலும் வரும். (எவன்—என்ன?)

(உ-ம்.) அஃது எவன்? அவை எவன்?

குறிப்பு:—இவ்வினைமுற்று **என், என்ன, என்னை, என்னோ, என்னே** என விகாரப்பட்டும் வரும். இஃது உயர்திணை ஆண்பாலை உணர்த்தும் **எவன்** என்பது அன்று.

பயிற்சி

1. கடற்சிங்கத்தை வேட்டையாடித் தோல்வி பெற்ற ஒருவன், தன் அனுபவத்தைக் கூறுவதுபோலக் கூறு.
2. சீல்மீன் வேட்டையாடப் போய் அவற்றுக்குள் நடந்த ஒரு பெருஞ் சண்டையை நேரில் பார்த்த ஒருவன், அச் சண்டையை விவரித்துக் கூறுவதுபோலக் கூறு.
3. 'கடற்சிங்கத்தின் இயல்புகள்' என்னும் பொருள் பற்றி ஒரு கட்டுரை வரை.
4. 'சீல்மீன்களின் குடும்ப வாழ்க்கை' என்ற பொருள் பற்றி ஒரு கட்டுரை எழுது.
5. நீ அறிந்த சில நீர்வாழ் பிராணிகளைக் கூறு.
6. இவர் மூன்று மக்களையும் பெற்றவர். (பிறந்தனர் என்பது பயனிலையாக வரும்படி எழுது.)
7. அந்நோய் இவரது உயிரைக் கொள்ளை கொள்ள வலிமையற்றுப் போயினும், வயிரம்போல் வளர வேண்டிய

உடம்பின் வலிமையைக் கெடுத்து விட்டது. (இரு வாக்கியமாகப் பிரித்து எழுது.)

8. பிரபுல்ல சந்திர ராய் லத்தீன் மொழியையும் பயின்றூர். (தன் வினையைப் பிறவினையாக்கி வாக்கியத்தை எழுது.)
9. பிரபுல்ல சந்திர ராய் தாம் தேடிச் சேர்த்த செல்வத்திற் பெரும் பகுதியைக் கல்கத்தா சர்வ கலாசாலைக்குக் கொடுத்தார். (செய்வினையைச் செயப்பாட்டு வினையாக்கி வாக்கியத்தைத் திருத்தி எழுது.)
10. முதல் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் கூறு.
11. இரண்டாம் பிரிவில் உள்ள வினை, பெயர், வினுப் பயனிலைகளைச் சொல்லு.
12. மூன்றும் பிரிவில் உள்ள பகுபதம், பகாப்பதங்களைக் கூறு.
13. நான்காம் பிரிவில் உள்ள வேற்றுமை உருபுகளைச் சொல்லு.
14. ஐந்தாம் பிரிவில் இருக்கும் தன்வினை, பிறவினை, செயப் படுபொருள் குன்ரு வினை, குன்றிய வினைகளைக் கூறு.
15. ஆரும் பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்ச் சொற்களைத் தெரிவி.
16. அப்பிரிவில் உள்ள ஐம்பால் பெயர்களைக் கூறு.
17. ஏழாம் பிரிவில் உள்ள வினையெச்ச, பெயரெச்சங்களைச் சொல்லு.
18. எட்டாம் பிரிவில் இருக்கும் 'வேறு, இல்லை, உண்டு' என்னும் வினைமுற்றுகளைக் குறிப்பிடு.
19. ஒவ்வொரு பிரிவிற்கும் தக்க தலைப்புக் கொடு.
20. 'கடற்சிங்கம்' என்பதுபற்றிக் கட்டுரை ஒன்று 4 பிரிவுகளில் எழுது.
21. 'சீல்மீன்' என்பதுபற்றி 4 பிரிவுகளில் கட்டுரை ஒன்று வரை.

15. புத்தர் அருட்செயல்கள்

கயை நகரில் போதிமரத்தின் அடியில் தாம் பல நாள் தேடிய மெய்ப் பொருள் இன்னதென்று உணர்ந்துகொண்ட புத்த தேவர், **'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'** என்று துணிந்து, உலகினர்க்கு உபதேசம் செய்யப் புறப்பட்டார்; முதன் முதலாகத் தாம் மெய்ப்பொருள் பெற்ற வனத்தில் வந்த பலர்க்கும் அவர் குலம், குடி, உயர்வு, தாழ்வு, ஆண், பெண் முதலிய வேற்றுமை கருதாது அருட்செல்வத்தை அருளினார். விரைவிலே சீடர் பலர் சேரலாயினர். அவர் மழைக்காலங்களில் அவர்களைத் தம்மோடு ஒரு வனத்தில் இருந்து தவம் புரியச் செய்து, மற்றக் காலங்களில் நாடு முழுதும் தரும நெறியைப் புகட்ட அனுப்பினார்.

அறத்தின் குன்றென விளங்கிய **புத்தர்** பெருமான், தமது சொல் வன்மையாலும், அருள் நோக்காலும் பல நூறு அறிஞர்களைத் தம் கொள்கையைப் பின்பற்றச் செய்துகொண்டு பல நாடுகளுக்கும் நடந்தார்; **பிம்பசாரன்** என்ற மன்னனைத் தம் வழியிற் சேர்த்த பிறகு, **கபிலவாஸ்து** நகரில் அரசு புரிந்திருந்த **சுத்தோதன** மன்னனைப் பார்க்கப் போனார்.

அப்பொழுது பல நாட்களாக அவரது தவச் செல்வத்தை ஆராய்ந்து அறிந்த அரசகுலத்து ஆண் மக்களும் பெண் மக்களும் அவரை நேரிற் கண்டு, ஒவ்வொருவராக வணங்கி உபதேசம் பெற்றனர். அவருக்கு மனைவியாக வாய்ந்திருந்த **யசோதரை** என்ற பெண்மணி மட்டும் நேரில் வராது அந்தப்புறத்தில் அடங்கியிருந்தாள்.

அதனை அறிந்த கௌதமபுத்தர் இயற்கையிலே தம்முள்ளத்தில் எழுந்த அருட்பெருக்கால், துறவிகள் துணையோடு அரண்மனையகம் புகுந்து யசோதரையைக் கண்டு, அவளது

துயரக் கண்ணீர் மாறத்தக்க நற்பொருளை உபதேசித்து அருள் புரிந்தார்.

மிக்க முயற்சியின்மேல் மன அமைதி பெற்ற அப்பெண் மணி, தன் மகன் **இராகுலனை** அழைத்து, "என் செல்வமே! உன் தந்தையிடம் சென்று உனக்குரிய உரிமைச் செல்வத்தைக் கேட்டுப் பெற்று வருவாய்" என்றாள். அவன், "அன்னையே! என் தந்தை இன்னவர் என்று அறிகிலேன். அவர் துறவிகள் கூட்டத்தில் இருக்கின்றாரா? நான் அவரை அறிவது எங்ஙனம்?" என்று கேட்டான்.

வேடன் புத்தருக்குச் சீடனாதல்.

இளங் குழந்தையாகிய இராகுலன் தனது தந்தையை அறிய விரும்பியதால், யசோதரை அவனை எடுத்துக்கொண்டு நடந்துவந்து, ஒரு மறைவிடத்தில் நின்று, பல துறவிகள் இடையில் மிக்க ஒளியோடு வீற்றிருந்த புத்தர்பிரானைச் சுட்டிக்

காட்டி, "அவரே உன் தந்தை" என்று கூறினள். ஏழு வயது நிரம்பும் நிலையிலிருந்த அச்சிறுவன், ஓடிச்சென்று புத்தரை வணங்கித், "தந்தாய்! என் உரிமைச் செல்வத்தை எனக்கு அருள்க," என்று கேட்டான்.

புத்தர் மனம் கனிந்து, "குழந்தாய்! துறவே என் செல்வம்; அதனையே உனக்கும் தருகிறேன்" என்று கூறி, அவனைத் தம் சங்கத்திற் சேர்த்துக் கொண்டார்; பின்பு சில நாட்களிலே சுத்தோதனரிடம் விடைபெற்றுப் பிற நாடுகளுக்குச் சென்றார்.

மெல்ல நடந்தே பல ஊர்களுக்கும் போய் அன்பு வெள்ளத்தைப் பாய்ச்சி வந்த புத்தர் பெருமான், சில ஆண்டுகளில் **மகதநாடு** சென்றார்; அந்நாட்டு ஊர்கள்தோறும் தம்பால் வந்த மனிதர்கள் பற்பலருக்கும் அவரவர்களது அறிவின் நிலைக்கேற்ற உபதேசங்களை அருளிச் செய்து கொண்டே செல்லலானார். ஒரு நாள் அவர்,ஒரு கிராமத்துக்கும் மற்றொரு கிராமத்துக்கும்இடையில் உள்ள காட்டுவழியே நடந்து வருகையில், வேடன் ஒருவன் கட்டிய வலையில் அகப்பட்டு மருண்டு விழிக்கும் மான் ஒன்றைக் கண்டார். கருணைக் கடலாகிய அவர், அதன் துயரம் கண்டு பொருது விரைந்து போய், வலையை அறுத்து மானை விடுவித்தார். மான் துள்ளிக் குதித்து அவரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே காட்டுக்குள் ஓடியது. மானைப் பிடிக்க வந்த வேடன், தன் வலை அறுந்து பாழாய்க் கிடப்பது கண்டு, பெருஞ் சினங்கொண்டு வேலை ஓங்கிக்கொண்டு புத்தர் மேற் பாய வந்தான். அப்பொழுது புத்தர் ஒரு குளிர்ந்த மரத்தடியிலே தம்மை மறந்து சமாதி நிலையில் இருந்தார். வேடன் அவரை நெருங்கியதும் தன் எண்ணத்தை அறவே மறந்து, நன்மதி பெற்று வேட்டுவத் தொழிலையே விட்டொழித்து அவரை வணங்கி நல்லுரை பெற்று,அவருக்குச் சீடனுமாயினன்.

மற்ருெரு சமயம், **கௌதமி** என்னும் ஒரு மங்கை, பலநாள் தவம் புரிந்து பெற்ற தனது முதற் குழந்தை,தளர்நடை நடந்து மழலை மொழியும் பருவத்திலே இறந்துபோனதால் மிக்க துயரம் அடைந்து, தன்னிடம் அன்பு பூண்ட உறவினர் வீடுகளுக்குப் போய், " என் குழந்தையை உயிரோடு வாழ வைப்பதற்கு ஏதாவது மருந்துண்டா? இறந்த குழந்தையை எழுப்பத்தக்க பெரியோர் யாரேனும் இருக்கின்ருரா?" என்று விசாரித்துக்கொண்டே ஊரெங்கும் திரிந்தாள். புத்த சங்கத்தைச் சேர்ந்த துறவி ஒருவர், அப்பெண்ணின் துயரத்தைக் கண்டு மனம் இரங்கித், " தாயே, இறந்த குழந்தையை உயிர்ப்பிக்கும் மருந்து இங்கே கிடைப்பதரிது. இப்பக்கத்தில் ஒரு மகான் இருக்கிருர். அவர் அருள் கிடைத்தால் உன் துயரம் ஒழியும்" என்று கூறினுர். அப்பெண் உடனே திரும்பி அவரை நோக்கி, " அப் பெரியோர் யார்? இப்பொழுதே நான் என் குழந்தையின் பிணத்தைச் சுமந்து அவரிடம் போய், என் துயரத்துக்கு மருந்து தேடுகிறேன்" என்ருள். துறவி, " அவர் எங்களை ஆட்கொண்ட புத்தர் பெருமானே ஆவர். நீ அவரிடம் போனுல் உன் எண்ணம் நிறைவேறும்" என்ருர்.

அச்சொல்லை நம்பி, அவள் புத்தரிடம் வந்து தன் குறைகளைக் கூறி முறையிட்டாள். புத்தர் இரக்கத்தோடு அவள் முகம் நோக்கி, " அம்மா! வருந்தாதே; ஒரு பிடி கடுகு வாங்கி வந்தால் உன் குழந்தை பிழைக்கும்" என்ருர். அவள் விரைவிலே புறப்பட்டாள். அவளைத் திரும்பவும் அழைத்து அப் பெரியோர், " நீ கடுகு வாங்கும் வீட்டில் இதற்குமுன் யாரும் இறந்ததில்லையா என்று விசாரித்து யாரும்இறந்திராத வீட்டிலிருந்தே வாங்கி வரவேண்டும் " என்று கூறி அனுப்பினுர்.

கௌதமி விரைந்து வெளியேச் சென்ருள். ஒரு வீட்டிலே புகுந்து தன் குறையைச் சொல்லிக் கடுகு கேட்டாள். அவர்கள்

கொடுக்க வந்தனர். அதை வாங்கு முன்பு, "இந்தவீட்டில் நேற்று வரையில் யாரும் இறக்கவில்லையா?" என்று கேட்டாள். அவர்களுள், வீட்டுத் தலைவி, "சென்ற மாதத்திலே என் தாய் இறந்தாள்; ஆறு மாதங்களுக்கு முன்பு என் தமையன் இறந்தான்" என்று சொன்னாள். அது கேட்டுக் கௌதமி பிற வீடுகளுக்குப் போனாள்; அங்கும் இது போன்றே விடை பெற்றாள். ஊரெங்கும் அலைந்தும் ஒரு பிடி கடுகு பெறக்கூடாமல் திரும்பி வந்து புத்தரை வணங்கினாள். அவர் அப்பெண்ணின் மன நிலை அறிந்து, அவளுக்கு ஏற்கும் முறையிலே உலக நிலையாமையை உபதேசித்து அருள் புரிந்து விடை கொடுத்தார். அவளும் பிறப்பிற்குரிய இயல்பை உணர்ந்தவளாய்த் தன் அன்பிற்குரிய குழந்தையின் பிணத்தை அடக்கம் செய்து தன் மனைக்குச் சென்றாள். இங்ஙனம் புத்தர் இயற்றிய அருட் செயல்கள் பலவாம்.

1. அரும்பத விளக்கம்

போதி-அரசமரம்; தோன்றல்-மகன்; உபதேசம்-நற்போதனை; தருமம்+உபதேசம்=தருமோபதேசம்; மெய்ப்பொருள் - உண்மையான பொருள், ஞானம்; கோலம் - வேடம் (அழகு, அலங்கரிப்பு); அரண் - மதில்; அரண்மனை - அரண்களால் சூழப்பட்ட மனை, அரசர் வசிக்கும் வீடு; வையகம்-பூமி; (அருள்+செல்வம்=அருட்செல்வம்), அருள் - கிருபை.

2. கேள்விகள்

1. புத்தரிடம் பல சீடர்கள் சேரக் காரணம் என்ன?
2. சுத்தோதனரிடம் புத்தர் கூறிய உண்மை யாது?
3. யசோதரை தன் மகனைப் புத்தரிடம் எதற்காக அனுப்பினாள்?
4. புத்தர் கருணைக்கடல் என்பதை ஒரு வரலாற்றால் விளக்கு.
5. கௌதமி எப்படி அறிவு பெற்றாள்?

6. எதிர்ப்பதம் தருக:—

பொய், புண்ணியம், ஆனந்தம், நஷ்டம், நன்மை, சிறுமை, சுருக்கம்.

3. இலக்கணம்

1. உடன்பாட்டு வினைகளும் எதிர்மறை வினைகளும்:—

எல்லா வினைச் சொற்களும் உடன்பாட்டு வினை, எதிர்மறை வினை என இருவகையுள் அடங்கும். அவை:—

(1) தொழில் நடப்பதைத் தெரிவிப்பது உடன்பாட்டு வினை.

(2) தொழில் நடவாமையைத் தெரிவிப்பது எதிர்மறைவினை.

(உ-ம்.) வருவான் - உடன்பாட்டு வினை.

வாரான் - எதிர்மறை வினை.

பயிற்சி

1. பின்வருமாறு அட்டவணை யொன்று குறித்து, அதில் பின் கண்ட வினைச்சொற்கள் எந்தெந்த வகையுள் அடங்கும் என்பதைக் குறித்துக் காட்டு:—

சென்ருன், படித்தாய், குடித்தான், நடந்தேன், படிப்பித்தேன், போக்கினுன், பாய்ச்சினுர்கள், வருகின்ருன், நின்ருர்கள், கட்டினேம், உருட்டினுன், வேண்டுவோம், அடித்தாய்.

அட்டவணை

தன்மை ஒருமை	தன்மைப் பன்மை	முன்னிலை ஒருமை	முன்னிலைப் பன்மை	ஆண்பால்	பலர்பால்

2. வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் இவற்றுக்கு முறையே மும்மூன்று உதாரணங்கள் தந்து, காலமும் கூறு.

3. பின்வரும் வாக்கியங்களிலுள்ள உடன்பாட்டு வினைகளை எதிர்மறை வினைகளாக மாற்றி அமைக்க:—

(1) காவலுள்ள உறைவிடங்களில் வயதேறிய ஆண்களும் பெண்களும் வாழ்வர்.

(2) சுற்றிலும் ஆபத்து உண்டா ?

(3) தோட்டக்காரன் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சினான்.

(4) நீர்நிலைகளில் மீன்கள் துள்ளி விளையாடுகின்றன.

(5) சில பிள்ளைகள் மாலையில் பந்து அடிப்பார்கள்.

4. படி, வருக, நில்லாய், செல்லன்மின், உண்ணுதி, வாழிய, வருவீர், காண்க, போகாதே, செய்யாய், கெடுக, போமின்—ஏவல், வியங்கோள், முன்னிலை வினைமுற்றுகள் எவை ?

5. பின்வரும் வினைப் பகுதிகளை முறையே வினைமுற்ருகவும் வினை யெச்சமாகவும் பெயரெச்சமாகவும் அமைத்துக்காட்டு:—

நட, வா, நில், குடி, முடி, தேடு, வை, உண், தேய், பார், கேள், வாழ், அல், இல், இரு, பொறு.

---

16. கட்டுரை எழுதுதல்

ஒரு வரலாற்றைச் சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு பல வகைகளில் கூறுதல்

மோட்டார் பஸ் விபத்து

திருச்சி - சேலம் ரஸ்தாவில் எதிரெதிராக வந்த இரண்டு மோட்டார் பஸ்ஸுகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. அதனால் இரண்டு பஸ்ஸுகளிலும் இருந்த பிரயாணிகள் சிலருக்குக் காயம் ஏற்பட்டது. அதைப்பற்றிப் பற்பலர் பற்பல விதமாகக் கூறுகின்றனர். அக்கூற்றுக்கள் பின்வருமாறு :

(i) மோட்டார் பஸ் விபத்தைப்பற்றி ஒரு மோட்டார் ஓட்டி கூறியது:—

நான் என் மோட்டார் பஸ்ஸைச் சரியான வழியில் ஓட்டிக் கொண்டு வந்தேன். என் எதிரில் வந்த மோட்டார் பஸ்ஸைக் கண்டதும் ஊதுகுழலை ஊதி, எனது மோட்டார் பஸ்ஸைச் சற்று இடது பக்கமாக ஒதுக்கி மெதுவாக விட்டேன். எதிரில் வந்த மோட்டார் பஸ் ஓட்டி, தன் கவனக் குறைவினுல் தன்னுடைய மோட்டார் பஸ்ஸை என் மோட்டார் பஸ்ஸின் மேல் மோதிவிட்டான்.

(ii) மோட்டார் பஸ் விபத்தைப்பற்றி மற்ருெரு மோட்டார் ஓட்டி கூறியது:—

என் எதிரில் வந்த மோட்டார் பஸ்ஸைக் கண்டதும் நான் முறைப்படி ஊதுகுழலை ஊதிவிட்டு, என் மோட்டார் பஸ்ஸை இடது பக்கமாகச் சற்றுத் திருப்பி மெதுவாக ஓட்டினேன். எதிரில் மோட்டார் பஸ்ஸை ஓட்டிக்கொண்டு வந்தவனும் அவ்வாறே செய்தான் என்ருலும், இரண்டு பஸ்ஸுகளும் முழுவதும் ஒன்றை ஒன்று தாண்டுவதற்குள் திடீரென்று அவன் அவசரப்பட்டுத் தன்னுடைய மோட்டார் பஸ்ஸை நேர்வழியில் திருப்பி வேகமாகச் செலுத்த முயன்ருன்; அதனுல் இரண்டு பஸ்ஸுகளும் ஒன்ருெடொன்று மோதிக்கொள்ள நேர்ந்தது.

(iii) மோட்டார் பஸ் விபத்தைப்பற்றிப் பஸ் பிரயாணி ஒருவர் கூறியது:—

எங்கள் எதிரில் வந்த மோட்டார் பஸ் எந்தப் பக்கத்தில் எங்கள் பஸ்ஸை மோதிற்ருே அந்தப் பக்கத்தில்தான் நான் உட்கார்ந்திருந்தேன். நடந்த விஷயத்தை நான் கண்டவாறு சொல்லுகிறேன்: எதிரில் வந்த மோட்டார் பஸ் எங்கள் பஸ்ஸைக் கடந்து செல்லும்போது எங்கள் பஸ்ஸோடு மோதிக்கொள்வதைப் போல் வருவதைக் கண்டு, பயந்து ஒதுங்கி மறு பக்கமாகச் சாய்ந்துகொண்டேன். அவ்வளவு

தான். திடீரென்ற ஓசையுடன் அந்த பஸ் எங்கள் பஸ்ஸில் வந்து மோதிற்று. உடனே எங்கள் பஸ்ஸில் இருந்த எல்லா ரும் ஒருவர்மேல் ஒருவராக விழுந்தோம். அப்போது எதிரில் இருந்த ஒரு கம்பியில் என் நெற்றி மோதிப் புடைத்துப் போயிற்று. நல்ல வேளையாகப் பலமான காயம் ஏற்படவில்லை. இதோ, என் நெற்றியிலுள்ள புடைப்பைப் பாருங்கள்!

(iv) மோட்டார் பஸ் விபத்தைப்பற்றி நேரில் கண்ட ஒருவர் கூறியது :—

நான் மோட்டார் பஸ் விபத்து நடந்த இடத்திற்குச் சுமார் பத்து கெஜ தூரத்தில் இருந்தேன். இரண்டு பஸ்ஸுகளும் ஒன்றை ஒன்று சந்திக்க நேர்ந்தபோது சற்று மெதுவாகவே சென்றன. அந்த இடத்தில் பாதையும் சற்று அகலமாகவே தான் இருந்தது. இரண்டு பஸ் ஓட்டிகளும் சிறிது கவ னித்து ஓட்டியிருந்தால் விபத்து நேர்ந்தே இராது. அவர் கள் ஏன் ஒருவரை ஒருவர் இடித்துக்கொள்ளுமாறு அவ்வ ளவு சமீபத்தில் ஓட்டினார்களென்று தெரியவில்லை. பஸ்ஸுகள் மோதியதும் அவற்றில் இருந்தவர்கள் ஒருவர்மீது ஒருவர் மோதிக்கொண்டு பஸ்ஸுகளுக்குள்ளேயே விழுந்தார்கள். பலர் 'ஐயோ! அப்பா!' என்று கத்தினார்கள். ஒரு கிழவி பஸ் ஸுக்குள்ளிருந்து கீழே விழப்போனாள். நல்ல வேளையாக, அவள் விழுவதற்குள் ஒரு மனிதன் குறுக்கே விழுந்ததால், அவள் கீழே விழாமல் தப்பினாள். ஆனால், குறுக்கே விழுந்த மனி தனுக்குக் கையில் அடிபட்டு எலும்பு பிசகிக்கொண்டது.

பிறகு நான் அருகில் சென்று பார்த்தேன். அப்போது பஸ் ஸுக்குள்ளிருந்த ஒரு பெண் தடுமாறி விழுந்து, ஒரு குழந்தை யின் காலை மிதித்துவிட்டாள். அந்தக் குழந்தை வலி பொறுக்க முடியாமல் கதறிற்று. கம்பியில் மோதிக்கொண்டதால் தலையின் பின்புறம் அடிபட்டு ஒருவர் மூர்ச்சையாய்க் கிடந்தார். வேறு

இருவருக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டது. ஒருவர் கீழே விழுந்து முழங்கால், கை இவற்றைச் சிராய்த்துக்கொண்டார். ஒரே ஒரு மனிதருக்குத்தான் பலத்த அடி. அவருக்கு மண்டை உடைந்து விட்டது. ஒரு பஸ்ஸின்மேல் ஏற்றப்பட்டிருந்த ஒரு நெல் மூட்டை உருண்டு கீழே விழுந்துவிட்டது. மற்றொரு பஸ்ஸிலிருந்து ஒரு டிரங்குப்பெட்டி கீழேவிழுந்து நசுங்கிப் போயிற்று. நல்ல வேளையாக அவை யார் மேலும் விழவில்லை. பொதுவாகக் கூறுமிடத்து இரண்டு பஸ் ஓட்டிகளும் கவனக் குறைவாய் நடந்துகொண்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

(v) மோட்டார் விபத்தைப்பற்றிப் போலீஸ்காரன் கூறிய சாட்சியம் :—

நானும், வேறு சில போலீஸ்காரரும், எங்கள் இன்ஸ்பெக்டரும் மாலை 4-35 மணிக்கு அந்த இடத்தைப் போய்ப் பார்வையிட்டோம். விபத்து மாலை 1-45-க்கு நடந்ததாகத் தெரியவந்தது. பஸ்ஸுகள் சென்ற பாதையில் இரண்டு பக்கங்களிலும் நிறைய இடமிருந்தது. பஸ் ஓட்டிகள் தங்கள் கவனக் குறைவினால் நன்றாக விலக்கி ஓட்டாத காரணத்தால்தான் பஸ்ஸுகள் மோதிக்கொண்டிருக்க வேண்டும். மோட்டார் பஸ் ஓட்டிகளுக்குள் எவ்வித விரோதபாவமும் இருந்ததாகத் தெரியவில்லை ; குடிவெறி இருந்ததாகவும் தெரியவில்லை. கவனக்குறைவே இதற்குக் காரணம் என்று நன்றாக விளங்கிற்று. பஸ்ஸுகள் ஒன்றை ஒன்று எதிரெதிராகக் கடந்து செல்லும்போதுதான் விபத்து நேர்ந்திருக்க வேண்டும். ஏனெனில் இரண்டு பஸ்ஸுகளிலும் சக்கரத்தின் மட்காடுகள் வளைந்துபோயிருக்கின்றன.

(vi) மோட்டார் ஓட்டி மோட்டர் பஸ் விபத்தைப்பற்றித் தன் நண்பனுக்கு எழுதிய கடிதம் :—

திருச்சி,
6—8—'38.

அருமை நண்பன் நடராஜனுக்கு,

வந்தனம்; நலம்; நலம் தெரிய விருப்பம்.

நான் சென்ற திங்கட்கிழமையன்று சேலத்திலிருந்து திருச்சிக்கு வந்துகொண்டிருந்தபோது, என் எதிரில் வேறு கம்பெனி மோட்டார் பஸ் ஒன்று வந்துகொண்டிருந்தது. உடனே நான் முறைப்படி ஹார்ன் அடித்து, என் பஸ்ஸை மெதுவாக ஓட்டிச் சென்று அதைக் கடக்க முயன்றேன். பாதையினோரத்தில் இடம் அதிகமிருந்ததால் நான் அதிகமாக ஒதுக்கி ஓட்டிச் செல்லவில்லை. இதே கருத்துடன்தான் தானும் அதிகமாக ஒதுக்கவில்லை என்றுஎதிரில்வந்தபஸ் ஓட்டியும் என்னிடம் கூறினான். என் பஸ் அந்த பஸ்ஸை முக்கால் பங்கு தூரம் கடந்ததும், நடு ரஸ்தாவிற்கு என் பஸ்ஸை நான் திருப்பினேன். அந்த பஸ்ஓட்டி தானும் உடனே அவ்வாறு திருப்பியதால் இரண்டும் மோதிக்கொள்ளும்படி நேர்ந்துவிட்டது. நீதிபதி தம் விசாரணையின் முடிவில் எங்கள் இருவருடைய கவனக் குறைவினாலும் இவ்விபத்து நேர்ந்ததாகத் தீர்மானித்து எங்கள் இருவருடைய வண்டி ஓட்டும் உரிமையை (லைசென்ஸ்களை) மூன்று மாத காலம் நீக்கி வைத்து விட்டார். ஏதோ, என் போதாத வேளையால் நான் இந்த மூன்று மாத காலத்திற்கு வேலை இல்லாமல் திண்டாட நேர்ந்திருக்கிறது. இச்சமயம் தயவுசெய்து நீ 20 ரூபாய் கடனாகக் கொடுத்தால், நான் மீண்டும் வேலை பெற்றதும் இரண்டு மாத காலத்திற்குள் மாதம் 10 ரூபாய் வீதம் அத்தொகையைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன். இச்சமயத்தில் அவசியம் நீ உதவி செய்வாய் என்று நம்புகிறேன்.

இங்ஙனம்,
உனது அருமை நண்பன்,
கோபாலசாமி.

இலக்கணம்

சொற்றொடர்

கலப்பு வாக்கியமும், சார்புச் சொற்றொடர்களின் முடிபும்

1. சில கலப்பு வாக்கியங்களில் ஒருவனது கூற்றை அப்படியே எடுத்துக் கூறுவதாகிய நேர்க்கூற்று வாக்கியம் அமைந்து வருவதுண்டு. அவ்வாறு வருங்கால் அந்த நேர்க்கூற்று வாக்கியம் சார்புச் சொற்றொடராய், அதிலுள்ள பயனிலைக்குச் செயப்படு பொருளாய் இருக்கும்.

(உ-ம்.) "நீ இவ்வாறு செய்தது நியாயமே" என்று கோபாலன் கூறினன்.

இதில், **நீ இவ்வாறு செய்தது நியாயமே** என்னும் நேர்க்கூற்று வாக்கியம், சார்புச் சொற்றொடராய், இக்கலப்பு வாக்கியத்திலுள்ள பயனிலையாகிய 'கூறினன்' என்பதற்குச் செயப்படுபொருளாய் இருப்பது காண்க.

2. நேர்க்கூற்று வாக்கியங்களை வேறு ஒருவன் எடுத்துக் கூறுவதுபோலக் கூறும்போது, அந்த நேர்க்கூற்று மொழிகள் சிறப்பு வாக்கியத்தின் பயனிலைக்கு எழுவாயாகவேனும், செயப்படு பொருளாகவேனும் வரும்.

(உ-ம்.) (1) "இராமன் கந்தனை அடித்தான்" என்பதே வேலன் கூற்று.

இதில் **இராமன் கந்தனை அடித்தான்** என்பது நேர்க் கூற்று. இந் நேர்க்கூற்று மொழி, சிறப்பு வாக்கியத்தின் பயனிலையாகிய 'கூற்று' என்பதற்கு எழுவாயாக வந்தது.

(2) "இராமா, நீ ஏன் இங்கு வந்தாய் ?" என்று வேலன் கேட்டான்.

இதில் **இராமா, நீ ஏன் இங்கு வந்தாய்** என்னும் நேர்க் கூற்று மொழி, சிறப்பு வாக்கியத்திலுள்ள 'கேட்டான்' என்னும் பயனிலைக்குச் செயப்படுபொருளாய் வந்தது.

3. சிறு தனிவாக்கியங்களை ஒன்றுசேர்த்துக் கலப்பு வாக்கியமாக ஆக்கும்போது, கருத்து மாருமல் மொழிகளைத் தக்கவாறு கொண்டு கூட்டி முடிக்கவேண்டும்.

(உ-ம்.)

தனிவாக்கியம்	கலப்பு வாக்கியம்
1. சுந்தரனுக்குத்தெலுங்கு மொழி பேசத்தெரியும். ஆயினும் அவனுக்குத் தெலுங்கு எழுதத் தெரியாது.	1. சுந்தரனுக்குத் தெலுங்கு மொழி பேசத் தெரியுமே ஒழிய எழுதத் தெரியாது.
2. வால்மீகி முனிவர் வடமொழியில் இராமாயணம் இயற்றினர். அவர் ஆதிகவி எனப்படுகிருர்.	2. வடமொழியில் இராமாயணம் இயற்றிய வால்மீகி முனிவர் ஆதிகவி எனப்படுகிருர்.

4. பெரிய கலப்பு வாக்கியங்களைச் சிறு தனி வாக்கியங்களாகப் பிரித்து எழுதும்போது, ஒவ்வொரு சிறு வாக்கியத்திலும் ஒவ்வொரு கருத்து அமையுமாறு, ஒழுங்குபெறப் பிரித்து எழுதவேண்டும்.

(உ-ம்.)

கலப்பு வாக்கியம்	தனி வாக்கியம்
1. அவனுக்கு விரைவில் தண்ணீர் கொடுக்காவிட்டால், அவன் இறந்துபோவான்.	1. அவனுக்கு விரைவில் தண்ணீர் கொடுக்கவேண்டும். கொடாவிடில் அவன் இறந்துபோவான்.
2. மணி ஐந்து அடித்ததும், நான் படுக்கையை விட்டு எழுந்து, கடவுளை மனமார வாழ்த்தித் தொழுதேன்.	2. மணி ஐந்து அடித்தது. நான் படுக்கையினின்றும் எழுந்தேன். உடனே கடவுளை மனமார வாழ்த்தித் தொழுதேன்.

17. பிரபுல்ல சந்திர ராய்

பிரபுல்லர் வங்காள மாகாணத்தைச் சேர்ந்த ஒரு பெரியார். இவர் நல்ல பரம்பரையிற் பிறந்தவர். இவர் இளமை முதலே நுண்ணறிவும், ஊக்கமும் படைத்தவராய் இருந்தார். இளம் பருவத்தில், இவர் பள்ளிக்கூடங்களிற் படித்தபோது, பாடப் புத்தகங்களைப் படிக்கும் அளவில் நின்றுவிடாது, பொதுவகையான பல புத்தகங்களை வாங்கிப் படித்துத் தமது அறிவை வளர்த்து வந்தார். இவர், பன்னிரண்டு வயது முதலே காலை மூன்று மணிக்கு எழுந்து கருத்தோடு படிக்கும் வழக்கம் உள்ளவராய் இருந்தார். இளங் குமாரராய் இருந்த அப்பருவத்திலேயே இவர், அந்நாளில் மிக்க நாவன்மை படைத்தவராய் இருந்த **கேசவ சந்திர சேன**ரின் இனிய மொழிகளால் மனம் கசிந்து பிரம சமாஜக் கொள்கையைப் பின்பற்றினர்.

பிரபுல்லருக்குப் பதின்மூன்ரும் வயது நடக்கும்போது, பேதி நோய் வந்தது. அந்நோய் இவரது உயிரைக் கொள்ளை கொள்ள வலிமையற்றுப் போயினும், வயிரம் போல் வளர வேண்டிய உடம்பின் வலிமையைக் குறைத்துவிட்டது நோயின் பயனுகப் பள்ளிக்கூடப் படிப்பும் சில நாள் நின்றது. அக்காலத்தில் **பங்கிம் சந்திர சட்டர்ஜி** என்ற நாவலர் சிகாமணி இயற்றிய வங்க நவீனங்களை இவர் மனம் உருகி வாசித்துப் பயன் பெற்ருர். தாய்மொழியிற் பூரண அபிமானம் வைத்த பிரபுல்லர், பின்னுளில் உயர்தரக் கல்விக்கு உதவும் என்னும் எண்ணத்தால், இலத்தீன் மொழியும் பயின்ருர். ஏழு மாதங்களில் நோய் குணமாயிற்று. உடம்பு ஒருவாறு உரம் பெற்றது.

கல்விப்பயிற்சி இடையீடு பட்டதும் இவர்க்கு ஒரு வகையில் நன்மையாகவே முடிந்தது. பாடப்புத்தகங்கள் என்ற ஓர் இனத்தில் அறிவு செல்லாமல், பல வழிகளிலும் சென்று விரிவு பெற்றது. முன்பு பயின்று வந்த கலாசாலையை விட்டு விலகிக்

கேசவ சந்திரர் கலாசாலையிற் சேர்ந்து மிக்க ஊக்கத்தோடு கல்வி கற்கலானார். பிரபுல்லர் இப்படிக் கல்வி கற்று வருகையில், இவரது தந்தையார் வரவு செலவு நன்கு அறிந்து வாழாமையால், கடன்களில் அகப்பட்டு வருந்த நேர்ந்தது. அதனால், அவர் நகரவாசத்தில் செலவு அதிகமாவதை அறிந்து கிராமத்



பிரபுல்ல சந்திர ராய்

துக்கே போய்விட நினைத்தார்; பிள்ளைகளைக் கல்விச்சாலைகளுக்குத் தொடர்புள்ள விடுதிகளில் இருந்து வாழச்செய்து, கிராமத்துக்குப் போனார். சில ஆண்டுகளில், கூரிய அறிவு பெற்ற நம் பெரியார் இக்கலாசாலைக் கல்வி நிறைவேறி **ஈசுவர சந்திர வித்தியா**

சாகரர் நடத்திய பெரிய கல்லூரியில் போய்ச் சேர்ந்து உயர் தரக் கல்வி கற்றார்.

பிரபுல்லர் கல்வி கற்ற நாளில் அக்கல்லூரியில் **ஸ்ரீ சுரேந்திர நாத பானர்ஜி** என்ற வங்க தேசபக்தர் ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியராக இருந்தார். **ஸர் அலெக்ஸாண்டர் பட்லர்** என்ற ஆங்கிலேயர் இரசாயன சாத்திர ஆசிரியராய் இருந்தார். இந்த ஆசிரியர்களது நாவன்மையிலும் கல்வித் தேர்ச்சியிலும் மனம் செலுத்திய பிரபுல்லர், அன்று முதலே இரசாயன சாத்திரத்தில் ஊக்கம் கொண்டார்; அந்தப் பருவத்தில், இவர் ஸம்ஸ்கிருத மொழியும் பிரெஞ்சு மொழியும் பயின்று தமது அறிவை வளம் படுத்திக் கொண்டார்; எம். ஏ. தேர்ச்சிப் பட்டம் பெற்றதும் இங்கிலாந்து செல்வோரைத் தெரிந்தெடுக்கும் பரீக்ஷையிலும் வெற்றி பெற்று, அவ்விளம் பருவத்தே இங்கிலாந்துக்குச் சென்றார்.

இங்கிலாந்துக்குச் சென்ற இவ்வறிஞர் ஒரு வார காலம் லண்டன் மாநகரில் இருந்து, அங்குள்ள அரிய காட்சிகளைக் கண்டு களித்த பிறகு, ஸ்காட்லண்ட் மாகாணத்தில் உள்ள எடின்பரோ நகரத்துக்குப் போய் அங்குள்ள சர்வகலாசாலையில் இரசாயன சாத்திரப் பயிற்சி பெறலானார். அந்நாளில் ஒரு வியாசப் போட்டியிற் கலந்து, இந்திய சரித்திரத்தில் ஒரு முக்கிய சம்பவத்தை அழகுறத் தெளிவாக விளக்கித் தமது ஆராய்ச்சித் திறமை, எழுத்து வன்மை என்னும் இரண்டையும் சோதிப்பவர் அறியக் காட்டினார். இக்கட்டுரைத் தேர்வில் இவர் தக்கதொரு காரணத்தாற் பரிசு பெறவில்லை ஆயினும், பாராட்டப் பெற்றார். இவ்விளஞ் சிங்கம் அந்நாளில் சாத்திரப் பயிற்சியில் இருந்த ஊக்கத்திற் சிறிதும் குறைவுறாத ஊக்கத்தோடு சரித்திரமும் பயின்றார். அந்நாளில் சாத்திரம் வல்லவர் சரித்திரத்தில் குழந்தைகளாய் இருப்பர். சரித்திரம் வல்லவரோ சாத்திரத்தில் கண்ணும் காதும் இல்லாத ஊமைகளாய் இருப்பர். இவ்விரு வகைக் கல்வியும் ஒருவரிடம்

ஒருங்கு பொருந்துவது அபூர்வமே. இவரால் நம் நாடு பெற்ற நன்மைக்கெல்லாம் இவர் இரண்டும் கற்ற பூரணக்கல்வியே காரணமாகும்.

இவர் மேல் நாட்டிற் கல்விப் பயிற்சி நிறைவேறியதும், இந்திய நாட்டிற்கு வந்து ஆசிரியத்தொழிலை மேற்கொண்டார். இன்று இந்தியா முழுதும் உள்ள பல சர்வகலாசாலைகளில் இரசாயன சாத்திரப் பகுதியின் தலைவராய் இருப்போர், இவர் மாணவர்களே என்று கூசாமற் கூறலாம். விஞ்ஞான ஆராய்ச்சியில் மேல் நாட்டார் செல்லும் முறையை அறிய விரும்பி, இப் பெரியார் இரண்டு மூன்று முறை அங்நாடுகளுக்குப் போய் வந்து, தாம் பெற்ற அறிவையும் அனுபவத்தையும் தம் மாணவர்களுக்கே அர்ப்பணம் செய்திருக்கிறார்.

இவர் 1912-ஆம் ஆண்டு வரையில் உத்தியோக பதவியில் இருந்து, பின்பு உபகாரச் சம்பளம் பெற்று விலகிக் கொண்டார். கல்கத்தா சர்வகலாசாலை இன்று நிற்கும் உயர் நிலையில் நிறுத்திய **ஸர் அசுடோஷ் முகர்ஜி** என்ற பேரறிஞர், இவரது அறிவின் ஆழத்தை அறிந்து ஒரு விஞ்ஞானக் கலாசாலை நிறுவி, இவரை அதன் தலைவர் ஆக்கினர். பிரபுல்லர் அப்பதவியில் இருந்து இயற்றிய ஆராய்ச்சிகள் எண்ணிறந்தன. அவற்றால் இவர் உலகம் புகழும் பெருமை பூண்டார். அரசாங்கத்தார் இவரது உழைப்பை அறிந்து, இவருக்கு **ஸி. ஐ. இ., ஸர்** முதலிய பட்டங்கள் கொடுத்தனர். பல அயல் நாட்டுச் சர்வ கலாசாலைகளிலும் இந்தியச் சர்வ கலாசாலைகளிலும் இவருக்கு **டாக்டர்** பட்டம் கிடைத்தது. ஆடம்பரத்தில் இச்சையில்லாத இப்புண்ணியர், இன்று அப்பட்டங்களை மறந்து ஆசாரிய சிரேஷ்டராகவே விளங்குகிறார்.

உலகை மயக்கும் வெளி வேடத்தில் எப்பொழுதும் ஆசை இல்லாத இவர், முழங்கால்வரை கட்டிய ஒரு வெள்ளாடையும்,

உடம்பை மறைக்கும் மேல் சட்டையும், ஒரு சிறு மேல் ஆடையும் உடையராய் இருப்பதை நம் நாட்டார் அனைவரும் அறிவர். எவ்வளவு பெருங்கூட்டங்களில் பேசப்போனாலும், இதற்கு மேல் அலங்காரம் செய்துகொள்ளும் வழக்கம் இவரிடம் இல்லை.

தமது உடல்நிலை எப்பொழுதும் உறுதியாய் இல்லாததால், மிகவும் குறைந்த அளவில் அதிகச் செலவு இல்லாத உணவே இவர் உண்ணுவார். இவர், தம் ஒரு நாளைய உணவுச் செலவுக்கு இரண்டணுவுக்குமேல் ஆகாது என்று கணக்கிட்டிருக்கிறார். சாத்திர ஆராய்ச்சியே தம் வாழ்வின் நாட்டமாகக் கொண்ட இவர், கலியாணம் செய்து குடும்பத்தை வளர்க்கும் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால், தாம் தேடிய பொருளை எல்லாம் கல்விக்கும், பொருளின்றி வருந்தும் ஏழை மாணுக்கர்களுக்கும் கொடுத்தே செலவழிக்கிறார்; தாம் தேடிச் சேர்த்த செல்வத்திற் பெரும் பகுதியைக் கல்கத்தா சர்வ கலாசாலைக்குக் கொடுத்திருக்கிறார்.

பொதுநலச் செயல்களில் எல்லாம் முன்னணியில் நிற்கும் இக்கிழவர், நம் நாட்டார் நன்மை கருதி ஒரு பெரிய காரியம் செய்திருக்கிறார். சில நண்பர் துணைபெற்று, ஆயிர ரூபாய்க்குள் முதல் வைத்து இவர் தொடங்கிய வங்காள ரசாயன மருந்துத் தொழிற்சாலை, (Bengal Chemical and Pharmaceutical Works) இன்று ஐம்பது லக்ஷ ரூபாய்க்கு மேற்பட்ட மூலதனத்தோடு பல அரிய மருந்துகளையும், இரசாயனங்களையும், உப்புகளையும், பிற உபயோகமான பொருள்களையும் செய்யும் தொழிற்சாலையாக வளர்ந்திருக்கிறது. நம் நாட்டில் எங்கும் பரவியுள்ள ஆங்கில வைத்திய முறைக்கு வேண்டிய பலவகை மருந்துச் சரக்குகளும் வேறு புதிய தொழில்களுக்கு வேண்டிய உப்பு வகைகளும் இத்தொழிற்சாலையில் சிறப்பாய்ச் செய்யப்படுகின்றன.

மண்வெட்டி, கொழு, அரிவாள், கோடரி, உளி, இழைப்புளி, பலவகைக் கம்பிகள், ஊசி முதலிய இருப்புக் கருவிகளையே, அயல் நாடுகளிலிருந்து கப்பல்களில் வருவிக்கும் நிலையில் இருக்கும் நம் நாட்டில், இயந்திரங்கள் செய்யும் தொழில் ஓங்கவில்லை என்பது உண்மையே. இந்த நிலையிலும் இத்தொழிற்சாலைக்கு வேண்டியிருந்த புதிய இயந்திரங்கள் எல்லாம், இந்திய மக்களால் இந்திய நாட்டிலேயே செய்யப் பெற்றது, இப்பெரியார் புகழை உலகமறிய விளக்குவதாம். உழைப்பும் தரும குணமும் உருவமாக உடைய இப்பெரியார் இன்னும் நெடுங்காலம் வாழ்வாராக! இந்தியப் பெருங்கிழவர் என்ற பெரும்புகழ் இவர்க்கு உலகெங்கும் பரவுவதாகுக.

1. அரும்பத விளக்கம்

வங்காளி - வங்க நாட்டினர், அயல்மொழிப் பித்து - பிற மொழிப் பற்று, முன்னணி - முன்புறத்திலுள்ள வரிசை, நாவலர் சிகாமணி - பேச்சு வன்மையுடையவருள் சிறந்தவர், இரசாயனம் - ரஸங்களின் தன்மையைத் தெரிவிக்கும் கலை (Chemistry); சம்பவம் - நிகழ்ச்சி, அர்ப்பணம் - தனக்கென வேண்டாது கொடுத்துவிடுதல், பெருங்கிழவர் - வயது முதிர்ந்த பெரியார்.

2. கேள்விகள்

1. வங்க மக்களின் இயல்பு யாது?
2. பிரபுல்ல சந்திர ராயின் மூதாதையர் யாவர்? அவர்களைப்பற்றி நீவிர் அறிந்ததை எழுதுங்கள்.
3. பிரபுல்ல சந்திர ராயின் குணாதிசயங்களைக் கூறு.
4. பிரபுல்லர் பிரம சமாஜக் கொள்கைகளைப் பின்பற்றக் காரணம் என்ன?
5. பிரபுல்லர் கற்ற மொழிகளும், அறிந்த சாத்திரங்களும் யாவை?
6. பிரபுல்லர் நாட்டுக்கு இயற்றிய நன்மை யாது?
7. அவர் வாழ்க்கையினால் நாம் அறியத்தக்க உண்மை என்ன?

8. குறிப்பு எழுது :—
பங்கிம் சந்திர சட்டர்ஜி, ஈசுவர சந்திர வித்யாசாகரர், ஸர் அலெக்ஸாண்டர் பட்லர், ஸர் அசுடோஷ் முகர்ஜி.

3. இலக்கணம்

குற்றியல் உகரத்தின் முன் வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால், குற்றியல் உகரம் தான் ஏறியுள்ள மெய்யை விட்டுக் கெடும் ; அம்மெய்யோடு வருமொழி முதலில் உள்ள உயிர் கூடும்.

(உ-ம்.) (1) நாகீன்றது = நாகு + ஈன்றது
= நா + (க் + உ) + ஈன்றது
= நா + க் + ஈன்றது—கு. உகரம் உயிர் வரக் கெட்டது.
= நா + (க் + ஈ)ன்றது
= நாகீன்றது.

(2) மார்பகலம் = மார்பு + அகலம்
= மார் + (ப் + உ) + அகலம்
= மார் + ப் + அகலம்—பு. உகரம் உயிர் வரக் கெட்டது.
= மார் + (ப் + அ) + கலம்
= மார்பகலம்.

பயிற்சி

1. இவ்வரலாற்றைப் பிரபுல்லரே கூறுவதுபோலக் கூறு.
2. இதனை ஒரு கட்டுரையாக எழுது.
3. பிரபுல்லரது இளமை, அவர் கல்வி கற்றது, ஆராய்ச்சி, தொழில் - குணாதிசயங்கள் : இக் குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரை எழுது.
4. ஒவ்வொரு பிரிவிற்கும் தக்க தலைப்புக் கொடு.
5. இவரது வரலாற்றில் முக்கியமான ஒரு பகுதியை விளக்கி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.
6. சரித்திரம், சாத்திரம் என்ற இரண்டின் பெருமைகளைப் பற்றி நண்பர் இருவர் பேசுவது போல எழுது.
7. 'அயல்மொழிப் பித்து, தன்மொழிப் பற்று' என்னும் பொருள்பற்றி இருவர் பேசுவது போல எழுது.

18. தேனீயும் தேனும்

(1) தேனீ வளர்த்தல்

தேனீக்கள் என்னும் ஒருவகை ஈக்கள் தம் கூடுகளில் சேர்த்து வைக்கும் தேன் மனிதர்க்குப் பல வகையில் பயன்படுகிறது. ஆகையால் தேனீக்களை வளர்த்துத் தேனைச் சேர்ப்பதற்கு மனிதர்கள் சில முறைகளைக் கையாளுகிறார்கள். அம்முறைகளைப் பற்றி இங்கே கூறுவோம்.

வளர்த்தற்குரிய தேனீ இன்னதென்பது: தேனீக்களுள் பல வகை உண்டு. அவற்றுள் இந்தியாவின் சாமானியத் தேனீயாகிய **அடுக்குத் தேனீ** அல்லது **வங்குத் தேனீ** என்பது தேன் சேர்த்தலுக்காக வளர்க்கப்படுகிறது. இத்தேனீக்கள் சாதாரணமாய் மரப்பொந்துகள், சுவரின் வெடிப்புகள், சந்துகள், பூமியிலுள்ள பொந்துகள் முதலியவற்றில் கூடுகட்டி வாழ்ந்திருக்கும். இவற்றைப் பிடித்துவந்து மனிதர் தாம் அமைத்த மரக்கூடுகளில் வைத்து வளர்த்துத் தேன் சேர்ப்பார்கள்.

தேனீ வளர்த்தற்குரிய கூட்டின் அமைப்பு: இத்தேனீயை வளர்ப்பதற்காக ஒருவகைக் கூடு மரத்தினால் செய்யப்படுகிறது. அக்கூட்டைப் படத்தில் பார்க்கவும். இந்தக் கூட்டின் உட்புறம் ஒன்றின்மேல் ஒன்றாகச் சுமார் ஏழு அடுக்கு அறைகள் இருக்கும். அவ்வித அடுக்கு அறை ஒன்று தனியாக எடுத்து வைக்கப்பட்டிருப்பதை 118-ஆம் பக்கத்திலுள்ள படத்தில் காண்க. கூடு நான்கு பக்கங்களிலும் மூடப்பட்டிருப்பதையும், அதனடியில் தேனீக்கள் உள்ளே சென்று வருவதற்காகச் சந்து விடப்பட்டிருப்பதையும் கவனிக்கவும்.

தேனீக்களைப் பிடித்துக் கூட்டில் அடைக்கும் விதம்: முதலில் இயற்கையில் தேனீ கூடு கட்டியிருக்கும் ஓர் இடத்தைக் கண்டுபிடிக்கவேண்டும். பிறகு ஒரு கோடரி, உளி, சிறிது வாழை

தேனீ வளர்த்தலும் தேன் சேர்த்தலும்



1. தேன் கூடும் தேனீக்களும். 2.தேனீ வளர்க்கும் பெட்டியும் அதன் பாகங்களும், 3. தேனீ தேன் தேடுதல், 4. தேனீக்கள் தேன் கூட்டில் வேலை செய்தல், 5. தேன் சட்டத்திலிருந்து தேன் எடுக்கும் விதம்.

நார், மரத்தால் செய்யப்பட்ட ஒரு தேன்கூடு, ஒரு காலி நெருப் புப் பெட்டி, அல்லது மூன்றங்குல நீளமும் ஓர் அங்குல அகல மும் உள்ள ஒரு பக்கம் வாய்திறந்த கண்ணுடிக் குழை, சிறிது பழைய கந்தை இவற்றை எடுத்துக்கொண்டு அவ்விடத்திற் குச் செல்லவேண்டும்.

தேனீக் கூட்டத்தைப் பிடிப்பதற்கு நல்ல வெயிலுள்ள காலே நேரமே தகுந்த சமயமாகும். சாதாரணமாய்த் தேன்கூடு அமைந்திருக்குமிடம் பொந்தாகவும், கையை விட்டு எடுத்து வேலே செய்ய முடியாதபடி சிறிய இடுக்காகவும் இருக்கும். அந்த இடுக்கு வழியைப் பெரிதாக்கி நன்ருகக் கைகளே நுழைத்து ஈக்களேப் பிடிக்க ஏதுவாகச் செய்துகொள்ள வேண்டும். பொந் தினுள் தேனும் மகரந்தமும் உள்ள தேன் அடைகள் ஓரங்களி லும், புழுக்களுள்ள அடைகள் நடுவிலும் இருக்கும். இந்த அடைகளே ஜாக்கிரதையாக ஈக்களோடு அப்படியே எடுத்து, அளவாக அறுத்துத் தேன்கூட்டில் உள்ள சட்டங்களில் வைத்து வாழை நாரால் கட்டவேண்டும். இடுக்கு வழியைப் பெரிதாக்கு வதற்காக வேலே செய்யும்போதும், தேனடைகளே எடுத்துச் சட்டங்களில் வைத்துக் கட்டும்போதும் தேனீக்கள் கையில் கொட்டித் துன்பம் செய்யாமலிருக்க, நாம் கொண்டு சென் றுள்ள கந்தைத் துணிகளேக் கொண்டு சிறிது புகை போட வேண்டும். அதிகமாகப் புகை போட்டால் தேனீக்கள் பயந்து பறந்தோடி எங்காவது போய்ப் புகுந்துகொண்டு விடும். அப் பால் அவற்றைப் பிடிப்பது கஷ்டம்.

தேன் கூட்டில் **இராணி ஈ** என்ற ஒரு பெண் ஈயும், பல **ஆண் ஈக்களும்**, பல **வேலேக்கார ஈக்களும்** உண்டு. இவற்றுள் இராணி ஈ உருவத்தில் எல்லாவற்றையும் விடப் பெரியது. ஆண் ஈ நடுத்தரமானது. வேலேக்கார ஈ சிறியது. இவற்றுள் இராணி ஈக்கும் வேலேக்கார ஈக்களுக்கும் . கொட்டுதற்குரிய

விஷத்தன்மை பொருந்திய கொடுக்கு உண்டு. ஆண் ஈக்குக் கொடுக்கு இல்லை.

ஈக்களைப் பிடித்துச் சேர்க்குங்கால் இராணி ஈயைப் பிடிப்பது அதிக அவசியமானது. இராணி ஈயைப் பிடிக்காவிட்டால் தேன் கூட்டையே அமைக்க முடியாது. இதற்காகத் தேன் அடைகளை எடுக்கும்போதே இராணி ஈயைத் தேடிக் கண்டு பிடிக்கவேண்டும். இராணி ஈயைக் கண்டதும், அதை ஜாக்கிரதையாகப் பிடித்து நாம் கொண்டு சென்றுள்ள கண்ணாடிக் குழைக்குள் அதைப் போட்டு, அச்சீசாவின் வாயை ஒரு கொசு வலையால் மூடிக் கட்டவேண்டும். அல்லது நெருப்புப் பெட்டிக்குள் அதைப் போட்டு அப்பெட்டியின் வாயைக் காற்று நுழையத் தக்கவாறு சிறிது திறந்து வைக்கலாம். இவ்வாறு இராணி ஈயைப் பத்திரப்படுத்திய பிறகு, சட்டங்களைத் தேன் கூட்டிற்குள் வைக்க வேண்டும். அப்படி வைக்கும்போது புழுக்களுள்ள அடைகளை நடுவிலும், தேனும் மகரந்தமும் உள்ள அடைகளை ஓரங்களிலும் ஒழுங்காக வைக்கவேண்டும். பிறகு இராணி ஈ உள்ள கண்ணாடிக் குழையை அல்லது நெருப்புப் பெட்டியை அச் சட்டங்களின் மேற்புறமாக வைக்க வேண்டும்.

தேனீக்கள் எப்போதும் இராணி ஈயைச் சுற்றிக்கொண்டிருக்கும் இயல்பு வாய்ந்தவை. ஆகையால் இச்சமயத்தில் தேனீக்கள் இராணி ஈயைக் காணமல் அங்குமிங்கும் பறந்து தேடிக் கடைசியில் நமது கூட்டிலுள்ள சட்டங்களில் வந்து அடையும். போதுமான தேனீக்கள் வந்து சேராமல் இருந்தால் அவை முன் இருந்த கூட்டின் அடியில் புகைபோட்டு அவைகளை அங்கிருந்து துரத்தி நம் கூட்டுக்குள் வரும்படிச் செய்யலாம். தேனீக்களெல்லாம் கூட்டை வந்து அடைந்த பிறகு இராணி ஈயை மெதுவாகத் திறந்து சட்டங்களுக்குள் செல்லவிட்டுக் கூட்டை மேல்மூடியால் மூடவேண்டும். இப்படி மூடிய

பிறகு கூட்டின்மேல் வந்து உட்காரும் ஈக்களை ஒரு சிறு அட்டைத் துண்டால் மெல்லக் கூட்டின் அடியிலுள்ள துவாரத்தின் வழியாக உள்ளே தள்ளிவிடலாம்.

தேனீக்களைப் பாதுகாத்தல்: மேற்கூறியவாறு தேனீக்களைக் கூட்டிலடைத்த பின், அவற்றை வளர்ப்பதற்கென நாம் தயாரித்துள்ள தோட்டத்தில் கொண்டுபோய் வைக்கலாம். ஈக்கள் கூட்டில் அடைக்கப்பட்டதும் உடனே தம் வேலையைத் தொடங்குகின்றன. முதலில் அவை இறந்த புழுக்களையும், சேதமடைந்த பொருள்களையும் வெளியே தள்ளிவிடுகின்றன; பிறகு இரண்டு மூன்று நாட்களில் மகரந்தமும் தேனும் சேர்க்கத் தொடங்குகின்றன. இவற்றைச் சேர்க்க ஆரம்பித்துவிட்டால் ஈக்கள் வேலை தொடங்கிவிட்டதென்று நம்பலாம். இல்லாவிட்டால் சர்க்கரைத் தண்ணீரையோ, நீர் கலந்த தேனையோ சட்டங்களில் சிறிது ஊற்றவேண்டும். தேனீக்கள் வேலை தொடங்கிவிட்டால் பிறகு அவை ஒழுங்காக வேலை செய்துவரும். சுமார் ஐந்தாறு மாதங்களில் பெரும்பாலும் கூட்டிலுள்ள சட்டங்களில் எல்லாம் தேனடைகள் கட்டப்பட்டிருக்கும். சில சமயங்களில் போதுமான இரை கிடைக்காமல் தேனீக்கள் சோம்பலாக இருப்பதுண்டு. அப்போது சிறிது சர்க்கரைத் தண்ணீரையோ, தண்ணீர் கலந்த தேனையோ சட்டங்களில் தெளித்துவைக்கவேண்டும்.

தேனீக்களின் விரோதி: தேனீக்களுக்குக் கொடிய விரோதியாக **மெழுகுப் பூச்சி** என்ற ஒரு பூச்சி உண்டு. இப்பூச்சி தேன் அடையைத் துளைத்துக்கொண்டு உட்சென்று, தன்னைச் சுற்றிக் குழாய்போல் பட்டினால் ஒரு கூடு அமைத்துக்கொண்டு, அடைகள் எல்லாவற்றையும் தின்றுவிடுகின்றது. இது வந்திருக்கின்றதா என்று பார்ப்பதற்கு, அடிக்கடி கூட்டைத் திறந்து அடைச்சட்டங்களை வெளியில் எடுத்துப் பார்ப்பது நலம்.

தேனடைச் சட்டங்களைக் கையாளும் விதம்: தேனடைச் சட்டங்களை வெளியிலெடுத்துப் பார்ப்பதற்காகக் கூண்டை ஜாக்கிரதையாகத் திறக்கவேண்டும். மேல் மூடியும், சட்டங்களும் அடிக்கடி மெழுகினால் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கும். கத்தியால் முதலில் அவற்றை மெல்லக் கிளப்பிப் பிறகு அவற்றைக் கையில் எடுக்கவேண்டும். சட்டங்களை எடுத்துத் திருப்பிப் பார்க்க வேண்டுமானால்,வலது கையை மெதுவாகத் தூக்கி நிறுத்திப் பின் மெதுவாகத் திருப்பி, அக்கையைக் கீழே கொண்டுவந்து, சட்டத்தின் கீழ்ப்பக்கம் மேலே வரும்படி பிடிக்கவேண்டும். இதே முறையை மாற்றிச் செய்தால், சட்டம் முன்னிருந்த நிலைமைக்கு வரும். இவ்வாறு ஜாக்கிரதையாகச் சோதிக்காவிட்டால், தேன் அடைகள் சட்டங்களினின்று கீழே விழுந்துவிடும்.

(2) தேன் சேர்த்தல்

தேன் கூட்டினின்று தேன் சேர்க்கும் விதம்: தேன்கூட்டில் தேன் சேர்க்கப்பட்டுள்ள அடைகள் கூட்டின் மேற்புறமாக உள்ள தேன் சட்டங்களில் அமைக்கப்பட்டிருக்கும். அந்த அடைகளுள் சிலவற்றில் வெள்ளையான மேற்பூச்சுப் பூசப்பெற்றிருக்கும். இப் பூச்சுள்ளவையே நன்றாகப் பக்குவமடைந்தவையும், பயன்படுத்த ஏற்றவையும் ஆன தேன் அடைகளாம். பூச்சு இல்லாத அடைகளை அவை பக்குவமடைவதற்காக விட்டுவைக்கவேண்டும். பக்குவமடைந்த அடைகளைமட்டும் வெளியே தனியாக எடுத்து, அவற்றிலுள்ள ஈக்களைப் போக்கி விட்டு, அவற்றின் மேற்பூச்சை ஒரு கத்தியால் இலேசாகச் சுரண்டி எடுத்துவிடவேண்டும். பிறகு அதை முன் 118-ஆம் பக்கத்தில் உள்ள படத்தில் 5-ஆம் பகுதியில் காட்டப்பட்டிருப்பதைப்போன்ற ஓர் இயந்திரத்தில் வைத்துச் சுற்றவேண்டும். சிறிது நேரத்தில்

அதிலுள்ள தேனெல்லாம் இயந்திரத்தின் அடியில் ஒன்று சேர்ந்து, அங்குள்ள குழாயின் வழியாக வெளியில் வந்து அத னடியில் வைக்கப்பட்டுள்ள பாத்திரத்தில் விழும்.

தேனீக்களை அடையினின்று ஓட்டும் விதம்: தேனடையி லிருந்து தேனீக்களை ஓட்டுவது கஷ்டமான வேலை. ஆயினும், இதற்கு எளிதான வழி ஒன்று உண்டு. அதாவது மூடியும் அடிப்பலகையும் இல்லாத காலித் தேன்கூடு ஒன்றைத் தயா ரித்துத் தேனீக்களை ஓட்டவேண்டிய சட்டங்களை அதில் பொருத்திவைத்து, அதை முந்திய தேன் கூட்டின் அருகில் வைக்கவேண்டும். அப்படி வைக்கும்போது தாய்த் தேன் கூட்டின் அடியில் தேனீக்கள் வந்து நுழைவதற்காக உள்ள வாசல் இருக்குமிடத்திற்கு நேராக, நாம் இரண்டாவதாகத் தயார்செய்த கூட்டின் மேல்பாகம் பொருந்தி இருக்கவேண்டும். இப்போது முதல் கூட்டினடியில் சிறிது புகைபோட்டால் தேனீக்களெல்லாம் பெரும்பாலும் இதிலிருந்து இரண்டாவது கூட்டுக்குச் சென்றுவிடும். பிறகு முதற் கூட்டிலுள்ள தேன டைச் சட்டங்களை எடுத்து, அவற்றில் மிகுந்துள்ள ஈக்களை ஓர் இறகினுல் இலேசாகக் கீழே தள்ளிவிடலாம்.

தேனீக்களைக் கையாளுவதில் கவனிக்கவேண்டும் விஷயங்கள்: தேனீக்களைக் கையாளும்போது அவை கோபங்கொண்டு கொட்டிவிடும் என்று சாதாரணமாக யாவரும் கூறுவார்கள். ஆனுல் தேனீக்கள் அவ்வாறு உடனே கோபம் கொள்வதில்லை. ஆனுல் அவை முகத்திலும் கையிலும் மற்றும் உடம்பில் பல இடங்களிலும் வந்து உட்காருவதுண்டு. அப்போது பயந்து அவற்றை உதறக் கூடாது. அச்சமயங்களில் பேசாமல் இருந்து விடவேண்டும்; அல்லது மெதுவாகக் கையால் துடைக்க வேண்டும். நமது உடலுக்கும் நாம் அணிந்திருக்கும் உடைக் கும் இடையில் தேனீ நுழையும்படி விடக்கூடாது. தொடக் கத்தில் முகத்திற்கு முகமூடி உபயோகித்தல் நலம். பிறகு

பழகப் பழக அவை இல்லாமலே எல்லா வேலைகளையும் செய்யலாம்.

தேனீ கொட்டிவிட்டால் கொட்டுப்பட்ட இடத்தில் நகத்தால் சுரண்டி அதில் பதிந்துள்ள முள், கொடுக்கு இவற்றை எடுத்துவிட்டு, ஏதாவது ஒரு பச்சிலையைக் கொட்டின இடத்தில் தேய்த்துவிடவேண்டும். இல்லாவிட்டால் கொட்டப்பட்டதைத் தேனீக்கள் வாசனையால் அறிந்துகொண்டு, பின்னும் கோபமடைந்து கொட்டத் தொடங்கும். தேனீ கொட்டினால் வீக்கமும் வலியும் ஏற்படும். வலி சில மணி நேரத்திற்குள் அடங்கி விடுமாயினும், வீக்கம் மட்டும் ஒரு நாள் முழுதும் குறையாது. ஆனால் தேனீக்களைக் கையாளுபவர்களுக்குச் சில நாளைக்கெல்லாம் இந்தக் கொட்டினால் ஏற்படும் துன்பம் பெரும்பாலும் குறைந்து போகிறது. ஏனெனில், அவர்கள் உடலில் இந்த விஷத்திற்குரிய முறிவு அந்தக் கொட்டுதலினாலேயே ஏற்பட்டுவிடுகிறது.

1. கேள்விகள்

1. தேனுக்கு உரிய ஈ எது? அது எங்கே வசிக்கும்?
2. தேனீயைப் பிடித்துக் கூட்டில் அடைப்பது எப்படி?
3. அக்கூடு எப்படி இருக்கும்?
4. இராணி ஈ, ஆண் ஈக்கள், வேலைக்கார ஈக்கள்—இவற்றின் இயல்பென்ன?
5. தேனீக்களைப் பாதுகாப்பது எப்படி?
6. தேனீக்களுக்கு விரோதி யாது? அதன் செயல் யாது?
7. தேனடைச் சட்டங்கள் எவை? அவற்றைக் கையாளுவது எப்படி?
8. தேனைச் சேகரித்தல் எப்படி?
9. தேனீக்களைக் கையாளுவதில் கவனிக்க வேண்டியவை யாவை?
10. தேன் சேர்க்கும் தொழிலைப்பற்றி உன் கருத்தென்ன?

3. இலக்கணம்

செய்யுள் எழுதும் முறை

செய்யுளைப் படிக்கும்பொழுது அதன் வரிகள் எத்தனை என்பதையும் ஒவ்வொரு வரியிலும் உள்ள சீர்கள் எத்தனை என்பதையும் கவனிக்க வேண்டும்; அம்முறைப்படியே எழுதிப் பழக வேண்டும். பரீக்ஷையில் பாட்டைப் பாராமல் எழுதச் சொல்லும் பொழுது, நல்ல முறையில் எழுதினால் சிறப்புப் (மார்க்) பெற்று மகிழலாம்; பாட்டை மனப்பாடம் செய்யும் பொழுது பொருள் உணர்ந்து படிப்பதே நல்லது. அது மனத்தை விட்டு அகலாது.

(உ-ம்) "பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்;—நேரிழையே!
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேல்
கைசென்று தாங்கும் கடிது."

இப்பாட்டில், முதல் மூன்று வரிகளிலும் முறையே நான்கு சீர்களும், ஈற்றடியில் மூன்று சீர்களும் இருக்கின்றன என்பதை உணர்க; எழுதும்பொழுது ஒரு சீருக்கும் மற்றொரு சீருக்கும் இடையில் புத்தகத்தில் உள்ளவாறே இடம் விட்டு எழுதுதல் வேண்டும்; வரி பிறழாமல் எழுதுதலும் அவசியமானது.

பயிற்சி

1. 'தேனீ வளர்த்தல்'என்பது பற்றி 24 வரிகளில் ஒரு கட்டுரை எழுது.
2. 'தேன் சேர்த்தல்' என்பது பற்றி 24 வரிகளில் ஒரு கட்டுரை வரை.
3. தேனீ, தன்னை மனிதர் பிடித்து வளர்த்தலைப்பற்றிக் கூறுவது போல 24 வரிகளில் எழுது.
4. அதுவே, மனிதர் தேன் சேர்த்தலைப் பற்றிக் கூறுவது போல 24 வரிகளில் எழுது.
5. (1) கந்தன் வந்தான். கந்தன் காலணுக் கொடுத்தான். கந்தன் பேசாது போனான். (2) வரதன் ஓடினான். வரதன் வந்தான். வரதன் 'ஓ' என்று அழுதான்—இவற்றை இரண்டு தனி வாக்கியங்கள் ஆக்கு.
6. நான் இன்று கடைக்குப் போகையில் நேற்று நாம் கண்ட பிச்சைக்காரி என்னை மறித்துக் கொண்டாள்—சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

19. ஆகாய விமானம்

இராமாயணத்தில் இராமபிரான் சீதாபிராட்டியை இலங்கையிலிருந்து மீட்டுக்கொண்டு, அயோத்தி மாநகருக்குத் திரும்புங்கால், அழகியதொரு புஷ்பக விமானத்தில் ஏறிச் சென்றனரெனக் கூறப் பெற்றுள்ளது. கவியரசராகிய கம்ப நாடரும், அவ்விமானத்தை வெகு நன்முக வருணித்திருக்கின்றூர். ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்ருன சீவக சிந்தாமணியில், சீவகனின் தாயான விசயை என்பாள், கருமான் ஒருவனுல் அமைக்கப்பெற்ற ஒரு மயிற்பொறியிலேறிச் சென்றனள் என்பதும், அப்பொறி பூமியிலிருந்து மேலே கிளம்பிச் செல்லவும், சென்றவாறே ஆகாயத்திலிருந்து கீழே இறங்கவும், அதில் முறுக்காணிகள் அமைந்திருந்தன என்பதும் கூறப்பெற்றுள்ளன. இவற்றை நோக்குங்கால், அந்நாளில் உண்மையாகவே, விண்வழிச் செல்லத்தக்க விமானங்களை அமைக்கும் ஆற்றல், நம் முன்னோர்களிடம் இருந்ததெனக் கூற இடமுண்டு. ஆனுல், இன்று நாம் ஆகாயத்தில் பறந்து செல்லும் விமானங்களைப் பார்க்கின்றேம். விசித்திரமான இவ்விமானம் எவ்வாறு கண்டு பிடித்து அமைக்கப் பெற்றது என்பது நாம் அறியவேண்டுவது அன்றே ?

விஞ்ஞான ரசாயன சாஸ்திர ஆராய்ச்சியில் சிறந்த ஆர்வமுடைய மேனுட்டார் பலகாலும் ஆராய்ந்து, அரும்பாடுபட்டு விடாமுயற்சியால் கண்டுபிடித்துள்ள பல கருவிகளுள் ஆகாய விமானமும் ஒன்ருகும்.

பிரான்ஸ் தேசத்தில் வசித்து வந்த **ஸ்டீபன்** என்பவரும், அவரது சகோதரரான **ஜோசப் மாண்டு கோல்பர்** என்பவரும் இவ்விஷயத்தில் ஊக்கத்தோடு முயன்றனர். நீர்வாயுவின் தன்மையைக் கண்டு பிடித்தவரான **கவென்டிஷ்** என்பார், 1766-ஆம் ஆண்டில் வாயுக்களைப் பற்றிய பல புது உண்மை

களை ஆராய்ந்து, அரிய நூலொன்றை வெளியிட்டார். அதன் பிரதியொன்று இவ்விரு சகோதரர்களுக்கும் கிடைத்தது. அதை அவர்கள் நன்ருக வாசித்தனர். அவ்வமயம், அவ் வீட்டின் சமையல் அறையிலிருந்து புகை சுழன்றெழுந்து புகைப்போக்கியின் வழியாக மேனேக்கிச் சென்றுகொண்டிருந் தது. அதைப் பார்த்ததும், 'காற்றைவிடப் புகை இலேசா னது; அதனுல்தான் இது மேலே கிளம்பிச் செல்லுகின்றது. ஆனுல் இந்தப் புகைக்குத் தன்னேடு ஏதேனும் வேறெரு பொருளையும் கொண்டு போகக்கூடிய சக்தி உண்டா என்பதை ஆராயவேண்டும்' என்ற எண்ணம் அவர்கள் மனத்தில் உதித்தது.

மேற்கூறிய உண்மையை ஆராயப் புகுந்த அவர்கள், காகி தத்தால் பெரியதொரு கூண்டைச் செய்து, அதனுள் புகையை நிரப்பிப் பறக்கவிட்டுப் பார்த்தார்கள். அது வெகுதூரம் உய ரப் பறந்து சென்றது. இப்படி அவர்கள் பன்முறை செய்து, புதிது புதிதாகச் சிற்சில விஷயங்களை அறிந்தனர். கடைசி யாக, அவர்கள் திருத்தமான கூண்டொன்றைச் செய்து, 1873-ஆம் ஆண்டில் பறக்கவிட்டனர். கூண்டில் அடைக்கப்பட்டுள்ள புகை குறைந்துபோகும்போது, அக்கூண்டு கீழே விழுந்து விடு வதைக் கண்டு, அவர்கள் கூண்டின் கீழே அனல் தொட்டி ஒன்றையும் கட்டிப் பறக்கவிட்டனர். தீயானது அணைந்ததும், அதுவும் கீழே இறங்கிவிட்டது. புகைக்குத் தரையின் இழுக் கும் வன்மையை எதிர்க்க வல்ல சக்தி உண்டென்பது முதன் முதலாகப் புகைக்கூண்டைப் பறக்கவிட்ட அவ்விரு சகோதரர் களாலும் கண்டுபிடிக்கப்பட்டது. அக்கொள்கை, நீர்வாயுவை அடைத்துச் செய்யப்பெற்ற கூண்டிற்கும் ஒத்து வந்தது.

அவர்களுக்குப் பின், **பிலடர் டி ரோஸியர்ஸ்** என்பவரும், **மார்க்விஸ் டி ஆர்லண்ட்ஸ்** என்பவரும் ஒரு புதிய கூண்டை நிர்மாணம் செய்தார்கள். இவர்களே, முதன்முதலில் தம்மால்

அமைக்கப்பட்ட கூண்டில் தாமும் ஏறிச் சென்றவர்கள். இவர்கள் கூண்டின் அடிப்பாகத்தில் நெருப்புத் தொட்டியை அமைத்து, அதற்குக் கீழே தாம் இருக்கும் தொட்டியைத் தொங்கவிட்டுக்கொண்டு, கூண்டு ஒருகால் தீப்பற்றிக் கொள்ளுமானால் அதை அணைக்க ஈரத் துணியையும் உடன் கொண்டு, அதில் ஏறிச் சென்றார்கள். இதற்குக் காரணம், அன்னோர் தாம் அனல் வாயுவின் உதவியினால் உயரக் கிளம்பிச் செல்வதாகவும், பூமிதனது சக்தியால் தங்களைக் கீழே இழுக்காதிருக்கத் தீ அவசியமென்றும் கருதியதே யாகும். இவர்கள் நீர்வாயுவின் உதவியால் விண் வழிச் செல்லாமல் அனல் வாயுவின் உதவியினாலேயே சென்றனர். இங்ஙனம், இவர்கள் ஏறிச் சென்ற கூண்டு மூவாயிரமடி உயரத்தில் பறந்து, பாரிஸ் நகரைக் கடந்து சென்றது. சீன் நதிக்கு மேலே சென்றபோது, அக்கூண்டு தீப்பிடித்துக்கொண்டு மெதுவாகக் கீழே இறங்கிற்று. நல்ல வேளையாக, அக்கூண்டு அந்நதியில் விழாமல் தரையில் இறங்க, அவ்விருவரும் எவ்வித ஊறும் இன்றி உயிர் தப்பினர்.

அதன் பிறகு 1785-ஆம் ஆண்டு ஓர் அமெரிக்கரும் ஒரு பிரெஞ்சுக்காரரும் நீர்வாயுக் கூண்டு ஒன்றை அமைத்து, அதில் ஏறிக்கொண்டு டோவரிலிருந்து கலே பட்டணத்திற்குச் சென்றனர்.

இவ்வாறு பற்பலர் முயன்று தாம் கண்டு பிடித்த உண்மைகளைக் கண்ணுங் கருத்துமாய்ச் சோதித்தும், சில சமயங்களில் தவறியும் வந்ததால், ஆகாயக் கூண்டின் அமைப்பில் பல திருத்தங்கள் ஏற்பட்டன. 'கியாஸினால்' ஓடக்கூடிய இயந்திரங்கள் சில முதலில் கண்டுபிடிக்கப்பட்டன. அதன்பின், 'பெட்ரோல்' என்னும் எண்ணெயின் சக்தியால் ஓட்டப்படும் இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பெட்ரோலின் சக்தியால் ஓர் ஆகாயவிமானத்தின் சுக்கானைத்

திருப்ப முடிந்தது. இப்படி ஆராய்ச்சி பெருகவே, ஆகாயத்திற் செல்லும் கூண்டுகளின் உருவத்தையே மாற்ற வேண்டு மென்று சிலர் கருதினர். **பல்டன்** என்பவர் கடலின் உள்ளே செல்லக்கூடிய கப்பலின் வடிவத்தை மீன் வடிவமாக மாற்றி ஞர். அதுபோலவே, ஆகாய விமானத்தின் வடிவமும் மாற்றப் பட்டது. பாரிஸ் நகரத்திலிருந்த பிரசில் தேசத்தவரான **எம். ஸான்டாஸ்-டுமான்ட்** என்பவர், மோட்டார் இயந்திரங் களோடு கூடிய ஒரு சிறு ஆகாய விமானத்தை அமைத்தார். அதில் அவர் ஏறிப் பறந்து சென்று வெற்றி அடைந்தார்.



ஆகாய விமானம்

இதற்குமேல் செய்யப்பட்ட முயற்சியைப்பற்றி நாம் கவனிக்கவேண்டுவது மிக்க அவசியம். சிலர், சிறுவர்களின் காற்றூடிப் பட்டத்தைப் பார்த்து, அதன் தன்மையைப்பற்றி ஆராயலாயினர். **கர்னல் காடி** என்பார் மனிதனைத் தூக்கிச் செல்லத்தக்க ஒருவிதப் பட்டத்தை அமைத்து, அதில் ஏறிக் கொண்டு இங்கிலீஷ் கால்வாய் மீது பறந்து சென்றூர். மற்றுஞ்

சிலா பட்டம், பறவை முதலியன பறக்கும் தத்துவத்தைக் கொண்டு, **சறுக்கு இயந்திரங்கள் (Gliders)** அமைத்தனர். அவை தாம் இக்காலத்தில் நாம் காணும் ஆகாய விமானத்தில் சிறகு களுக்கு ஆதி காரணமென்று கூறலாம்.

இதற்குச் சிறிது காலத்திற்குப் பிறகு **சானுட்** என்னும் அமெரிக்கர், ஒன்றன்மேல் ஒன்ருய் இரு தட்டுக்கள் அமைந்த ஒரு சறுக்கு இயந்திரத்தைச் செய்து முடித்தார். வேறு பலர், வெவ்வேறு விதமான சறுக்கு இயந்திரங்களை அமைத்து வந்தனர். மேனுட்டிலிருந்த இயந்திர சாஸ்திர விற் பன்னர்கள் எல்லோரும் இவ்விஷயத்தில் தமது கவனத்தை முழுவதும் செலுத்தி ஆராய்ந்து வரலாயினர். ஆனல், அதில் நிறைந்த வெற்றியை அடைந்தவர்கள் **வில்பர் ரைட், ஆர் வில்லி ரைட்** என்னும் இரு சகோதரரே ஆவர்.

இவர்கள் ஆகாய விமான சம்பந்தமாக, அதுவரை வெளி வந்த நூல்கள் அனைத்தையும் விடாமல் கவனமாய் முதலில் படித்தார்கள்; பிறகு, அவற்றில் கூறப்பெற்ற உண்மைகளைப் பதட்டமின்றி அமைதியாகப் பரிசோதித்துப் பார்த்தார்கள்; முடிவில் 1903ஆ டிசம்பர்மீ 17-ஆம் தேதி, சறுக்கு இயந்திர முறையில் செய்யப்பட்ட ஒரு விமானத்தில் ஏறிப் பறந்து சென்றனர். அதில் பின்னும் சில திருத்தங்கள் செய்ய வேண்டு மென்று இவர்கள் கண்டு, அவற்றையும் செய்து, மனிதர் எவ்விதப் பயமுமின்றி அவ்விமானத்தில் ஏறிப் பறந்து செல்ல லாமென்ற முடிவுக்கு வந்தனர். அப்பால் இவர்கள் பல நாடுகளுக்கும் தாம் செய்த ஆகாய விமானத்தை எடுத்துச் சென்று பறந்து காட்டினர். அதுமுதல் ஆகாய விமானம் சரிவர அமைந்து சீர்பெறலாயிற்று.

ஆகாய விமானத்தை உற்று நோக்கும்போது அது பெரிய தொரு பறவையைப் போலவே தோன்றும். அது காற்றில் கிளம்பி உயரப் பறக்கவேண்டி இருப்பதால், இலேசான

பொருள்களைக் கொண்டு அதைச் செய்யவேண்டும். ஒரு காற்றாடியைக் கவனித்துப் பாருங்கள். அது மிகவும் இலேசான குச்சிகளாலும், மெல்லிய காகிதத்தினாலும் செய்யப்படுகிறது. அதுபோலவே ஆகாய விமானமும் மெல்லிய தகடுகளினாலும் மரத்தினாலும் அழுத்தமான துணியினாலும் செய்யப்படுகிறது. அது ஏறக்குறைய இருபத்தைந்தடி நீளமுடையது. அதற்கு இருபுறமும் நீண்ட சிறகுகள் உண்டு. அவை விமானத்தின் குறுக்கே அமைக்கப்பட்டிருக்கும்; ஒவ்வொன்றும் சுமார் பதினான்கடி நீளமும் ஏழடி அகலமும் இருக்கும்.

ஆகாய விமானங்களில் சில, ஒரே சிறகு உடையனவாயிருக்கும். அவற்றிற்கு ஒற்றைச் சிறகு விமானங்கள் என்று பெயர். மேலும் கீழுமாய் இரண்டு சிறகுகள் கொண்டது இரட்டைச் சிறகு விமானம் என்று பெயர்பெறும். ஆகாய விமானத்தின் வாலும் சிறகுகளும் நீங்கலாக, மற்றைய பாகத்திற்கு உடல் என்று பெயர். உடல் நீண்ட சதுரமான ஒரு குழாய் போன்றிருக்கும். ஆயினும், அதன் நடுப்பாகம் பருத்தும், முன்புறமும் பின்புறமும் வரவரச் சிறுத்தும் இருக்கும். உடலின் முன்புறத்தில் கைகள் போன்ற இரண்டு உறுப்புக்கள் உண்டு. அவைகளுக்குச் **சுழற் கைகள்** என்று பெயர். அந்தக் கைகளுக்குப் பின்பாகத்தில் விமானத்தை ஓட்டுவதற்கு வேண்டிய இயந்திரம் அமைந்திருக்கும். உடலின் நடுவில் பிரயாணிகள் உட்காருவதற்குரிய இடம் அமைக்கப்பட்டிருக்கும். உடலின் பின்புறத்தில்தான் விமானத்தின் வால் அமைந்திருக்கிறது. விமானம் ஆகாயத்தில் பறப்பதற்குமுன் பூமியில் சிறிது தூரம் செல்லும். அதற்காகவே, இரண்டு சிறு சக்கரங்கள் அதன் அடியில் அமைக்கப்பட்டுள்ளன. விமானி, விமானத்தைச் செலுத்தத் தொடங்கும்போது, அதிலிருக்கும் ஓர் இயந்திரத்தை முதலில் இயக்குவான். அதனால் சுழற் கைகள் மிக்க வேகமாய்ச் சுழலும். அவ்வாறு சுழலும்போது அதன் வேகத்

தினுல் விமானம் கிளம்பும். ஆயினும், விமானம் கிளம்பும் போது சிறிது தூரம் பூமியில் சென்று, பிறகுதான் மேலே படிப்படியாகக் கிளம்பி ஆகாயத்திற் செல்லும்.

ஆகாய விமானத்தை மேலே உயர்த்தவும் தாழ்த்தவும் திருப்பவும் சில கருவிகள் உண்டு. அவற்றை விமானி எளிதில் கையாளும் வண்ணம், அவை சம்பந்தமான பிடிகளெல்லாம், விமானி உட்காருமிடத்திலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் விமானி, தான் உட்கார்ந்தபடியே விமானத்தைத் தன் இஷ்டப்படி நடத்த வல்லவனுக இருக்கிருன். விமானம் மேலே கிளம்பி, இறகுகளின் சகாயத்தால் விண்ணில் நிலை பெறுகிறது. அப்பால், அவன் இயந்திரத்தை முடுக்கி விடுகிருன். விமானம் ஆகாயத்தில் வேகமாய்ச் செல்லுகிறது.

ஆகாய விமானம், மேலே எவ்வளவு உயரம் வேண்டுமென்ருலும் செல்லும்; ஆனுல் விமானிகள் அதை 15,000 அடி உயரத்துக்குமேல் செல்ல விடுவதில்லை. ஆகாய விமானம் மணிக்கு ஏறக்குறைய நூறு மைல் வீதம் செல்லும். சில அதற்கு மேலும் செல்லும்.

ஆகாய விமானங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று தரையில் இறங்கவும், தரையிலிருந்து மேலே கிளம்பவும் தக்கது; இன்னென்று சமுத்திரத்தில் இறங்கவும், அதிலிருந்து மேலே கிளம்பவும் கூடியது. இதற்குக் **கடல் விமானம்** என்று பெயர். சில விமானங்கள் மிகச் சிறியவை. அவற்றில் இருவர் அல்லது மூவரே உட்காரலாம். இப்பொழுது இங்கிலாந்திலிருந்து நமது தேசத்துக்குப் பிரயாணிகள் ஆகாய விமானங்களின் மூலமாக வருகின்றனர். தபால்களும், அவைகளின் மூலமாய் ஒரு வாரத்தில் வந்து சேருகின்றன. முன்னே மூன்று வாரங்களில் கப்பல் மூலமாய்ச் செய்த பிரயாணத்தை, இப்பொழுது ஆகாய விமான மூலமாய் ஒரு வாரத்தில் செய்து முடிக்கலாம். இன்னும் சில ஆண்டுகளுக்குள் ஆகாய விமானம், மோட்டார்

வண்டிகளைப் போல நமது தேசமெங்கும் பரவிவிடும் என்பதில் ஐயமில்லை. இப்பொழுது நமது சென்னை மாகாணத்திலும் சில ஆகாய விமானங்கள் இருக்கின்றன.

1. அரும்பத விளக்கம்

பொறி - இயந்திரம்; ஆற்றல் - வல்லமை, சக்தி; ஆர்வம் - ஆசை; நிருமிக்கும் - உண்டாக்கும்; ரஸாயனம்-ரஸங்களின் தன்மையைத் தெரிவிக்கும் கலை (Chemistry); விஞ்ஞானம் - பிரகிருதி சாஸ்திரம் (Science); திகந்தமான - செங்குத்தாக இல்லாமல் ஒரு திசையை நோக்கிச் செல்லுகிற; விமானம் - வாகனம்.

2. கேள்விகள்

1. ஹென்றி கவென்டிஷ், கண்டறிந்த விஷயம் யாது?
2. வாயுவைப்பற்றிய உண்மைகளை ஆராய்ச்சி செய்து வெளியிட்டவர் யார்?
3. மோட்டார் இயந்திரத்தோடு கூடிய ஆகாய விமானத்தை முதலில் கண்டு பிடித்தது யார்? சறுக்கு இயந்திரம் யாரால் கண்டு பிடிக்கப்பட்டது?
4. ஆகாய விமானம் எவ்வாறு மேலே கிளம்புகிறது? எவ்வாறு இறங்குகிறது? அது செல்லக்கூடிய உயரமும் வேகமும் எவ்வளவு?
5. ஆகாய விமானத்தில் எத்தனை வகை உண்டு? என்னென்ன?

பயிற்சி

1. தக்க இடங்களில் தக்க நிறுத்துக் குறிகளை இடு :—
   (1) நான் முருகா நீ என் வீட்டிற்கு வருவதே இல்லை என்றேன்
   (2) அவன் ஐயோ என்னை அடிக்கிறானே என்று அலறினான்
   (3) வள்ளி அப்பா இந்தக் கிழவன் யாவன் என்று கேட்டாள்

2, சிறு வாக்கியங்கள் ஆக்கு :—

அரசன் காட்டிற்குப் போனபோது, இரண்டு யானைகள் சண்டையிட்டதையும், மான்கள் அஞ்சி ஓடியதையும், எருதுகள் பயந்து சிதறி ஓடியதையும் கண்டான்.

3. ஒரே வாக்கியம் ஆக்கு :—
நான் காலையில் எழுந்தேன். நான் கடவுளைத் தொழுதேன். நான் என் பாடங்களைப் படித்தேன். நான் பிறகு பாடசாலைக்குச் சென்றேன்.

4. அநுவயப்படுத்து :—

(1) பாடினவன் போனான் எழுந்து. (2) வந்தவன் சிரித்தான் விழுந்து விழுந்து (3) தேடிப் பெற்றேன் தெவிட்டாத தெள்ளமுதம். (4) கண்டேன் அவனை நான்.

5. போயினான், கற்றார், வந்தாள், உண்டன, செய்தது—பகுதி, விகுதி, இடைநிலைகளைக் கூறு.

6. கவியரசர், விடாமுயற்சி, திருத்தமான, கண்ணும் கருத்துமாய், விரைவாக, நிர்மாணம், மூலமாய்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

20. வாசுகி அம்மையார்

[நாடகம்]

முதற்களம்

இடம்: திருவள்ளுவர் வீடு.

காலம்: இரவு.

பாத்திரங்கள்: வள்ளுவர், வாசுகி.

[வள்ளுவர் பகல் முழுவதும் கடைத்தெருவில் இருந்து, இரவு வீட்டிற்கு வருகிறார். வாசுகி வீட்டு வாயிற்படியில் நின்று அன்போடும் பணிவோடும் வரவேற்கிறாள்.]

வள்ளுவர்: பெண்ணே! 'எல்லாம் நன்மைக்கே' என்ற உண்மையை இன்று நாம் நன்றாய் அறியவேண்டும்.

வாசுகி: தலைவரே, தங்கள் வாய் மொழியை வேத வாக்காக உலகம் கொண்டாடும்போது, நான் வேறு வகையாய் நினைப்பேனா?

வள்ளுவர்: விளக்கு ஏன் மங்கலாய் எரிகிறது? நன்றாய்த் தூண்டி விடு. சமையல் ஆகிவிட்டதா? இனித்தான் ஆக வேண்டுமா?

வாசுகி: விளக்குக்கு எண்ணெய் வேண்டும். தாங்கள் வாங்கி வரும் அரிசியை இட்டு ஆக்க உலைநீர் கொதிக்கிறது.

வள்ளுவர்: இன்று நான் ஒன்றும் வாங்கி வரவில்லை. நான் நெய்து கொண்டுபோன துணியை வைத்துக்கொண்டு என் பொறுமையை ஒருவர் சோதித்தார்.

வாசுகி: பத்தரைமாற்றுத் தங்கத்தைச் சோதித்துப் பார்க்க வேண்டுமா? தங்கள் பெருமையை அவர் எப்படி அறிவார்!

வள்ளுவர்: அவர் துணியை இரண்டாய்க் கிழித்துப் பாதித் துணிக்கு விலை கேட்டார். பாதி விலை சொன்னேன்.

மேலும் மேலும் கிழித்துக்கொண்டே போனர். நானும் விலையை அதற்கு ஏற்றபடி குறைத்துக்கொண்டே வந்தேன். கடைசியில் ஒருவருக்கும் உதவாத துண்டுகளாகக் கிழித்ததால், 'விலை ஒன்றும் வேண்டாம்' என்று அவரிடமே கொடுத்துவிட்டு வந்தேன்.

வாசுகி: தாங்கள் தருமம் தவறி நடப்பீர்களா ? இன்று அரிசி பருப்பு இல்லாமல் வந்தது இதனுல்தானே? ஒருவர் தங்கள் பெருமையை உணர்ந்தாரே; அதுவே பெரிய ஊதியம்.

வள்ளுவர்: விளக்கு அணைந்துவிடும்போல இருக்கிறது. சிறிது தண்ணீர் விடு. தண்ணீரே எண்ணெயாக எரியட்டும். ஏழைகள் என்ன செய்யலாம்?

வாசுகி: அப்படியே செய்கிறேன்.

[எழுந்து போய் விளக்கில் தண்ணீர் விடுகிருள். விளக்கு நன்ருய்ச் சுடர் விட்டு எரிகிறது.]

இரண்டாம் களம்

இடம்: வீட்டு வாயில்.

காலம்: முற்பகல்.

பாத்திரங்கள்: வள்ளுவர், வாசுகி, வேறு இருவர்.

[வள்ளுவர் இருவரோடு வாயிலில் நின்று கதவைத் தட்டுகிருர்.]

வள்ளுவர் : வாசுகி ! வாசுகி ! கதவைத் திற.

வாசுகி : இதோ வந்துவிட்டேன்.

[ஓடிவந்து கதவைத் திறக்கிருள்; வள்ளுவர் வந்த இருவரோடு வீட்டுக்குள் நுழைகிருர்.]

வள்ளுவர் : நான் அழைக்கும் போது என்ன செய்து கொண்டிருந்தாய் ?

வாசுகி : கிணற்றில் தண்ணீர் இழுத்துக்கொண்டிருந்தேன்; அழைத்தவுடன் வந்தேன்.

வள்ளுவர் : மரக்கால் கிணற்றுக்குள்ளே கிடக்கிறதோ, வெளியில் இழுத்துவைத்து வந்தாயோ ?

வாசுகி : பாதி தூரம் இழுத்தேன்; அழைத்த குரல் கேட்டேன்; அப்படியே விட்டு வந்தேன். என் தெய்வம் என்னை அழைக்கும்போது நான் வேறு என்னசெய்வேன்?

விருந்தினர் : புலவரே, கிணற்றருகே போகலாமா ? கைகால் கழுவி, வாய் கொப்பளித்து வருவோம்.

வள்ளுவர் : அப்படியே போவோம்.

[வாசுகி முன்னே போகிருள். வள்ளுவரும் விருந்தினரும் பின்னே போகிருர்கள். கிணற்றில் எட்டிப் பார்க்கிருர்கள். மரக்கால் நடுவழியில் விட்டபடியே நிற்கிறது.]

விருந்தினர் : என்ன புதுமை இது? கற்பின் பெருமையினுல் அன்ருே இப்படி நிற்கிறது!

[விருந்தினர் கால் கைகளைக் கழுவி வாய் கொப்பளித்து உள்ளே வருகின்றனர்.]

விருந்தினர் : புலவர் பெருமானே, தறியில் தாங்கள் நெய்வதைப் பார்க்கவேண்டும். தறிப்பக்கம் போகலாமா ?

வள்ளுவர் : முதலில் கொஞ்சம் பழையது சாப்பிடுவோம். பின்பு அங்கே போவோம். இங்கே இருக்கும் உணவு நமக்குப் போதுமானது.

[மூவரும் உட்காருகின்றனர். வாசுகி இலைகள் போட்டுப் பழையது பரிமாறி மிளகாய் போடுகிருள்.]

வள்ளுவர் : [சிறிது உண்ட பிறகு] வாசுகி, இங்கே வா.

வாசுகி : தலைவரே, என்ன வேண்டும்? உப்பு, மிளகாய் ஏதாவது வேண்டுமா ?

வள்ளுவர் : இல்லை, இல்லை, சோறு சுடுகிறது. கொஞ்சம் விசிறி எடுத்துவந்து விசிறு.

[வாசுகி உடனே விசிறி கொண்டுவந்து விசிறுகிறுள்]

விருந்தினர் : என்ன புதுமை இது! பழைய சோற்றின்மேல் விசிறினுல் ஆவி கிளம்புகிறதே! இன்னும் என்ன நடக்குமோ, தெரியவில்லையே!

[மூவரும் உண்டு கைகழுவித் தறி இருக்கும் பக்கம் போய் அமருகிறுர்கள். வாசுகி மறைவாய் இருந்து உண்டு உள்ளே போகிறுள்.]

விருந்தினர் : பெருநாவலரே, தாங்கள் தினந்தோறும் நெய்து விற்றுத்தான் வாழ்க்கை நடத்துகிறீர்களோ?

வள்ளுவர்: ஆம், மனிதன் தொழில் செய்யவேண்டும். ஒருதொழிலும் செய்யாமல் பிறர் முயற்சியால் வயிறு வளர்ப்பவன் விலங்கினும் இழிந்தவன்.

விருந்தினர் : தங்கள் புலமைக்குத் தக்க சிறப்புச் செய்பவர் இல்லையா?

வள்ளுவர் : என்ன சிறப்புச் செய்வது? நான் ஒரு தொழிலும் இல்லாமல் வாழும்படி எனக்கு நெல்லும் எள்ளும் துவரையும் அனுப்புவதா? புலமை உலகிற்குப் பயன்பட வேண்டும். புலமை வியாபாரப் பொருள் அன்று. ஒவ்வொரு மனிதனும் தானே பிறர் பொருட்டு உழைக்கும் வழி என்ன என்று தேடி உழைக்க வேண்டும். பிறர் தனக்கு என்ன செய்வார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது.

விருந்தினர் : எல்லாரும் இந்த விதிபற்றி வாழ முடியுமா?

வள்ளுவர் : அறிவுள்ள மனிதன் எவனும் தன் முயற்சியால் வாழ வேண்டுமே ஒழியப் பிறர் கை பார்க்கக் கூடாது.

விருந்தினர் : பிச்சை எடுத்துப் பிழைப்பவர் எவ்வகையைச் சேர்ந்தவர்? உழைப்பு ஒவ்வொருவர்க்கும் வேண்டும்

என்கிறீர்கள். அவர்களுக்கு ஒரு வகை உழைப்பும் இல்லை. பிரமன் ஏன் இப்படி அவர்கள் தலையில் எழுதவேண்டும்?

வள்ளுவர் : பிச்சைப் பிழைப்பை மனிதனுக்கு வாழ்வு என்று பிரமன் எழுதவில்லை. அப்படி அவன் எழுதியிருந்தால், அவனை உலகம் 'தேவன்' என்று வாழ்த்தாது.

விருந்தினர் : குறளில் அவனுக்கு ஒரு சாபம் கொடுத்திருக் கிறீர்களே!

[கையிலிருந்த கதிர் கீழே விழுகிறது. வள்ளுவர் கீழே வெளிச் சத்தில் அது கிடப்பதைக் கண்டும், விருந்தினர் பார்க்க வாசு கியை அழைக்கிறார்.]

வள்ளுவர் : வாசுகி, விளக்குக் கொண்டுவா. கதிர் கீழே விழுந்து விட்டது. தேட வேண்டும்.

வாசுகி : இதோ வந்துவிட்டேன்.

[விளக்கோடு தேடி எடுத்துக் கொடுக்கிறாள்.]

வள்ளுவர் : அன்பர்களே, இல்லறம் சிறந்தது என்று அறிந்து கொண்டீர்களா !

விருந்தினர்: இப்படிக் கற்பரசி வாய்த்தால் இல்லறமே நல்லறம் என்பதில் தடையில்லை.

[போகிறார்கள்.]

பயிற்சி

1. வள்ளுவரைப் பற்றி 20 வரிகளில் ஒரு கட்டுரை எழுது.
2. வாசுகியைப் பற்றி 20 வரிகளில் ஒரு கட்டுரை வரை.
3. வள்ளுவரைப் பற்றி வாசுகி எழுதுவது போல ஒரு கட்டுரை வரை.
4. வாசுகியைப் பற்றி வள்ளுவர் எழுதுவது போல ஒரு கட்டுரை எழுது.
5. வள்ளுவரைப் பற்றி விருந்தினர் சொல்வது போல ஒரு கட்டுரை எழுது.

6. வள்ளுவர், வாசுகி இவர்களைப் பற்றிய உனது கருத்தை ஒரு கட்டுரையாக எழுது.

7. 'கணவனுக்கு ஏற்ற கற்புடை மனைவி'—இத்தலைப்பிட்டு, அதற்கு உதாரணமாக வாசுகி, வள்ளுவர் வாழ்க்கையை விளக்கி ஒரு கட்டுரை வரை.

8. (1) கண்ணன் அண்ணனுடன் வெண்ணெய் திருடினான். —சொல் இலக்கணம் கூறு.

(2) நடந்து வந்த மாமன் படுத்து எழுந்து போகிறான். —சொல் இலக்கணம் கூறு.

(3) திருடினான், போகிறான்—பகுதி, விகுதி, இடைநிலைகளைக் கூறு.

(4) நடந்து, சென்ற, படுத்து—பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சொல்லு.

9. வினைப்பயனிலை, வினைப்பயனிலை, பெயர்ப்பயனிலை—ஒவ்வொன்றுக்கும் இரண்டிரண்டு உதாரணம் கொடு.

10. நடத்தல், நடந்தாள், நடந்தவளை, நடந்து, நடக்கின்ற—இவை என்ன சொற்கள்?

11. நடந்த, நடக்கின்ற, நடக்கும் (பெண்), நடந்து, நடக்க, நடப்பான், நடக்கின், நடந்தான், நடக்கிறான்—இவை எவ்வெக்கால எச்சங்கள்? எவ்வெக்கால வினைமுற்றுகள்?

12. வண்ணான், வாணியன், குயவன், அரசன், சீமான், திருவாளன்—பெண்பால் கூறு.

13. ஆரருள், பனையடி, கண்ணிமை, வேலழகு, சிறுவிரல், வெண்ணீறு, ஈயடி—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறு.

14. வாழை, மரம், முக்கண்ணன், மண், அரை, படி, வீசை, அடி, பாட்டி, நீங்கள், அவன், நான், எருது, எலிகள், மயில் பாடினாள்—இவை என்ன பெயர்கள்?

செய்யுள் பாடம்

I. நீதிச் செய்யுட்கள்

1. நன்னெறி

பெரியோர் குணம்

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமேல் நின்று. (1)

செல்வச் செருக்கின் தீமை

தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர்செருக்குச் சார்தல்—இலையால்
இரைக்கும்வண் டூதுமலர் ஈர்ங்கோதாய்! மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு. (2)

பிறர் துயரம் தீர்த்தல்

தம்மையும் தங்கள் தலைமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மின்
இழியினுஞ் செல்வர் இடர்தீர்ப்பர் அல்கு
கழியினுஞ்செல் லாதோ கடல். (3)

பெரியவர் இரக்கம்

பெரியவர்தம் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க—தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். (4)

தக்கார்க்கு உதவுதல்

தக்கார்க்கே யீவர் தகார்க்களிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர்—எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளிப்
புல்லுக் கிறைப்பரோ போய். (5)

—சிவப்பிரகாசர்

1. அரும்பதவுரை

நல் + நெறி = நன்னெறி. நல்ல வழியைச் சொல்லும் நீதி நூலுக்கு நன்னெறி என்ற பெயர் வந்தது.

1. தீர்வு - தீர்ப்பது, உள்ளார் - நினைக்கமாட்டார், உறா உம் - வருகின்ற, வெங்குறை - கொடிய துன்பம், விழுமியோர் - பெரியோர், மேலோர்; திங்கள் - சந்திரன், கறையிருள் - களங்க மான இருள் உருவம்.

2. தொலையா - அழியாத, தோற்றத்தோம் - பிறப்பு உடையோம் நாம், தலையாயவர் - உயர்ந்தோர், இரைக்கும் - ரீங்காரம் செய்யும், ஈர்ங்கோதாய் - குளிர்ந்த மாலையை அணிந்த பெண்ணே, வரை - மலை, வந்தன்று - வந்தது.

3. தலைமை - முன்னோர் வழிவந்த பெருமை, இழியினும்-இழி வானவராய் இருப்பினும், அல்கு - குறைந்த, கழி - உப்பங்கழி.

4. உள்ளம் - மனம், எரி - நெருப்பு, இழுது - நெய், மண்டு - நிறைந்த, பிணி - நோய், கலுழும் - அழும்.

5. அளிப்பார்இல் - கொடுப்பவர் இல்லை, மிக்கார் - முறை கெட்ட மனிதர், முளிப்புல் - காய்ந்த புல்.

2. கேள்விகள்

1. சந்திரனுக்கு நிகராவார் யார்? எதனால்?
2. மேருமலை வளைந்த கதை எவ்வுண்மையை விளக்கும்?
3. கடல் கழிக்குட் போவதுபோலுள்ள செய்கை எது?
4. 'கண் கலுழும்,'-எதைப் பார்த்து? அதுபோல் உள்ள மற்றொரு செய்கை யாது?
5. 'நெல்லுக்கிறைப்பார் - புல்லுக்கிறையார்' இது போல் உள்ள மற்றொரு செய்கை யாது?

2. இனிது நாற்பது

குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே;
கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே;
மயரிகள் அல்லராய் மாண்புடையார்ச் சேரும்
திருவுந் தீர்வின்றேல் இனிது. (1)

கற்ருர்முற் கல்வி யுரைத்தல் மிகஇனிதே;
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்னினிதே;
எட்டுணை யானும் இரவாது தானீதல்
எத்துணையும் ஆற்ற இனிது. (2)

பிறன்கைப் பொருள்வெளவான் வாழ்தல் இனிதே;
அறம்புரிந் தல்லவை நீக்க லினிதே;
மறந்தேயும் மாணு மயரிகட் சேராத்
திறந்தெரிந்து வாழ்தல் இனிது. (3)

கயவரைக் கையிகந்து வாழ்தல் இனிதே;
உயர்வுள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே;
எளியர் இவரென் றிகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்தல் இனிது. (4)

ஔவித் தழுக்கா றுரையாமை முன்னினிதே;
செவ்வியராய்ச் செற்றுச் சினங்கடிந்து வாழ்வினிதே;
கவ்வித்தாங் கொண்டுதாம் கண்டது காமுற்று
வெளவார் விடுதல் இனிது. (5)

—பூதஞ்சேந்தனுர்

1. அரும்பதவுரை

இனிது நாற்பது - இனிது என்ற சொல்லால் முடியும் நாற்பது செய்யுள்களைக் கொண்ட ஒரு நூல்.

1. குழவி - குழந்தை, பிணி - நோய், கழறும் - பேசும், அவை - சபை, மயரி - மயக்கம், மறதி உள்ளவர்; திரு - பாக்கியம்.

2. மிக்கார் - பெரியோர், மாண - சிறப்ப, எட்டுணை - (எள் + துணை) எள் அளவு, இரவாது - பிச்சை எடாமல், ஈதல் - கொடுத்தல்.

3. வெளவான் - ஆசைப்படாதவனாக, அல்லவை - அறமல்லாத மற்ற செயல்களை.

4. கயவர் - அறிவிலார், கையிகந்து - பிரிந்து, உன்னி - நினைத்து, ஒளி - புகழ்.

5. ஒளவித்து - பொருமைப்பட்டு, அழுக்காறு - பொருமையால் வரும் சொல், செவ்வியர்-நியாய நெறியில் நிற்போர், கவ்வி - பற்றி,

2. கேள்விகள்

1. எவன் கல்வி இனிதாம் ?
2. கல்வியை எங்கு உரைத்தல் இனிது ?
3. எப்படி ஈதல் இனிது?
4. எங்ஙனம் வாழ்தல் இனிது ?
5. எவரைப் பிரிதல் இனிது ?
6. அழுக்காறு இன்மை இனிதாவது ஏன் ?

---

3. இன்னா நாற்பது

ஆற்றல் இலாதான் பிடித்த படையின்னா ;
நாற்றம் இலாத மலரின் அழகின்னா;
தோற்றம் இலாதான் துணிபின்னா ; ஆங்கின்னா
மாற்றம் அறியான் உரை. (1)

பொருளுணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னா ;
இருள்கூர் நெறியினில் தாங்தனிப்போக் கின்னா ;
அருளில்லார் தங்கட் செலவின்னா ; இன்னா
பொருளில்லார் வண்மை புரிவு. (2)

மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்தல் இன்னா ;
துணிவிலார் சொல்லுந் தறுகண்மை இன்னா ;
பணியாத மன்னர்ப் பணிவின்னா ; இன்னா
பிணியன்னார் வாழும் மனை. (3)

உண்ணுது வைக்கும் பெரும்பொருள்வைப் பின்னு ;
நண்ணும் பகைவர் புணர்ச்சி நனியின்னு ;
கண்ணில் ஒருவன் வனப்பின்னு ; ஆங்கின்னு
எண்ணிலான் செய்யுங் கணக்கு. (4)

குலத்துப் பிறந்தவன் கல்லாமை இன்னு ;
நிலத்திட்ட நல்வித்து நாருமை இன்னு ;
நலத்தகையார் நாணுடைமை இன்னு;ஆங் கின்னு
கலத்தல் குலமில் வழி. (5)

—கபிலர்

1. அரும்பதவுரை

இன்னு நாற்பது - இன்னு என்ற சொல்லால் முடியும் நாற்பது செய்யுட்களே உடைய ஒரு நூல்.

1. ஆற்றல்-வலிமை, படை-ஆயுதம், நாற்றம் - மணம், தோற்றம்-ஆண்மை விளங்கும் பெருமைத் தோற்றம், மாற்றம்-பேசும் முறை.

2. இல்வழி-இல்லாத இடம், கூர்-மிகுந்த, அருளில்லார் தங்கள்-அருள் இல்லாதவரிடம், வண்மை-தானதருமம், புரிவு-செய்தல்,

3. குஞ்சரம்-யானே, வேந்து-அரசன், தறுகண்மை-அஞ்சாமை யைக் காட்டும் பேச்சு, பிணியன்னுர்-நோய் போன்ற கற்பில்லாத பெண்டிர்.

4. வைப்பு-சேர்த்து வைக்கப்பட்ட செல்வம், புணர்ச்சி-சேர்க்கை, வனப்பு-அழகு, எண்ணிலான்-கணக்கறியாதவன்,

5. நாருமை-நாற்று ஆக வளராமை, நலத்தகையார்-நல்லழகுடைய பெண்கள், கலத்தல்-கொண்டு கொடுத்துச் சம்பந்தம் செய்தல், இன்னு - துன்பம் தரும்.

2. கேள்விகள்

1. எவன் பிடித்த படை இன்னுது ?
2. எம்மலரின் அழகு இன்னுது ?

3. எவன் துணிபு இன்னுது ?
4. எவன் பேசப் புறப்படுவது இன்னுது ?
5. எங்குப் பாட்டுரைத்தல் இன்னுது ?
6. எவர் வண்மை புரிதல் இன்னுது ?
7. வேந்து எத்தகைய குஞ்சரம் ஊர்தல் வேண்டும் ?
8. எவ்வகை வைப்பு இன்னுது ?
9. எவன் கல்லாமை இன்னுது ?
10. குலமில்வழிக் கலத்தல் இன்னுது என்பது ஏன் ?

---

4. நான்மணிக்கடிகை

கோல்நோக்கி வாழும் குடியெல்லாம் ; தாய்தரும்
பால்நோக்கி வாழும் குழவிகள் ; வானத்
துளிநோக்கி வாழும் உலகம் ; உலகின்
விளிநோக்கி இன்புறூஉம் கூற்று. (1)

திருவிற் றிறலுடைய தில்லை ; ஒருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை;—எற்றுள்ளும்
இன்மையின் இன்னுத தில்லை ; இலமென்னும்
வன்மையின் வன்பாட் டதில். (2)

இரும்பி னிரும்பிடை போழ்ப ; பெருஞ்சிறப்பின்
நீருண்டார் நீரால்வாய் பூசுப ;—தேரின்
அரிய அரியவற்றுற் செய்ப ; பெரிய
பெரியரான் எய்தப் படும். (3)

பிறக்குங்காற் பேரெனவும் பேரா ; இறக்குங்கால்
நில்லெனவும் நில்லா உயிரனைத்தும்—நல்லாள்
உடம்படிற் றுனே பெருகும் ; கெடும்பொழுது
கண்டனவும் காணுக் கெடும். (4)

போரின்றி வாடும் பொருநர்சீர் ; கீழ்வீழ்ந்த
வேரின்றி வாடும் மரமெல்லாம் ;—நீர்பாய்
மடையின்றி நீணெய்தல் வாடும் ; படையின்றி
மன்னர்சீர் வாடி விடும். (5)

—விளம்பி நாகனுர்

1. அரும்பதவுரை

நான்மணிக்கடிகை - நான்கு மணிகள் அழுத்திய ஆபரணம் போல ஒவ்வொன்றும் நான்கு நீதிகளேச் சொல்லும் செய்யுட்களால் ஆகிய ஒரு நீதி நூல்.

1. கோல் - செங்கோல், வானத்துளி - மழை, விளி - சாவு, கூற்று - யமன்.

2. திரு-செல்வம், திறல் - சக்தி, எற்றுள்ளும் - எதுவாயிருப்பினும், இன்மை - வறுமை, இலம் - (நாம் வறுமை உடையோம்) எம்மிடம் ஒன்றும் இல்லே. வன்பாட்டது - கடுமை உள்ளது.

3. போழ்ப - பிளப்பர், பூசுப - கழுவுவர், அரிய - அரிய செயல்கள், எய்த - அடைய.

4. பேர் - திரும்பிப் போ, நில் - இங்கே இரு, நல்லாள் - திருமகள், உடம்படில் - அருள் இருப்பின்.

5. பொருநர் - போர் வீரர், படை - சேனே.

2. கேள்விகள்

1. குடிகள் எதனுல் வாழ்வர் ?
2. உலகம் எதை நோக்கி வாழும் ?
3. எவற்றிலும் இன்னுதது எது ?
4. அரியவைகளே அரியவற்ருற் செய்தற்கு இரண்டு சான்றுகள் கூறு.
5. உயிர்களின் இயற்கை யாது ?
6. பொருநர் சீர் வாடுவது எப்பொழுது ?
7. மன்னர் சீர் வாடுவது எப்பொழுது ?

5. திரிகடுகம்

அரசனுக்கு உறுதுணை மூன்று

கோலஞ்சி வாழும் குடியும், குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும்,—வேலின்
கடைமணிபோற் றிண்ணியான் காப்புமிம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல். (1)

உண்மையாளர் வழக்கு

குறளையுள் நட்பறை தோன்றும், உறவினிய
சால்பினிற் றோன்றும் குடிமையும்,—பால்போலும்
தூய்மையிற் றோன்றும் பிரமாணம் இம்மூன்றும்
வாய்மை யுடையார் வழக்கு. (2)

செல்வம் அழிக்கும் படை

தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்,—முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை. (3)

நரகத்து விழுபவர்

ஆற்றுனை ஆற்றென் றலைப்பானும், அன்பின்றி
ஏற்றார்க் கியைவ கரப்பானும்,—கூற்றம்
வரவுண்மை சிந்தியா தானுமிம் மூவர்
நிரயத்துச் சென்றுவாழ் வார். (4)

மெய்ப்பொருள் அறிபவர்

வைததனை இன்சொல்லாக் கொள்வானும், நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்,—ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானு மிம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார். (5)

—நல்லாதனார்

1. அரும்பதவுரை

திரிகடுகம்—மூன்று காரமான பொருள்கள் (சுக்கு, மிளகு, திப்பிலி) சேர்ந்த மருந்து உடம்புக்கு நன்மை செய்வதுபோல, மூன்று நீதிகளால் ஆகிய செய்யுட்களை உடையதாய் உளத்துக்கு நன்மை செய்யும் மருந்துபோல உள்ள ஒரு நூல்.

1. கோல் - அரசர் ஆணை, தழீஇ - தழுவி, காத்து; ஆலம் வீழ் - ஆலம் விழுது, திண்ணியான் - உறுதியுள்ள சேனைத் தலைவன், காப்பு - காவல், பற்றுவிடல் - பற்றுவிடலாகாது.

2. குறளை - கோள் சொல்லுதல், குடிமை - நற்குடிப் பிறப்பு, பிரமாணம் - நம்பத்தக்க விஷயம்.

3. கொன்னே - வீணாக, வெகுளி - கோபம், வெஃகும் - ஆசைகொள்ளும், உடைக்கும் - அழிக்கும்.

4. ஆற்றானை - சக்தி இல்லாதவனை, ஆற்று - (வேலை) செய், அலைப்பான் - வருந்துவோன், ஏற்றார்க்கு - பிச்சை கேட்பவர்க்கு, இயைவ - தன்னால் கொடுக்கக்கூடிய பொருள்களை, கரப்பான் - கொடுக்காமல் ஒளிப்பவன், கூற்றம் - யமன், நிரயம் - நரகம்.

5. கைப்பு - கசக்கும் பொருள், கட்டி - வெல்லம்.

2. கேள்விகள்

1. அரசனுக்கு உறுதுணையாவார் யார்?
2. நட்பின் அளவு எங்கு விளங்கும்?
3. செல்வம் அழிக்கும் படைகள் எவை?
4. நரகத்தில் வாழ்பவர் யார்?
5. மெய்ப்பொருள் அறிய வல்லார் யார்?

---

6. நீதிநெறி விளக்கம்

கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூல மறிந்து விளைவறிந்து—மேலுந்தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்து
ஆள்வினை ஆளப் படும். (1)

இகழி னிகழ்ந்தாங் கிறைமக னென்று
புகழினு மொக்கப் புகழ்ப—இகல்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யும்
நீர்வழிப் பட்ட புணை? (2)

சிறிய பகையெனினும் ஓம்புதல் தேற்றார்
பெரிதும் பிழைபா டுடையர்—நிறைகயத்(து)
ஆழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது. (3)

இனியவர் என்சொலினு மின்சொல்லே இன்னார்
கனியு மொழியுங் கடுவே—அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும் மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும். (4)

பெற்ற சிறுகப் பெறுத பெரிதுள்ளும்
சிற்றுயிர்க் காக்கம் அரிதம்மா!—முற்றும்
வரவர வாய்மடுத்து வல்விராய் மாய
எரிதழல் மாயா திரா. (5)

—குமரகுருபரர்

1. அரும்பதவுரை

நீதிநெறி விளக்கம்-நீதியாகிய நெறியை விளக்கிக் கூறும் செய்யுட்களைக் கொண்ட ஒரு நூல்.

1. செய்வினை - செய்யும் செயல், விளைவு - பயன், சூழ்வன - ஆராய்வன.

2. இறைமகன் - அரசன், மன்பதை - குடிமக்கள், புணை- தெப்பம்.

3. ஓம்புதல் - காத்துக் கொள்ளல், தேற்றார் - தெரியாதவர், கயம் - குளம், மடு - ஆழ்ந்த இடம், காண்பு-காணுதல் (தொழிற் பெயர்).

4. கனியும் - கனிவோடு பேசும், கடு - விஷம், வெய்து - வெப்பம் உள்ளது, சிங்கி - பாஷாணம்.

5. பெற்ற - பெற்ற பொருள்கள், சிறுக - சிறியவையாக, பெரிது - பெரிய பொருள்கள், ஆக்கம் - செல்வ வாழ்வின் சிறப்பு, வாய்மடுத்து - விழுங்கி, விராய் - விறகு, தழல்-நெருப்பு.

2. கேள்விகள்

1. ஆள்வினை எங்ஙனம் தொடங்கப்படும்?
2. தெப்பம் எவர்க்கு நிகர்? எதனால்?
3. தவளையும் யானையும் எவர்க்கு உவமை?
4. வெங்காரமும் சிங்கியும் எவற்றுக்கு நிகர்?
5. விறகை விழுங்கும் நெருப்பு எவர்க்கு நிகர்?

II. கதைச் செய்யுட்கள்

1. சிங்கமும் எருதுகளும்

எருதுகள் நான்கொரு காட்டி லிளம்பயிர்
இன்புற மேய்ந்தனவே;—அவை
வருவது கண்டவோர் சிங்க மவற்றை
மடக்க நினைத்ததுவே. (1)

சிங்க மொருநாள் எருதுகள் முன்பு
சினத்தொடு நின்றுகொண்டே,—'பசி
பொங்கு மெனக்குத் தகுந்த வுணவாய்ப்
பொருந்து மென்னவரவே, (2)

எருதுகள் நான்கு மெதிர்த்தே அதனொடும்
ஏற்றபடி கொம்பினால்—முட்டிக்
கருதிய வண்ணம் அதுசெல வொட்டாது
காத்தன தம்மையன்றே. (3)

'ஒற்றுமை யாலே இவைகள் பிழைத்தன
ஒற்றுமை கெட்டதென்றால்,—இவை
மற்றொரு நாளி லெனக்கெதிர் மாண்டென்
வயிற்றை நிரப்பிடுமே.' (4)

என்னவே எண்ணிய சிங்க மிரவிலே
ஏகி நரியினிடம்—'அப்பா!
மன்னவன் நான்சொலும் வண்ண மியற்றுவாய்
மந்திரி நீ' யெனவே. (5)

என்றது மந்நரி 'மன்னனே! காட்டினில்
யான்செயத் தக்கதென்ன?—சொல்லின்
இன்றது செய்து முடித்த பிறகன்றோ
என்பெயர் குள்ளநரி.' (6)

என்று மொழிந்த நரிக்கந்தச் சிங்கம்
எருதுகள் ஒற்றுமையால்—தன்னை
வென்ற கதையை விளம்பி வருந்தியே
மேல்மூச்சு விட்டதுவே. (7)

'ஐயோ, எருதுகள் அச்சமில் லாமல்
அரசை யெதிர்த்தனவா ?—நான்
மெய்யாய் அவற்றைப் பிரிப்ப னெ'னவே
விளம்பியது நரியே. (8)

நரியு மெருதுகள் மேயு மிடத்தில்
நடந்தொரு தந்திரத்தால்—அவை
பிரியும் வகைசெய்து சிங்கத்துக் கந்தப்
பிரிவினைச் சொல்லியதே. (9)

சிங்கமு மந்திரி குள்ளநரி சொன்ன
செய்தியைக் கேட்டலுமே,—விரைந்து
அங்குப் புகுந்தே யெருதுகள் தம்மை
அடித்து விழுங்கியதே. (10)

ஒற்றுமை கெட்டதாற் காளைகள் நான்கும்
உயிரை இழந்தனவே—முனம்
ஒற்றுமை யுள்ளபோ தங்கவை சிங்கத்தை
ஓட அடித்தனவே. (11)

சிறுதுரும் பாயினும் சேர்ந்தே யிருப்பதாற்
செய்யும் பலசெயல்கள்—துன்பம்
உறுவன யாவையும் ஒற்றுமை யாலே
ஒழித்துநாம் வென்றிடலாம். (12)

1. அரும்பதவுரை

மடக்க- அடித்துக்கொல்ல, வயிற்றை நிரப்பும் - இரை ஆகும், உறுவன - வருவன. (இன்று + அது = இன்றது).

2. கேள்விகள்

1. இக்கதையைச் சுருக்கிக் கூறு.
2. நரி என்ன தந்திரம் செய்திருக்கும் ?
3. எருதுகள் முன்பு வெற்றியும் பின்பு மரணமும் அடைந்தமை ஏன் ?
4. இக்கதையால் விளங்கும் நீதி என்ன ?
5. 'என் பெயர் குள்ளநரி' என்று நரி எப்பொழுது கூறியது ? எதற்காக ?

---

2. சிங்கமும் சுண்டெலியும்

காட்டிலே தன்குகை யுள்ளே—அந்தக்
காட்டர சாகிய சிங்க முறங்க
நீட்டியே படுத்தது கண்டே—ஒன்றும்
நேரில் வராமல் மறைந்தன அன்றே. (1)
சுண்டெலி ஒன்றங்கு வந்தே—நன்கு
தூங்கிய சிங்கத்தின் முதுகினி லேறிச்
சுண்டெலி தன்குணம் காட்டி—சிங்கம்
தூக்கம் கலையவே துன்பங்கள் செய்ய, (2)
விழித்தது சினத்தொடு சிங்கம்—'அடா!
வீணிலென் தூக்கத்தை யேனோ கலைத்தாய் ?
அழித்துனைக் கசக்கிப் பிழிவேன்—என்னை
ஆரென எண்ணினாய்? அற்பப் பயலே !' (3)

என்று முழங்கவும் எலிதான்—'ஐயோ,
ஏழையென் மீதிலேன் இத்தனை கோபம்?
என்றுமே நானுமக் கடிமை—இன்று
என்னைக் கொல்லாமல் இரங்குவீர் ஐயா! (4)

பாரும்நீர் என்சிறு வுருவம்—உம்
பசிக்குநான் பயனில்லை; பயமிகக் கொண்டேன்;
தீருமென் நடுக்கத்தை மன்னு!—உம்
திசைக்குநான் வணக்கங்கள் செய்தனன் போவேன். (5)

அன்றியும் சிறியவன் யானே;—உமக்
கான வுதவிகள் என்றேனும் செய்வேன்;
கொன்று பயன்பெற மாட்டீர்—உம்மைக்
கும்பிட்டேன் உயிர்ப்பிச்சை கொடுத்தருள் வீரே'. (6)

என்றது கேட்ட அச்சிங்கம்—சிரித்து
எலியினை விட்டதே யேகுவா யென்றே.
சென்றன நாள்கள் பலவே—இரை
தேடியே சிங்கம் திரிந்தது காட்டில். (7)

உறுதியாய் நின்றவோர் வலையில்—சிங்கம்
ஒருநாள் அகப்பட்ட துள்ளம் கலங்க;
சிறியசுண் டெலியது தெரிந்தே—வந்து
சிங்கத்தைக் கட்டிய வலையின்மே லேறி, (8)

தன்சிறு பற்களாற் கடித்தே—முன்பு
தன்னுயிர் தந்த தருமத்தை யெண்ணி
வன்மைகொள் சிங்கத்தை யன்று—தக்க
வகையுற விடுவிக்க வழிசெய்த தன்றே. (9)

சிங்கமச் செயலினைக் கண்டே—'பண்டு
செய்த வுதவிக்குச் சிறியசுண் டெலிதான்
இங்கொரு நன்மையைச் செய்தே—என்னை
எளிதிலே காத்த திதன்செயல் பெரிதே.' (10)

என்ன நினைத்தது குகைக்கே—மகிழ்ந்து
ஏகியவ் வெலியினை இன்புடன் கூடி
நன்னய மாகவே வாழ்ந்து—சிறு
நன்மையும் போற்றி நலம்பெற்ற தன்றே. (11)
உண்மையில் நாம்பிறர்க் குதவி—சிறிது
உற்ற இடத்திலே செய்திருப் போமேல்
திண்மையாய் அவர்நமக் கொருநாள்—நலம்
செய்வ துறுதியே தெரிந்துகொள் வோமே. (12)

1. அரும்பதவுரை

காட்டரசு - காட்டில் வாழும் மிருகங்களின் அரசன், ஆர் - யார்? ஏகுவாய் - போவாய், இரை - உணவு, பண்டு - முன்பு. இன்பு - இன்பம். உற்றவிடம் - ஆபத்து வந்த சமயம்.

2. கேள்விகள்

1. எலியின்மேல் சிங்கம் சினம் கொண்டது ஏன்?
2. சுண்டெலி தன்னை எவ்வாறு காத்துக்கொண்டது?
3. சிங்கத்துக்குச் சுண்டெலி செய்த உதவி யாது?

III. பலவகைச் செய்யுட்கள்

கற்றோர்முன் மற்றவர்

காணமல் வேணதெல்லாம் கத்தலாம் கற்றோர்முன்
கோணமல் வாய்திறக்கக் கூடாதே—நாணமல்
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச் சென்னும் கிளி. (1)

உத்தமர், மத்திமர், அதமர் கொடைக்குணம்

சொல்லாம லேபெரியர் சொல்லிச்செய் வார்சிறியர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய்! கூறுவமை நாடிற்
பலாமாவைப் பாதிரியைப் பார். (2)

அன்போடு இட்ட விருந்து

வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும்—திறமுடனே
புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந் திட்டசோ
றெல்லா வுலகும் பெறும். (3)

கல்விக்கு எல்லை இன்மை

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிருள்—மெத்த
வெறும்பந்த யங்கூற வேண்டாம் ; புலவீர் !
எறும்புந்தன் கையாலெண் சாண். (4)

நாலு கோடி கவி

மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி யுறும். (5)

உண்ணீருண் ணீரென்றே யூட்டாதார் தம்மனையில்
உண்ணாமை கோடி யுறும். (6)

கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி யுறும். (7)

கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி யுறும். (8)

இனியது

இனியது கேட்கிற் றனிநெடு வேலோய் !
இனிது இனிது ஏகாந்த மினிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள் ளோரைக்
கனவினு நனவினுங் காண்பது தானே. (9)

நாற்பொருட் பேறு

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு. (10)

—ஔவையார்

தமிழ்த்தாய் வணக்கம்

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்(கு) எழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்,
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமும்துளுவும்
உன்உதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்,
ஆரியம்போல் உலகவழக்(கு) அழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

—சுந்தரம் பிள்ளை

1. அரும்பதவுரை

1. வேணது - மனத்தில் தோன்றியபடி, நாண் - வெட்கம்.

2. கயவர் - மூடர், குலாமாலை - விளங்குகின்ற மாலை, பலா பூவாது காய்க்கும், மா பூத்துக் காய்க்கும், பாதிரி பூத்தும் காயாது.

3. வழுதுணங்காய் - கத்தரிக்காய், வாட்டு - வற்றல், முர முரப்பு - தூய்மை, அருவருப்புக்கிடமின்மை.

4. கலைமடந்தை - சரஸ்வதி, எண்சாண் - அவரவர்க்கு அவரவர் உடம்பின் அளவு எட்டுச்சாணே.

5. முற்றம் - வாயில், மிதியாமை - போகாமை.

6. உண்ணீர் - உண்ணுங்கள், ஊட்டாதார் - அன்போடு உணவு இடாதவர், மனை - வீடு.

7. குடிப்பிறந்தார் - நல்ல குடியிலே பிறந்தவர்.

8. கோடானுகோடி - பல கோடி பணம், நாக்கோடாமை - நாவால் தவறு சொல்லாமை.

9. ஏகாந்தம் - தனிமை, ஆதி - கடவுள், நனவு - விழித்த நிலைமை. (கனவு × நனவு).

10. ஈட்டல் - தேடுதல், எஞ்ஞான்றும் - எப்பொழுதும், ஆதரவு - அன்பு, பரன் - கடவுள், பேரின்பம் - மோக்ஷ ஆனந்தம்.

11. தமிழ்த்தாய்க்குக் கடல்-ஆடை, இந்தியா - முகம், தெக்கணம் - நெற்றி, தமிழ்நாடு - பொட்டு, தமிழ்மொழி - பொட்டில் உள்ள வாசனை.

12. அளித்து - காத்து, துடைத்தல் - அழித்தல், எல்லையறு - முடிவு இல்லாத, களி - மகிழ்ச்சி, கவின் - அழகு, உதரம் - வயிறு, ஆரியம் - சமஸ்கிருதம், இளமைத் திறம் - கன்னித் தன்மை.

2. கேள்விகள்

1. கிளி கற்பிக்கும் நீதி யாது?
2. கல்விக்கு எல்லை இல்லை என்பதை விளக்கு.
3. இனியது எது?
4. நாற்பொருள்களையும் சுருக்கிக் கூறு.
5. தமிழ்த்தாய்க்கு முகம் முதலியன யாவை?
6. 'உன் சீரிளமைத் திறம்'—என்றது யாது?

The B. N. Press, Mount Road, Madras.